விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-3343)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 25 ஞாயிற்றுக்கிழமை (10.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 022

# புதிய அரசியல் யாப்பு உருவாக்க பணி ஆரம்பம்

## யாப்பு உருவாக்க சபையாக நாடாளுமன்றம்

(கொழும்பு)

**தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்திக் கொள்வதற்கான புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த அரசியல் யாப்பை உருவாக்கும் பணியில் நாடாளுமன்றத்தை அரசியல் யாப்பு உருவாக்க சபையாக மாற்றும் தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது.**

நாடாளுமன்றத்தை அரசியல் யாப்பு உருவாக்கச் சபையாக இயங்கச் செய்வதற்கான தீர்மானத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைத்துள்ளார்.

இதன்படி, சபாநாயகரின் தலைமையில் அரசியல்யாப்பு உருவாக்கச் சபை அமைக்கப்படவுள்ளது.

15 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ்க் கட்சிகளை சந்திப்பாரா ஜெய்?



(கொழும்பு)

கொழும்புக்கு நாளை மறுதினம 12ஆம் திகதி வரவுள்ள இந்திய

15 ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.எஸ் அமைப்பில் 50 இலங்கையர்கள்

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் 50 இலங்கையர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் இணைந்து கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான சர்வதேச மையத்தின் தலைவர் பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவி

16 ஆம் பக்கம் பார்க்க....

## கிணற்றினுள் வீழ்ந்து குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றினுள் தவறுதலாக வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றிரவு 8.30 மணியளவில் அரியாலையில் இடம்பெற்றுள்ளது.


புங்கன்குளம் அரியாலையைச் சேர்ந்த சோமசுந்தரம் தேவராசா (வயது-50) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப நபர் தனது வீட்டுக்கி

15 ஆம் பக்கம் பார்க்க....

# அதிகாரம் அற்ற எந்த தீர்வையும் நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம்

## வருட இறுதிக்குள் தீர்வு கிடைக்கும் - சம்பந்தன்



(கொழும்பு)

தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு தீர்வைத் தரும் சபையாக பாராளுமன்றம் அமையவுள்ளதோடு தீர்வைத்தரும் ஆண்டாக இவ்வருடம் அமைய வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமாகிய இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இன்றைய அரசியல் சூழலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் என்ற விடயங்கள் தொடர்பில் மக்க

15 ஆம் பக்கம் பார்க்க....

## மர்மமான முறையில் கடற்றொழிலாளி மரணம்

(யாழ்ப்பாணம்)

கடலுக்கு சென்ற மீனவர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

காரைநகர் களபூமியை சேர்ந்த குடும்பஸ்தரான சின்னப்பு ஆனந்தராஜா (வயது49) என்பவரே உயிரிழந்தவராவார்.

பொன்னாலை கடலில் இறால் பிடிப்பதற்கு செல்லும்போது கடற்கரையில் இருந்து ஒன்றரை கிலோ மீற்றர்கடலின்உள்ளேநடந்து சென்று

15 ஆம் பக்கம் பார்க்க....

## கைதிகள் விடுதலையில் அசமந்தம்

# ஜனாதிபதி, பிரதமருக்கு எதிராக யாழில் கறுப்புக்கொடி போர்!

(யாழ்ப்பாணம்)

தேசிய தைப்பொங்கல் நிகழ்வை கொண்டாடுவதற்கென எதிர்வரும் 15-ம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 13-ம் திகதி யாழ்.நகரில கறுப்புக்கொடி கட்டிய போராட்டத்தில வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் சிலரும் காணாமல் போனோர் மற்றும் அரசியல் கைதிகள் ஆகியோரது உறவுகளும் ஈடுபடவுள்ளனர்.

எதிர்வரும் 13-ம் திகதி காலை 10 மணியளவில் யாழ்.பிரதான பேருந்து தரிப்பிடம் முன்பாக நடை

15 ஆம் பக்கம் பார்க்க....

## ஊடகப் படுகொலை; விசாரணைக்கு வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் கொலை செய்யபட்ட ஊடகவியலாளர்கள் குறித்த வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.


ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவங்கள தொடர்பில விசாரணைகளை விரைவு படுத்தி

15 ஆம் பக்கம் பார்க்க....

## மன்னார் ஆயருடன் விக்கி சந்திப்பு

# உடல்நலம் குறித்து கேட்டறிவு



(மன்னார்)

வட மாகாண முதலமைச்சர், மன்னார் மறைமாவட்ட ஆயர் வண. இராசப்பு யோசப் அவர்களை நேற்று மன்னார் ஆயர் இல்லத்தில் சந்தித்து ஆயரது உடல்நிலை தொடர்பாக கேட்டறிந்தார்.

நேற்று மன்னார் எருக்கலம்பிட்டி பாடசாலையில் தொழில்நுட்பபீடத்தை திறந்து வைத்தபின் ஆயர் இல்லம்

15 ஆம் பக்கம் பார்க்க....

# ஹிருணிகா கைது



(கொழும்பு)

கொழும்பில் நேற்று சனிக்கிழமை காலை கைது செய்யப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர அன்றைய தினமே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள அவரது வீட்டில வைத்து குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் நேற்று காலை கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பி

15 ஆம் பக்கம் பார்க்க....

# செல்வாவின் ஒப்பந்தங்களை ஏற்றிருந்தால் பிரபாகரன் உருவாகி இருக்கமாட்டார்

## நாடாளுமன்ற சிறப்பு அமர்வில் ஜனாதிபதி உரை



(கொழும்பு)

டட்லி - செல்வா மற்றும் பண்டா - செல்வா ஒப்பந்தங்கள் அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் பிரபாகரன் என்று ஒருவர் உருவாகி இருக்கமாட்டார்.

இவ்வாறு நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வு நேற்று சனிக்கிழமை காலை ஆரம்பமான போது, நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்றும் பிரேரணையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த பின்னர் உரையாற்றிய போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் ஜனாதிபதி மைத திரிபால சிறிசேன தனதுரையில்

15 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### செல்வன் சுதாகரன் சங்கீர்த்தன்



அரும்பாக 1996.06.17

சருகாக 2015.11.27

கடந்த 27/11/2015 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விருட்சம் செல்வன் சுதாகரன் சங்கீர்த்தன் அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று 10/01/2016 நண்பகல் 12 மணியளவில் இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியில் உள்ள அவரது வீட்டில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்களது குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தயைகூர்ந்து இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.)

(3125)

பூவத்தோட்டம்,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.


## Yarl Beauty Academy

YARL BEAUTY ACADEMY

அழகுக்கலை பயிற்சிகள்

தைபொங்கலினை முன்னிட்டு 40% கட்டணக்கழிவில் புதிய பிரிவுகள் ஆரம்பம்

(C-3425)



- Certificate in Basic Beauty Courses (ஒரு மாத கால அழகுக்கலை) 4800/= மட்டுமே.
- Dip in Beauty Culture & Hair Dressing (மூன்று மாத கால டிப்ளோமா அழகுக்கலை)
- Certificate in Cake Icing (கேக் ஐசிங்)
- Tailoring Classes (தையல் பயிற்சி)

2016 தை 17ம், 18ம், 19ம், 20ம் திகதிகளில் முற்பகல் 10மணி முதல் ஆரம்பம்

வகுப்புகளில் சேரவிரும்புவோர் மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும். முற்பதிவு செய்யும் முதல் 10 மாணவர்களுக்கு Bouquet Making Free (பூச்செண்டு தயாரித்தல் பயிற்சி இலவசம்)

இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)


## தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

### கூறுவிலை கோரல்

வரணி வடிசாலையில் பொருத்தப்பட்டிருக்கும் பானை முறையிலான வடிகலன் தொகுதியை திருத்தம் செய்து கொள்வதற்காக பெறப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் பொறியியலாளர்களை (இத்துறை சார்ந்த தொழில் நுட்பவியலாளர்கள்) தெரிவு செய்து கொள்வதற்கான கூறுவிலை கோரப்படுகிறது.

இக்கூறுவிலையினை சமர்ப்பிக்க விரும்பும் தொழில்நுட்பவியலாளர்கள் அலுவலக நாட்களில் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மதிப்பீட்டறிக்கையில் குறிப்பிடப்பட்ட வேலைகளை செய்வதற்கான பெறுமதியை தலைவர், தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி வரணி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் 18.01.2016 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்,
க.துரைசிங்கம்.

(C-3427)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் கந்தசாமி (ATTORNEY - at - LAW JPUM)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கந்தசாமி (சட்டத்தரணியும் பதில் நீதவானும் - சாவகச்சேரி) அவர்கள் நேற்று முன்தினம் (08.01.2016) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - ஜெகசோதி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மினிதேவியின் அன்புக் கணவரும், மனோன்மணியின் சகோதரனும், பரமநாதனின் மைத்துனரும், நளினி (மாவட்ட நீதிபதி - அக்கரைப்பற்று), ஜானகி, அகிலன், சுகந்தன், விமலன், யமுனா ஆகியோரின் அன்புத் தந்தையும், கவிதா, தயாளன் ஆகியோரின் தாய் மாமனும், சிவலக்ஷ்மன், துஷித்தா, சுபாகரன் ஆகியோரின் மாமனாரும் அனுக்ஷனா, அக்ஷரன், வைஷ்ணவி, துளசிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் அவரது கந்தர்மட இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

35/10, 5-ம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

+94 21 222 7079.

தகவல் :
குடும்பத்தினர்

(3145)

# அரசியல் தீர்வுக்கு ஐ.நா.ஒத்துழைக்கத் தயார்!

## ஐ.நா.வதிவிட பிரதிநிதி உறுதி

(கொழும்பு)

**நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடிய அரசியல் தீர்வு காணும் முயற்சிகள், மீள்குடியேற்றம் மற்றும் காணிகள் விடுவிப்பு போன்ற அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க ஐக்கிய நாடுகள் சபை தயாராக இருப்பதாக இலங்கைக்கான ஐ.நாவின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி சுபினை நத்தி உறுதியளித்துள்ளார்.**

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரதான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

ஏனைய சர்வதேச நாடுகளுடன் இணைந்து ஐ.நா இலங்கைக்கு உதவி வழங்கும் என்றும்அவர்தெரிவித்தார்.

கடந்த ஒரு வருடத்தில் இலங்கை பாரிய மாற்றங்களைக் கண்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்தபோது நாட்டுக்கு பல உறுதிமொழிகளை வழங்கியிருந்தார் எனவும் தேர்தல் சரியான முறையில் நடத்துவது என்ற பாரிய சுமை அவருடைய தோள்களில் சுமத்தப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் நாட்டை மறுசீரமைப்பு பாதையில் முன்கொண்டு செல்லுமாறு மக்கள் ஆணை வழங்கியிருந்தனர்.

நீண்டகால சமாதானத்துக்கும், நல்லிணக்கத்திற்கும் அடித்தளமிடுமாறு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

19ஆவது திருத்தச்சட்ட மூலத்தின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் குறைக்கப்பட்டதுடன், சுயாதீன ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம், உரிமைகளை பாதுகாத்து, நாட்டை ஜனநாயக ரீதியாக ஆட்சிசெய்வதற்கான திறமை அரசாங்கத்துக்கு உள்ளது என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

நல்லிணக்க செயற்பாட்டில் முன்நகர்ந்து செல்வதற்கும், காணிகளை விடுவித்து அவற்றை உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கடந்த 12 மாதங்களாக இலங்கை ஐக்கிய நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி கூறினார்.

ஆட்சிமாற்றம் ஏற்பட்டு ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு ஐ.நா.செயலாளர் நாயகம் விடுத்திருக்கும் அறிக்கையில் முன்னேற்றகரமான செயற்பாடுகளைப் பாராட்டியிருந்ததுடன், இலங்கைக்கு தொடர்ந்தும் உதவி வழங்கத் தயார் என்ற விடயத்தைக் குறிப்பிட்டிருப்பதாகவும்சுபினை நத்தி தனது உரையில் சுட்டிக் காட்டியிருந்தார். (இ-7)

## மோசடிகள் குறித்து விசாரணை இல்லை

### கோத்தபாய கவலை

தாம், பாரிய ஊழல்களுக்கு எதிரான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அடிக்கடி அழைக்கப்படுகின்ற போதும் மோசடி தொடர்பில் இன்னும் விசாரணை செய்யப்படவில்லை என்று முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனவே இது ஒரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்

நேற்று முன்தினம் பல மணிநேரம் விசாரணை செய்யப்பட்ட தம்மிடம் ரக்னா லங்கா நிதி மோசடி தொடர்பில் எதுவும் கேட்கப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

தாம் நிதி மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்படுமாகவிருந்தால் தமது சொத்துக்களை சோதனை செய்யமுடியும்.

வங்கிக் கணக்குகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் ஆராயமுடியும். இதனை விடுத்து தாம் மோசடியில் ஈடுபட்டமையை எவ்வாறு நிரூபிப்பர் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

தாம் சட்டத்துக்கு உட்பட்ட விதத்திலேயே வருவாயை தேடிக் கொண்டதாக அவர் தெரிவித்தார்.

ரக்னா லங்கா நிறுவனம் மூலம் அரசாங்கத்துக்கே அதிக நன்மை கிடைத்ததாகவும் கோத்தபாய மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

### மதுபோதையில் கைதான ஐவருக்கு அபராதம் விதிப்பு

பொது இடத்தில் மதுபோதையில் நின்ற காரணத்திற்காக நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 6 பேரில் நால்வருக்கு தலா 6 ஆயிரம் ரூபா அபராதமும் ஒருவருக்கு சமூக நற்பணியுடன் 2 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அண்மையில் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஆறு பேரில் ஐந்து பேருக்கு எதிராக பருத்தித்துறை பதில் நீதிமன்ற நீதிபதி பா.சுப்பிரமணியம் நேற்று முன்தினம் மேற்படி தீர்ப்பளித்தார்.

இதேவேளை கைதான ஆறு பேரில் ஒருவர் குற்றச்சாட்டை ஏற்க மறுத்ததால் அவருக்கு எதிரான வழக்கு தொடர்ந்து இடம்பெறவுள்ளது. (இ-60)

## நிதிமோசடி; 21 இலங்கையர்க்கு இன்டர்போல் சிவப்பு எச்சரிக்கை

### 180 நாடுகளிடம் உதவி கோரியுள்ளது

(கொழும்பு)

நிதி மோசடியில் ஈடுபட்ட 21 இலங்கையர்களுக்கு இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸார் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நிதி மோசடியில் ஈடுபட்டு தலைமறைவாகியுள்ள குறித்த இலங்கையர்களை கைது செய்ய ஒத்துழைப்பு வழங்குமாறு இன்டர்போல் 180 நாடுகளிடம் கோரியுள்ளது.

இவ்வாறு தேடப்பட்டு வருவோர் பட்டியலில் ஆறு பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இந்த 21 பேரும் நாட்டைவிட்டு தப்பியோடி தலைமறைவாக வாழ்ந்து வருகின்றனர்.

சில நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் வர்த்தகர்கள் மூவர் ஆகியோரும் இதில் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## முகவர் நிலையம் சுற்றிவளைப்பு

(கொழும்பு)

இந்திய பெண்களை நாட்டிற்கு அழைத்துவந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

வாழைத்தோட்டம் பகுதியில் இயங்கிய வெளிநாட்டு முகவர் நிலையமொன்று நேற்று முன்தினம் மாலை சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதில் 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இதில் இருவர் பெண்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

முகவர் நிலையத்திலிருந்து 18 போலி விசா அனுமதிப்பத்திரங்கள். வெளிநாட்டு இறப்பர் முத்திரைகள் நான்கு. போலி கடவுச்சீட்டுகள் உட்பட விமானச்சீட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் 46.34.27 மற்றும் 26 வயதுடைய பாகிஸ்தான் மற்றும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. (இ-7)

## நல்லாட்சி அரசாங்கம் என்னதான் செய்தது?

### மகிந்த கேள்வி



கடந்த ஒரு வருட காலத்தினுள் நல்லாட்சி அரசாங்கம் என்ன செய்துள்ளது என்பது குறித்து கேள்வியெழுப்ப வேண்டியுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கண்டி தலதா மாளிகையில் வழிபாடுகளை மேற்கொண்டதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தபோது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இக்கேள்வியை முன்வைத்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் கடந்த ஒருவருட காலத்தினுள் நாட்டுக்காகவும். பொது மக்களுக்காகவும் என்ன செய்துள்ளது என்ற கேள்வி இன்று அனைத்து மக்கள் மனதிலும் எழுந்துள்ளது. இந்தக் கேள்வியை ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் தான் முன்வைக்க வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஒரு வருட நிறைவு விழாவில் கலந்து கொள்ளும்படி எனக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அதனை விட தலதா மாளிகை வழிபாடு போன்ற முக்கிய வேலைகள் எனக்கு இருந்த காரணத்தினால் நான் அவ்விழாவில் கலந்து கொள்ளவில்லை என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதியின் ஓராண்டு நிகழ்விற்கு மகிந்தவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதா என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவின் ஊடக பேச்சாளர் ரோஹணவிடம் வினவிய போது. தனக்கு தெரிந்தவரை அவ்வாறான அழைப்புகள் எதுவும் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை


| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா:13<br>உயரம்: 158CM<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5400 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 30<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ஆசிரியர்<br>தொ.இ: G/4032 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 37சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Bed/ஆசிரியர்<br>தொ.இ: B/455 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 79செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BSC/தனியார் தொழில் லண்டன் PR<br>தொ.இ: G/4034 |
| பிறப்பு: 1963 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 21<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/433 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 47செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4035 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 56<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: B/2873 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 48செவ் 7 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4040 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

## பிக் பாஷ் இருபது–20 தொடர்

# கெவின் பீட்டர்சன் அதிரடியில் மெல்போர்ன் ஸ்ரார்ஸ் வெற்றி





அவுஸ்திரேலியாவில் பிக் பாஷ் இருபது - 20 தொடர் நடைபெற்று வருகிறது நேற்று கெய்ல் இடம் பிடித்துள்ள மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணியும், கெவின் பீட்டர்சன் இடம்பெற்றுள்ள மெல்போர்ன் ஸ்ரார்ஸ் அணிகளும் மோதின .

நாணயச்சுழற்சியில் வென்ற மெல்போ்ன்ஸ்ரார்ஸ்அணி முதலில் களத்தடுப்பைத் தெர்வு செய்தது.

அதன்படி மெல்போர்ன் ரெனேகட்ஸ் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அந்த அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர கெய்ல் 21 பந்தில் 2 சிக்சருடன் 21 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார்.

மற்றொரு மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் வெயின் பிராவோ 37 பந்தில் 4 பவுண்டரிகள், 3 சிக்சர்களுடன் ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்கள் எடுக்க மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 155 ஓட்டங்கள் சேர்த்தது.

156 ஓட்டங்கள்எடுத்தால்வெற்றி என்ற இலக்குடன் மெல்போர்ன் ஸ்ரார்ஸ் அணி களம் இறங்கியது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஸ்டாயனிஸ் 13 ஓட்டங்கள் சேர்த்தார். அடுத்து வந்த கெவின் பீட்டர்சன் அதிரடியாக விளையாடினார்.

இவரது அதிரடியால் மெல்போர்ன் ஸ்ரார்ஸ் அணி 18 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 156 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

கெவின் பீட்டர்சன் 43 பந்தில் 5 பவுண்டரிகள், 3 சிக்சருடன் 67 ஓட்டங்கள் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். லூக் ரைட் 26 பந்தில் 37 ஓட்டங்கள் எடுத்தார். (க)


**அக்ஷயா அழகு கலை நிலையம்**

அழகுக்கலைப் பயிற்சி, இந்திய முறையிலான சாறி வுளவுஸ் கட்டிங்(6), பஞ்சாபி(4) அடிப்படையில் இருந்து தையல் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ✹ கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட பருக்கள், கடும்கறை, மஞ்சள் வெள்ளை, தறுப்பு புள்ளிகள் அகற்றும் கிறீம். ✹ கழுத்துக் கடும் கறுப்பு, கை, கால், கருமை நீக்கும் கிறீம் ✹ கண் கருவளையம் உதட்டுக் கருமை நீக்கும் கிறீம் ✹ உடல் எடை கூட்டும் குறைக்கும் குளிசை, பால்மா, கிறீம் ஒட்டிய கன்னங்களை குண்டு கன்னங்களாக மாற்றும் குளிசை ✹ இடுப்பு, கால், தொடை பாகங்கள் எடை குறைக்கும் கிறீம் ✹ முகத்தில் வளரும் தேவையற்ற முடி அகற்றும் கிறீம் ✹ மார்பழகு கூட்டும், குறைக்கும் கிறீம், குளிசை, சோப் ✹ தலைமுடி வளரச் செய்யும் ஆயுள் வேத எண்ணை, குளிசை, மேற்குறிப்பிடப்பட்டவை எம்மிடம் விற்பனைக்கு உண்டு. ✹ முகத்தில் உள்ள கருமை, கழுத்து கருப்பு ஒரே தடவையில் நீக்கும் பேசியல், முகம் மினுமினுப்பாக்கும் பேசியல், ஐப்றோ சேப், பேஸ் திரெட்டிங் செய்து கொள்ளலாம். அயனிங் பேர்மிங் செய்துகொள்ளலாம். றிச் கேக் (ஒன்று 55/=) ஐசிங் ஓடர் ஏற்றுக் கொள்ளப்படும்.

அக்ஷயா

221, நாவலர் வீதி, (பிறவுண் றோட் சந்தி, அருள் கொமினிகேசன் அருகில் - யாழ்ப்பாணம்)

077 21 06 155 (3148)



**வீடு வாடகைக்கு**

வெள்ளவத்தையில் 42 ஆவது வீதியில் 3 ஆம் இலக்க தொடர்மாடி இணைந்த குளியலறையுடன் கூடிய 2 அறை வீடு நாள்/ கிழமை/ மாத வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 837 8597 (2989)

**பணிப்பெண் தேவை**

கொழும்பிலுள்ள வீட்டில் தங்கியிருந்து வயோதிப தம்பதியினருக்கு சமையல் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு இல : 0778378597 (3147)


## இந்தியாவுக்கு எதிரான தொடர் சவாலாக இருக்கும் - லீமன்

இந்திய - அவுஸதிரேலிய அணிகளுக்கு இடையிலான 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரின் முதல் ஆட்டம் வரும் 12-ம் திகதி பெர்த்தில் நடைபெற உள்ளது. இந்திய தொடர் குறித்து ஆஸி. பயிற்சியாளர் டேரன் லீமன் அளித்த **பேட்டி:** இந்தியாவுக்கு எதிரான தொடர எப்போதும் போலவே கடும் சவாலாக இருக்கும். இளம் வீரர்களை கொண்ட இந்திய அணி நல்ல நிலையில் உள்ளது. ஒருநாள் போட்டிகளில் அவர்கள் சிறப்பாக விளையாடி வருகின்றனர். எங்களை பொறுத்தவரை தொடரை சிறப்பாக ஆரம்பிக்க வேண்டும்.

சமீப காலமாக நாங்கள் பெர்த்தில் ஆடவில்லை. அந்த பிட்சில பந்து நன்கு பவுன்ஸ் ஆகும் என்பதால் வேகப்பந்து வீச்சாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேணடும்.

ஜோன் சன், ஸ்டார்க் இல்லாவிட்டாலும் ஸ்கார்ட் போலண்ட், ஜோயல் பாரிஸ் போன்ற இளம் வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளனர்.

முதன்முறையாக சர்வதேச போட்டிகளில் ஆடும் அவர்களுக்கு நெருக்கடி இருந்தாலும் இந்த வாய்ப்பை நன்கு பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். (க)


**பிறந்தநாள் நினைவஞ்சலி**

திரு. தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சர்)



அகவைகள் ஐம்பது ஆகியும்
அள்ளி வீசும் நறுமணம் போல
உங்கள் நினைவுகள் எங்கள்
மனதில் நீங்காமல் நிலைக்கின்றன

மண்ணுக்குள் நீங்கள் உறங்கிய போதும்
உறங்கவில்லை தமிழனுக்காய்
நீங்கள் கொடுத்த குரல் ஓசை
இன்று நடக்கும் அரசியல்
அறுவடைக்கு நீங்கள் தான் நட்டீர்கள்
நாற்றுக்களை

உங்கள் ஒலிக்கு இசைந்தாள்
இனிமேல் இயற்கையும்
கொடுக்கும் சுகந்திரக் காற்றினை

ஆக்கம்
நி.கவியழகன்

(C-3429)

மஞ்சத்தடி, இணுவில்.

இணுவையூர் K.K குகானந்தன்
தலைவர்
ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையம்



**சமையல் உதவியாளர் தேவை**

சிற்றுண்டிச்சாலைக்கு உணவுகளை தயாரிக்க (வீட்டில்) பெண் சமையல் உதவியாளர் தேவை.

இடம் : கொக்குவில்

தொடர்புகளுக்கு : 077 276 1161
0777 314 348

(3151)

**தொழில்வாய்ப்பு**

உதவித் தாதி பயிற்சி பெற்றவர்களும் பயிற்சி பெற விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.

T.P : 0778730129 (C-3431)

**தேவை**

யாழ்ப்பாணத்தில் உயர்தர சலூன் ஒன்றுக்கு சகல வேலைகளும் தெரிந்த ஆண்+பெண் (BEAUTICIAN - MALE, FEMALE) உடனடியாக தேவை.

தொடர்புக்கு : 0767593357 (3136)

**காணி விற்பனைக்கு**

A9 வீதி நுணாவில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் பருத்தித்துறை வீதியில் துர்க்கை அம்மன் கோவில் பாதை ஆரம்பத்தில் 27 பரப்புக் காணியும் உடைந்த வீடு கிணற்றுடனும் 07 பரப்பு மற்றும் 03 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0778730129 (C-3431)



**LED BULB** Plastic Bulb — Wholesale Only! 3W Rs. 35/=

Assembled in China Complete sets with box (Not parts)

SUNDAY & POYA DAY OPEN 365 Days

MINIMUM ORDER 50 PCS

| LED Bulb | 6 M Warranty | No Warranty |
|---|---|---|
| 3W | 52/- | 40/- |
| 5W | 78/- | 60/- |
| 7W | 104/- | 80/- |
| 9W | 117/- | 90/- |
| 12W | 137/- | 105/- |
| 15W | 169/- | 130/- |

Low Price MINIMUM ORDER 50 PCS

| LED Bulb | 6 M Warranty | No Warranty |
|---|---|---|
| 3W | 46/- | 35/- |
| 5W | 72/- | 55/- |
| 7W | 85/- | 65/- |
| 9W | 98/- | 75/- |
| 12W | 111/- | 85/- |
| 15W | 137/- | 105/- |

SMART Electronics (Pvt) Ltd

No.184 A, Dam Street, Colombo 12.
Tel: 0727649245
Website : smartelectronics.lk

(3140) max adz

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603
021 567 1532

விளம்பரத் தொடர்புகளுக்கு
Valampuriiadd@sltnet.lk
0212217603
0213210815

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகாமையில் A-9 வீதியில் 3 1/2 பரப்பு காணி விற்பனைக்கு. அரியாலை நாவலடியில் முன்பிருந்த இராணுவ முகாமிற்கு முன்பாக 22 1/2 பரப்புவயல்காணியும்விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:-077 181 1638 (3129)

## பட்டம் விடும் போட்டி

ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய அறநெறி மாணவர்களின் பட்டம் விடும் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று இடம்பெறும். பட்டம் விடும் போட்டி ஆலய வடக்கு வீதியிலும் பரிசளிப்பு விழா ஆலயபூங்காவனமண்டபத்திலும்நடைபெறும்.

சிறுவர்களை ஊக்குவிக்க பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ

## மணிவிழா நாயகியை மனமார வாழ்த்துகிறோம்



### திருமதி இன்பவதி விஜயரட்ணம்

தனது 26 வருட ஆசிரியப்பணியை சிறப்புடனே வழங்கி நல்மாணாக்கரை உருவாக்க வழிசமைத்த எமது பாடசாலை ஆசிரியை **திருமதி இன்பவதி விஜயரட்ணம்** அவர்கள் தனது அறுபதாவது அகவையை பூர்த்தி செய்து ஓய்வுபெறும் இந்நாளில் இவரது எதிர்கால வாழ்வு ஒளிபெற எம் இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
மு/மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம்.

(சி-3415)

BLOOMING BUDS
The Wisdom of Children

# BLOOMING BUDS ISLAND BEST CAMPUS

PV 94034

## ENGLISH MEDIUM TEACHER TRAINING DIPLOMA PROGRAMME
பயிற்சியின் மூலம் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளல்

## 12 Months

### தகைமைகள்

- க.பொ.த சாதாரண தரம் 6 பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவர்களிற்கு 60 நாட்களிற்கு ஆங்கிலப்பயிற்சி. கொடுக்கப்படும்
- பயிற்சி கிழமையில் 5 நாட்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களிற்குக் கொடுக்கப்படும.
- பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்தப்படுவீர்கள்.
- போயாதினம் உட்பட அரசாங்கவிடுமுறை தவிர ஏனைய நாட்கள் காலை 8.30- 5.00வரை வேலை நாட்களாகும்.

### மேலதிகமாக

சிங்களக் கல்வி மற்றும் கனணி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா , சிங்கள டிபளோமா (பேசும் ஆங்கிலம் அடங்கியது) ஆங்கில இலக்கிய டிப்ளோமா , சுயதிறன் விருத்தி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக்கப்படும்

ஐந்து வருடங்களாய் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக பயிலுனர் ஆசிரியர்களை பயிற்றுவித்து எமது நிறுவனம் நாடெங்கிலும் ஆங்கிலம் கற்றலிலும் கற்பித்தலிலும் பேசுவதிலும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் குறைப்பாடுகள் நிவர்த்திசெய்யும் முகமாக எல்லா மாகாணங்களிலும் எங்களது 45 புதிய நிறுவனங்களுக்கு 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள முன் வந்துள்ளோம்

பயிற்சியின் பின்னர் மாதாந்தக் கட்டணம் 34,000 ஐ சம்பளமாகக் கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்

கற்கை நெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிகடன் ஏற்பாடு செய்து தரப்படும்
(நிபந்தனைக்கு உட்பட்டது )

உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சி பத்திரம் தராதரப்பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் (9x4) அளவுள்ள தபாலுறையில் 45.00 மேல் மூலையில் 01-11 ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும்.

பதிவுத்தபாலில் அனுப்பவேண்டிய முகவரி
officer.
Blooming Buds International Teacher Training School
Thavadi Rd, Suthumalai south
Manipay

No-5 Rathmale ,
Colombo Road, Puttalam
Tel:- 0771-529731

No.390/2/1, Baseline Road
Dematagoda
Colombo- 9 . T.P :0113 054641
071-5669641,077-1529731

Thavadi Road
Suthumalai South
Manipay
Jaffna
021 225 6641. 071 566 9641

(சி-3418)

## இராசி பலன்

10.01.2016
(மார்கழி 25, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு,
அமாவாசை காலை 8.15 மணிவரை
பூராடம் முற்பகல் 11.03 மணிவரை
இராகுகாலம் 5.03-6.33 மணிவரை
சுபநேரம் 9.33-11.03 மணிவரை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மிருகசீரிடம்<br>திருவாதிரை<br>மாலை 4.28இற்கு<br>மகர-சந் | | |
| | | | ராகு |
| சூரி சந் | சனி சுக் | செவ் | குரு |

வளவன்

**மீனம்**: உங்களின் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், புதிய வாய்ப்புக்கள் தேடி வரலாம்.

**மேடம்**: நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், பொதுக்காரியங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்**: பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், திருடர் பயமுண்டு.

**மிதுனம்**: பழைய சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை கூடும், புதிய அலங்காரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கும்பம்**: நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன நன்மையுண்டு.

**கடகம்**: குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு, உறவினர்ளும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மகரம்**: உறவினர்களின் சுப காரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இறை வழிபாட்டுச் சிந்தனை உருவாகும், மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்.

**சிம்மம்**: வியாபார நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிள்ளைகளின் முன்னேற்றம் கருதிய செலவுகள் இடம்பெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**தனுசு**: அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், கூட்டாளிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்**: செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்**: சுற்றத்தாரின் வரவால் சுகம் கூடும் நாள், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், போசன சுகமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கன்னி**: மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

# வெடிபொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் படுகாயம்

(தண்ணீரூற்று)

புதுக்குடியிருப்பு வெள்ள முள்ளி வாய்க்கால் பகுதியில் தீ மூட்டப்பட்ட குப்பையினுள் இருந்தவெடிபொருள் ஒன்று வெடித்துச் சிதறியத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உடல் முழுவதும் படுகாயம் அடைந்த நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை அரசினர் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 12.50மணியளவில் முள்ளிவாய்க்கால் குருந்தடி பிள்ளையார் கோவிலுக்கு எதிராகவுள்ள வீடொன்றில் நடைபெற்றுள்ளது.

இதில் புதுக்குடியிருப்பு மக்கள் வங்கியில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றும் தம்பையா ஸ்ரீகாந்தன் (வயது-54) என்ற ஒரு பிள்ளையின் தந்தையாரே படுகாயம் அடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பிரஸ்தாபநபர்வீட்டின்வளவினை கூட்டிகுப்பைகளுக்குதீமூட்டியவேளை திடீரென எரிக்கப்பட்ட குப்பையில் இருந்து பலத்த சத்தத்துடன் வெடி பொருள் ஒன்று வெடித்தது.

இதனையடுத்து வெடி பொருளின் சிதறல்களினால் உடல் முழுவதும் பாடுகாயம் அடைந்த நிலையில் மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் இது தொடர்பான தகவல் வெள்ள முள்ளி வாய்க்கால் கப்பல் துறை இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டது. மேற்படி வைத்தியசாலைக்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (2-292-28)

# செயற்கை கை தேவைப்படுவோர் உடனடியாக பதிவுகளை மேற்கொள்க

(கிளிநொச்சி)

அவுஸ்திரேலியா றோட்டறிக் கழகத்தின் அனுசரணையில் சர்வதேச றோட்டறிக்கழகத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் முழங்கைக்கு கீழ் கையை இழந்தவர்களுக்கு செயற்கைக்கைகளை வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக கை தேவைப்படுபவர்களின் விபரங்களைப் பெற்று செயற்கை கை வழங்கப்பட உள்ளது.

எனவே செயற்கை கை தேவைப்படுவோர் தமது பெயர், முகவரி, கிராம சேவகர் பிரிவு, கைத்தொலைபேசி இலக்கம்,பிறந்த திகதி. செயற்கை கை வலது புறமா இடது புறமா தேவை போன்ற விபரங்களை பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலரிடம் உடனடியாக பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் 021 321 5529 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)

## க.பொ.த(உ/த) 2015

யா/யாழ்ற்ரன் கல்லூரி

காரைநகர்

**கலைப்பிரிவு**

க.யசோதா- 2ஏபி
அ.சசிகலா - ஏ2சி
தி.செந்தூரன்- ஏபிசி
ச.சரவணபவன் - 2பிசி
தி.அம்பிகா -2பிசி
யோ.சௌமியா-2பிசி
ந.ஜெசிந்தா-பி2சி
யு.லோஜிகா- 3சி

**வர்த்தகப்பிரிவு**

அ.கஜன் - 2பிசி
ந.வராகன்-2சிஎஸ்
ம.பிரதாபன்-2சிஎஸ்

**கணிதப்பிரிவு**

செ.ஐஸ்வர்யா-சி2எஸ்
ச.சரவணன்-3எஸ்

# தனியார் வைத்தியசாலைகளில் நிபுணர்களின் கட்டணம் 2000 ரூபா

தனியார் வைத்தியசாலைகளில் மருத்துவ சோதனைகளை (செனலிங்) மேற்கொள்ளும் வைத்திய நிபுணர்களின் கட்டணத்தை ரூபா 2000 ஆக வரையறுப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நோயாளர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரிடமிருந்து கிடைத்த முறைபாடுகளை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தற்கமைய விசேட வைத்திய நிபுணர்களின் சேவையை பெற்றுக் கொள்ளும் நோயாளர்களிடமிருந்து வைத்தியரின் கட்டணமாக 250ரூபா தொடக்கம் 2 ஆயிரம் ரூபா வரை அறவிடப்படலாம்.

விசேட வைத்திய நிபுணர் கட்டணம் உட்பட அதற்குரிய வைத்தியசாலை கட்டணமாக 100 ரூபா தொடக்கம் 500 ரூபா வரை நோயாளியிடமிருந்து கட்டணமாக பெற்றுக் கொள்ள முடியும் என சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குப்படுத்தல் சபையின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் காந்தி ஆரியரத்தின தெரிவித்துள்ளார். இதற்கமைய எதிர்காலத்தில் விசேடத்துவ வைத்திய நிபுணரின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளும் நோயாளர், வைத்தியருக்கும் வைத்தியசாலைக்கும் செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 2 ஆயிரத்து 500 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு நோயாளியை பரிசோதனை செய்யும் கால எல்லை 10 நிமிடங்களாக இருக்க வேண்டும். அத்தோடு தனியார் மருத்துவ சோதனை நிலையங்களில் 33 விதமான மருத்துவ சோதனைகளுக்கான கட்டணங்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதற்கமையவே தனியார் மருத்துவ பரிசோதனை நிலையங்கள் கட்டணங்களை அறவிட வேண்டும் என்றும் அக் கட்டணங்கள் மக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# திருவாசகம் முற்றோதல்

புத்தூர் கிழக்கு தல்லுடை கன்னியர் வைரவர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7மணி முதல் திருவாசகம் முற்றோதல் நடைபெறும். நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை நடைபெற்று திருவாசகத்தின் பெருமை எனும் தலைப்பில் சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசனின் சொற்பொழிவு இடம்பெறும்.

இதேவேளை வலி.கிழக்கு சைவ சமய அருள்நெறி மன்றத்தால் நடத்தப்படும் திருவாசக முற்றோதல் இன்று 10ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8மணி முதல் கோப்பாய் வீரபத்திர கோவில் மண்டபத்தில் நடைபெறும். (இ-7)

# அபிவிருத்திக் கூட்டம்

வவுனியாவெங்கலசெட்டிக்குளம் பிரதேச அபிவிருத்திக் கூட்டம் நாளை மறுதினம் பிற்பகல் 2 மணிக்கு பிரதேச அபிவிருத்திக் குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கே.கே.மஸ்தான் தலைமையில் நடைபெறும். இக்கூட்டம் தொடர்பாக பிரதேச செயலாளரினால் சம்பந்தப்பட்ட சகலருக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச அபிவிருத்தி தொடர்பாக கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பல்வேறு திட்ட முன்மொழிவுகளை தாம் கோரி இருந்ததாக பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (2-303)

# மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

(குருமன்காடு)

வவுனியா நோர்த் மாஸ் மீடியா கல்லூரியில் கல்வி பயின்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று காலை 9 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நோர்த் மாஸ் மீடியா கல்லூரியின் பொது முகாமையாளரும் நிர்வாகியுமான நபிஸ் அபூதாகிர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் றிசாத் பதியுதன் கலந்து கொள்ளவுள்ளார்.


கௌரவ விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் கலந்து கொள்ளவுள்ளார்.

விசேட விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் றோகணபுஸ்பகுமார, வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா, வவுனியா பொலிஸ் பரிசோதகர் வசந்த விக்கிரமசிங்க, வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி.செ.அன்ரன் சோமராஜா, வவுனியா தெற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.வரதகுமார், வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், வவுனியா நகர சபைச்செயலாளர் ரி.தர்மேந்திரா, கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சின் பொதுசன தொடர்பாடல் உத்தியோகத்தர் எம்.முகைதீன், கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சின் இணைப்புச் செயலாளர் எம்.ஜ.முத்துமுகமட், ஐக்கியதேசிய கட்சியின் வன்னி மாவட்ட பெண்கள் குழு செயலாளர் ரி.கனகாம்பிகை, முஸ்லிம் மகா வித்தியாலய பிரதி அதிபர் எஸ். அப்துல்சமட், வன்னி புனர்வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த ஜே.அருள்ராஜ், வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தலைவர் என். பிரபாகரக்குருக்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)

# வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அரசாங்கம் பலத்தை வழங்கியுள்ளது

## விமல் வீரவன்ச பதற்றம்



வடிகானை சுத்தம் செய்யுமாறு இராணுவத்தினருக்கு கூறும் அளவிற்கு வட மாகாண முதலமைச்சருக்கு நல்லாட்சி அரசாங்கம் பலத்தை வழங்கியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச குற்றஞ் சாட்டியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டு நேற்று முன்தினத்துடன் ஒராண்டு பூர்த்தி அடைகின்ற நிலையில், தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய விமல் வீரவன்ச, நல்லாட்சியினர் பிரிவினை வாதத்திற்கு பலத்தை வழங்கியுள்ளனர்.

சிவாபசுபதி இலங்கைக்கு வருகைதந்து புதிய அரசியலமைப்பை உருவாக்குவதில் தலையீடு செய்வதற்கான சந்தர்ப்பதை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். புலிகளின் சின்னம் உள்ளிட்ட உடையை அணிந்து வடக்கில் இருக்க கூடியவாறு சூழல் உருவாகியுள்ளது.

நாட்டை பாதுகாத்த இராணுவததினரை வடக்கில் வடிகாலை சுத்தப்படுத்துமாறு கூறுகின்ற அளவிற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு பலம் கிடைத்துள்ளது.

பிரிவினைவாதம், இனவாதம் கடும்போக்குவாத குழுக்கள் இந்த வருடத்தில் பலம் பெற்றுள்ளன. சூரூஸ் என்பவர் உலகில் உள்ள நிதி மோசடியாளர். பல நாடுகளின் கறுப்புபட்டியலில் உள்ளடக்கப்பட்ட நிதி மோசடியாளர்.

அவரை சுற்றுலா பயணியாக கூட நாட்டிற்குள் அனுமதிக்க வேண்டாம் என மலேஷியா அறிவித்துள்ளது. நாடுகள் பலவற்றை கீழ் நிலைக்கு கொண்டு சென்றவர் சூரூஸ்.

ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள நிதி மோசடியாளர் இவர். அந்த நிதி மோசடியாளரை தான் இன்று பொருளாதார பின்னடைவை இல்லாது செய்யும் பெரிய தேவ தூதராக நல்லாடசி அரசாங்கம் நியமித்துள்ளது.

இந்த அரசாங்கம் செல்லக் கூடிய பயணம் ஒன்று இல்லை என்பது இதன்மூலமே தெரிகின்றது.


பொய்யான விசேட உரைகள் மூலமும் கதைகள் மூலமும் இந்த நாட்டு மக்களை திருப்திப்படுத்துவதன் மூலம் அவர்களின் வயிற்றை நிரப்ப முடியும் என இவர்கள் நினைக்கின்றனர் என மேலும் தெரிவித்தார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 120-160 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 55 | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 220 | 300 | 300 | 300 |
| தக்காளி | 70 | 60 | 60 | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 100 | 100 | 90 | 140 | 120 | 100 |
| கரட் | 160 | 180 | 180 | 200-300 | 240 | 200 |
| பூசணி | 40 | 50 | 40 | 60 | 60 | 50 |
| புடோல் | 100 | 80 | 70 | 60 | 100 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 120 | 120 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 65 | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 150 | 120 | 150 | 160-200 | 300 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 180 | 80 | 100-140 | 160 | 180 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 70 | 80 | 100 | 60 |
| பயற்றங்காய் | 160-240 | 200 | 130 | 180 | 160 | 200 |
| லீக்ஸ் | 120 | 150 | 120 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | — | 200 | — | — | — | — |
| கறிமிளகாய் | — | 300 | 250 | 300 | 400 | 400 |
| முருங்கைக்காய் | — | — | — | — | — | — |
| போஞ்சி | — | 250 | 200 | 240 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | — | 80 | — | — | 100 | — |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 30 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 100 | 80 | 60 | 120 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40 | 30-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 120 | 180 | 100 | 140 | 160 | 100 |
| வெங்காயப்பூ | 200 | 200 | — | 240 | — | 300 |
| முள்ளங்கி | 60 | 60 | 40 | 60 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 30 | 10 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 10 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | 40 | 40 | — | 80 | 80 |

## ஜனாதிபதியின் பொது மன்னிப்பில்

# விடுதலையான முன்னாள் போராளி மாணவன் செந்தூரனுக்கு அஞ்சலி



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்று முன்தினம் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்ட அரசியல் கைதியான சிவராசா ஜெனீவன், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி உயிர்நீத்த கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் செந்தூரனின் வீட்டுக்கு சென்று செந்தூரனின் உருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தியதோடு, பெற்றோர்களுடன் கலந்துரையாடி இருந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை படுகொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு 10 வருடங்கள் சிறை தண்டணை விதிக்கப்பட்டிருந்த நிலையில் நல்லாட்சி அரசாங்கத்தின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு நேற்று முன்தினம் ஜனாதிபதயினால் இவர் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்த ஜெனீவன் கோப்பாய் பகுதியில் உள்ள செந்தூரனின் வீட்டுக்கு சென்று செந்தூரனின் பெற்றோருடன் கலந்துரையாடினார். அதன் பின்னர் செந்தூரனின் 45ஆம் நாள் நினைவு தினம் நேற்று நடைபெற்ற நிலையில் செந்தூரனின் உருவப்படத்திற்கு அஞ்சலிகளையும் செலுத்தினார்.

இதன் பின்னதாகவே யாழ்.அச்சுவேலி பகுதியில் உள்ள தனது வீட்டுக்கு சென்றிருந்தார். இதே வேளை உயிர்களை தியாகம் செய்து சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு பெற்றுக் கொடுக்கும் விடுதலை அவர்களை விடுதலைக்கு பின்னரும் குற்ற உணர்வுடன் வாழ வைக்கும் என ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்ட சிவராசா ஜெனீவன் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு நான் விடுதலை செய்யப்பட்டுள்ளேன். பல அரசியல் கைதிகள் சிறை வாழ்க்கை அனுபவிக்கின்றனர். இந்நிலையில் எமது விடுதலையை வலியுறுத்தி தனது உயிரை தியாகம் செய்த மானவனின் குடும்பத்தை நேரில் சந்திப்பதற்கு வந்துள்ளேன். இது எனது தனிப்பட்ட முடிவல்ல ஒட்டுமொத்த தமிழ் அரசியல் கைதிகளின் விருப்பம் நான் விடுதலையாகும் போது கட்டாயம் செந்தூரனின் வீட்டிற்கு செல்லவேண்டும் என்பதே. அதனை என்னிடம் கூறினார்கள். இவ்வாறான உயிர்த்தியாகங்களின் ஊடான சிறைமீட்பு சரியானதல்ல.

இதனால் நாம் விடுதலையாகியும் குற்ற உணர்ச்சியிலேயே எமது வாழ்வை கழிக்க வேண்டிவரும், எமது விடுதலைக்காக தனது உயிரினை மாய்த்துக் கொண்ட மாணவன் செந்தூரானுககு அஞ்சலியை செலுத்தி கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோகங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

**யாழ்.பிரதேசத்தில** சாரையடி, கிராமக்கோடு, பருத்தித்துறை நகரம், VM வீதி, கல்லூரிவீதி, தம்பசிட்டி, சாளம்பை, இரும்புமதவடி, சக்களாவத்தை, மடம் வீதி, வல்வியங்காடு இராமலிங்கம் சந்தி, கல்வியங்காடு ஆடியபாதம் வீதி, கோப்பாய் பொலிஸ் நிலையம், GPSறோட், பாற்பண்ணை, முடமாவடிகிளிகடைசந்தி, திருநெல்வேலிசந்தை, நாவாந்துறை, மீனாட்சிபுரம் வீதி, முத்தமிழ் வீதி, வில்லூன்றி, பண்ணைப்பிரதேசம், குருநகர் தொடர்மாடிகட்டடத் தொகுதி, டேவிட் வீதி (கடற்கரைவீதிசந்தி) கொன்வெண்ட் பிரதானவீதி, கடற்கரை வீதி (பளைய பூங்காவீதி சந்தி), கோணன் தோட்டம், வைத்திய சாலைவீதி, காங்கேசன்துறைவீதி சந்தியடி, கொட்டடிபழையமீன் சந்தை, 1 ஆம் குறுக்குத்தெரு, 2 ஆம் குறுக்குத்தெரு, வோட்டர் வேர்க்ஸ், பண்ணை இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், பிரதானதபால் அலுவலகம், பொது நூலகம், மாவட்ட நீதிமன்றம், குருநகர் ஐஸ் தொழிற்சாலை, ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சிப் பிரதேசத்தில** கனகராயன் குளம், பெரியகுளம், மன்னகுளம், புதூர், பரசங்குளம், ஜகோன், ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் முசலிப் பிரதேசம், பரிகாரிக்கண்டல், பூந்தீவுக்கண்டல், மடுக்கரை, புதுக்காமம், மருதமடு, பொன்னாச்சிக் குளம், மணற்குளம், மேதாவெளி, பொற்கேணி, கொக்குப்படையான், தம்பட்டமுசலி, மறிச்சுக்கட்டி, கூழாங்குளம், புதுவெளி, அரிப்பு நீர்ப்பாசன சபை, சிலாவத்துறை, CECB முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# யோகா கருத்துரையும் பயிற்சியும்

யாழ்.யோக அரங்க நிறுவனம் நடத்தும் யோகாக் கருத்துரையும் பயிற்சியும் நல்லூர் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யோகா ஆசான் எஸ்.உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யோகேந்திரன்-பிரசாத் **தியான-நுட்பங்கள்** என்னும் விடயம் பற்றியும் நா.நவராஜின் **வாழ்வியலில் யோகா** என்னும் தொனிப் பொருளிலும் கருத்துரையினையும் பயிற்சியையும் வழங்குவர்.

யோகா மாணவர்கள் பயன் அடையும் வகையில் இந் நிகழ்வு நடத்தப்படுகின்றது. புதிய யோகா பயிற்சிக்கான பதிவுகளையும் மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)


1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ். கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

✌ கேக் ஐசிங், உணவு தயாரித்தல், ✌ Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)

✌ முக அழகுக் கலை (Facials) ✌ Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)

✌ மெஹந்தி போடுதல் ✌ இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-01-2016
ஞாயிறு காலை 9.30 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 25-01-2016
திங்கள் காலை 9.30 மணி

✌ (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)







மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-


# விடுவிக்கப்பட்ட இடங்களில் இராணுவத்தால் வீடுகள் அழிப்பு

## சஜீவன் குற்றச்சாட்டு

வலி. வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட இடங்களில் இராணுவம் வேண்டுமென்றே பொது மக்களின் வீடுகள் மற்றும் எல்லைகளை அழித்து விட்டு சென்றுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ள வலி.வடக்கு பிரதேச சபையன் உப தலைவரும், மீள் குடியேற்றகுழுவின் தலைவருமான எஸ். சஜீவன் தெரிவித்துள்ளார்.

தேசிய பொங்கல் நிகழ்வை கொண்டாடுவதற்காக யாழ்.வருகை தரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இராணுவத்தால் அழிக்கப்பட்டு, சொத்துக்கள் சூறையாடப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக அறிவிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வலி.வடக்கில் சித்திரவதை முகாமாக கருதப்படும் வீடு தொடர்பில் ஜனாதிபதி விசாரணைக்குழு ஒன்றினை நியமத்து விசாரணை களை முன்னெடுக்க வேண்டும எனவும் தெரிவித்துள்ளார. அரச அதிகாரிகள் கூறுவது போன்று இதனை சாதாரணமான விடயமாக கருதி விட முடியாது.

சில அரச அதிகாரிகள், இந்த சித்திரவதை முகாம் தொடர்பில் பெரிதுபடுத்தினால் ஏனைய காணி விடுவிப்புக் கள் தாமதமாகும் எனவும் ஆகை யால் இதனை கண்டும் காணா மல் இருப்பது தான் நல்லது என்று கருதப்பட கூறி வரு கின்றனர். இதற்காக எமது மக்களுக்கு தனியொரு இடத்தில் அரங்கேற்றப்பட்ட கொடுமை கள், சித்திரவதைகளை வெளியே கொண்டு வராமல் இருக்க முடியாது.

எங்களுக்கு எங்களுடைய காணிகள் விடுவிக்கப்பட வேண்டும், விடுவிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு, எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை கூறாமல் இருந்தால் தான் எமது காணிகளை நல்லாட்சி அரசு என்று கூறுபவர்கள் விடுவிப்பார்களாயின், அதனை நல்லாட்சி அரசு என்றோ அல்லது, ஒரு மக்களின் அரசு என்றோ விழிக்க முடியாது.

அங்கு ஒன்றும் இல்லையா யின் அதனை ஏன் அழிக்க வேண்டும்? ஏன் முந்திக்கொண்டு முன் பின் முரணான தகவல்களை இராணுவமும் அரசும் வெளியிட வேண்டும்? ஆகை யால் அங்கு குற்றங்கள் நடை பெற்றுள்ளது. அவற்றை மறைபபதற்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டும் உள்ளன.


ஆகவே தைப்பொங்கல் கொண்டாட வரும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இவற்றையும் கவனத்தில் எடு க்க வேண்டும். இது தவிர படை யினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய நிலங்களின் விடுவிப்பு தொடர்பிலும் அறிவிப்பு ஒன்றினை விட வேண்டும் என அவா மேலும் தெரிவித்தாா். (இ-4)

# பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

வரணி கரம்பைக்குறிச்சி ஆழ்வார்மடம் வேலாயுதா் கோவில் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று பி.ப.4 மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. புதிய நிா்வாகசபை தெரிவு இடம் பெறவுள்ளதுடன் ஆலய கும்பாபிஷேகம் சம்பந்தமாக ஆராயவுள்ளதனால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிா்வாகத்தினா் அறிவித்துள்ளனா். (இ-29)

# புதுவருட பலன்கள் 2016



**இராசிநாதன் பத்தினிலே!**
**தொழிலில் பதிப்பீர்**
**முத்திரையை!**
**வந்து உறவாடும்**
**மாந்தர்களை**
**வாய்ப் பேச்சாலே வசமாக்கும்**
**தனுசு இராசி நேயர்களே!**

## இராசிநாதன் பத்தினிலே! தொழிலில் பதிப்பீர் முத்திரையை!

புத்தாண்டு பிறக்கப் போகின்றது. பொன் கொழிக்கும் ஆண்டாக இருக்குமா? மண், பூமி சேருமா? மங்கல நிகழ்ச்சி இல்லத்தில் நடைபெறுமா? தொழிலில் தங்கு தடைகள் அகன்று தன இலாபம் கிடைக்குமா? என்றெல்லாம் சிந்திக்கத் தொடங்கியிருப்பீர்கள். உங்கள் சிந்தனைகள் அனைத்தும் வெற்றி பெறும் விதத்தில் கிரகங்களின் சஞ்சார நிலை அமைந்துள்ளது.

**1.1.2016 முதல்**
**6.2.2016 வரை**

இக்காலத்தில் குரு கன்னி ராசியில் வக்ரம் பெற்று சஞ்சரிக்கின்றார். அதிசார குருவாக சஞ்சரிப்பது நன்மை தான். ராசிநாதனாகவும் 4ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் குரு பகவான் கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவர். அப்படிப்பட்டவர் வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கும் பொழுது, அக்கறை காட்டாத காரியங்களில் கூட ஆதாயம் அதிகம் கிடைக்கும். சிக்கல்களிலிருந்து விடுபடுவீர்கள். செல்வநிலை உயரும். எக்காலத்திலும் இல்லாத அளவிற்கு வளர்ச்சி வந்து சேரப்போகின்றது.

இந்த வளர்ச்சி நிலைத்திருக்க குரு பகவானை கொண்டாடுங்கள். குழப்பங்களிலிருந்து விடுபடுங்கள். அருள்தரும் குருவின் பார்வை உங்கள் மீது பதிந்தால அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

இதுவரை உங்கள் ராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான ஜனவரி 8ஆம் திகதி முதல் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகின்றார். இதுவரை உங்கள் ராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது பகவான் ஜனவரி 8 ஆம் திகதி முதல் 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின் றார். இந்தப் பாம்புக் கிரகங்களின் மாற்றத்தால் பலவித மாற்றங்கள் வந்து சேரப்போகின்றது.

நவக்கிரகங்களில் நன்மையான பார்வையைத் தருபவர் குரு பகவான். அதுமட்டுமல்ல உங்கள் ராசிக்கும் அதிபதியாக விளங்குபவர். அப்படிப்பட்டவரோடு ராகு பகவான் இணைந்து 9 இல் சஞ்சரிக்கும் பொழுது உன்னத வாழ்வுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுக்கப் போகிறார். தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். பூர்வீக சொத்துக்களை பிரித்துக்கொள்வதில இருந்த பிரச்சினை சுமுகமாக முடியும்.

ஆடம்பரத்திற்காக வாங்காமல் அன்றாட வாழ்க்கைத் தேவைக்காக வாகனம் வாங்க வேண்டுமென்று நினைப்பீர்கள். அந்த எண்ணங்கள் இதுவரை செயறபடாமல் போயிருக்கலாம். இப்பொழுது வரப்போகும் ராகு- கேதுவின் பெயர்ச்சியின் விளைவாக வாகன யோகம் வந்து சேரப்போகின்றது. தந்தை வழி உடன்பிறப்புகளின் வழியே இருந்த பகை மாறும். 3 இல் உலா வரும் கேதுவால் வழக்குகள் சாதமாகும். அரசு சார்ந்தவர்களின் ஆதரவு கிடைத்து பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

உங்களை விட்டு விலகிச் சென்ற உடன்பிறப்புகள் இப்பொழுது மீண்டும் வந்து சேரலாம். மங்கல ஓசை அவர்களுடைய மனையில் கேட்க நீங்கள் வழிவகுத்துக் கொடுக்கப் போகிறீர்கள். தங்கம், வெள்ளி தடையின்றி வந்திணையும். குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பதன் மூலம் குழப்பங்களிலிருந்து விடுபட இயலும்.

ராகு உங்கள் ராசிநாதனோடு இணைந்து 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பர். அன் னிய மாநிலம் அல்லது அன்னிய தேசத் திற்கு செல்லும் வாய்ப்பும், அழைப்பும் ஒரு சிலருக்கு வந்து சேரும்.

**சிம்ம குருவின்**
**சஞ்சாரம்!**

வருடத் தொடக்கத்தில் அதிசாரத்தில் இருக்கும் குரு பகவான் கன்னி ராசியில் சஞ்சரிக்கிறார். அவர் 7.2.2016 முதல் 1.8.2016 வரை மீண்டும் உங்கள் ராசிக்கு 9 ஆம் இடமான சிம்மத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இதில் 17.5. 2016 வரை சிம்மத்திற்கு உள்ளேயே வக்ரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். 18.5.2016 முதல் வக்ர நிவர்த்தியாகி 1.8.2016 வரை சிம்மத்திலேயே சஞ்சரித்து அதன் பார்வை பலத்தால் சிறப்புகளை உங்களுக்கு வழங்கப்போகின்றார.

சிம்மத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் ராசியின் மீதும் பதிகின்றது. 3, 5 ஆகிய இடங்களிலும் பதிகிறது. எனவே, 'குரு பார்க்க கோடி நன்மை' என்பதற்கிணங்க செயல்களில் வெற்றி கிடைக்கும். மூன்றாமிடத்தைப் பார்க்கும் குருவால் முன்னேற்றம் அதிகரிக்கும். நம்பிக்கைக்குரிய விதத்தில் நண்பர்கள் நடந்து கொள்வர். வம்பு, வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள்.

பிள்ளைகளாலும் பெருமை சேரும்.




தானாக முடிவெடுத்துச் சில காரியங்களைச் செய்த பிள்ளைகள் இனி தாய் சொல்லுக்கு கட்டுப்படுவர். பூர்வீக சொத்துக்களை விட்டுவிட்டுப் புதிய சொத்துக்களை வாங்கும் திட்டம் நிறைவேறும். ஒருசிலர் தங்கள் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி, கல்வி வளர்ச்சிக்காக கடல் தாண்டிச் சென்று கல்வி கற்கப் பெரும் பணம் தேவைப்படுகிறதே என்று நீங்கள் நினைத்திருக்கலாம். அதை ஒரு சிலருக்கு அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். ஒரு சிலருக்கு வங்கிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

ராசிநாதனாகவும், சுகாதிபதியாகவும் இருக்கும் குரு பகவான் 5 ஆம் இடத்தைப் பார்க் கும் பொழுது மிஞ்சும் பலன் தருவார் என்றே சொல்லலாம். எனவே இதுபோன்ற நேரங்களில் தொழில் கூட்டாளிகள் கூடுதல் இலாபத் தைக் கொண்டு வந்து சேர்ப்பா. வீட்டு உபயோகப் பொருட்களையும் வாங்கிச் சேர்ப்பீர்கள். திசைமாறிய குரு வழிபாடு தித்திக்கும் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

**சனியின் சஞ்சார நிலை!**
**27.3.2016 முதல்**
**10.8.2016 வரை**

விருச்சிகத்தில் சனி வக்ரம் பெறுகின்றார். தொடர்ந்து ஆண்டு முழுவதும் விருச்சிகத்திலேயே சனி வீற்றிருக்கிறார்.




**விரயத்தில் சனிதான் நிற்க**
**வீட்டினில் விரயம் கூடும்!**
**உறவிலும் பகை உண்டாகும்!**
**உயரிய பதவி மாறும்!**
**வரவதும் அதி கரிக்க**
**வரும்துயர் விலகி ஓட**
**குறைதீர்க்கும் சனியை நாளும்**
**கும்பிட்டு மகிழு வோமே!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது 12 இல் சனி பகவான் சஞ்சரிக்கும் பொழுது, பலவித செலவுகளும் வந்து அலைமோதும். தேவையற்ற பயணங்களால் தேக நலனில் கெடுதல் உருவாகலாம். சிக்கன நடவடிக்கையை எடுத்தாலும் கூடச் செலவுகள் கைக்கு மீறி வரும். பக்கபலமாக இருப்பவர்களிடம் கைமாற்று வாங்கும் சூழ்நிலையும் ஒரு சிலருக்கு உண்டு. பணி நிமித்த மாக அலைச்சல் அதிகரிக்கும்.

**செவ்வாய் சனி சேர்க்கை காலம்!**
**27.2.2016 முதல்**
**9.9.2016 வரை**

விருச்சிக ராசியில் செவ்வாயும், சனியும் சேர்க்கை பெறுகிறார்கள். இக்காலத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வ்ரவு ஒரு மடங்கு வந்தால் செலவு மூன்று மடங்கு வந்து சேரும். அயல்நாட்டு முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழிலில் இணைந்திருந்தவர்கள் விலகிச் செல்லலாம். புதியவர்களை நம்பிச் செய்த காரியங்களில் ஏமாற்றம் உருவாகும்.

அதே நேரத்தில் 5, 12இற்கு அதிபதியான செவ்வாய் 25.10.2016 முதல் 6.12.2016 வரை உச்சம் பெறுகின்றார். இக்காலத்தில் பிள்ளைகளின் கல்யாண கனவுகளை நனவாக்குவீர்கள். எப்பொழுதோ வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது விற்பனையாகி நல்ல இலாபத்தைக் கொடுக்கும்.

**செல்வ வளம் தரும்**
**சிறப்பு வழிபாடு!**

உங்கள் ராசிநாதன் குரு என்பதால் நவக்கிரகத்தில் உள்ள குருவுக்கு வியாழன் தோறும் அர்ச்சனை செய்து வருவது நல்லது. சஷ்டி விரதமிருந்து சண்முகநாதப் பெருமானை வழிபாடு செய்யுங்கள். யோகபலம் பெற்ற நாளில் திருச்செந்தூர் முருகப்பெருமானை முத்தமிழால் பாடி வழிபட்டு வாருங்கள். அருகில் வந்து ஆதரவுக் கரம் நீட்டுவார் முருகப்பெருமான்!

**தனுசு ராசியில்**
**பிறந்த பெண்களுக்கு!**

இந்த ஆண்டு இட மாற்றம், ஊர் மாற்றம் போன்றவற்றை எதிர்கொள்ளும் ஆண்டாக அமையப் போகின்றது. இல்வாழ்க்கை இனிமையாக இருக்கும். விரயச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் பணம் வந்த மறு நிமிடமே செலவாகும். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. சுபச்செலவுகள் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

10இல் குரு வருவதால் உத்தியோகத்தில் உள்ளவர்கள் பணியில் இருந்து விலகும் சூழ்நிலையும், சுயதொழில் செய்யும் சிந்தனையும் மேலோங்கும். ராகு- கேதுக்களின் பெயர்ச்சியின் விளைவாக தேகநலனில் சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டு மறையும். மாற்று வைத்தியம் உங்களுக்கு கைகொடுக்கும்.

சர்ப்ப கிரக வழிபாடுகளை முறையாகச் செய்வதோடு, வியாழன் தோறும் விரதமிருந்து தென்முகக் கடவுளை தரிசித்து வருவது நல்லது. வருடக் கடைசியில் வரன்கள் வாயில் தேடி வரும். நினைத்த காரியங்கள் நிறைவேறி மகிழ்ச்சி காண்பீர்கள்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

**ஆடி பதினெட்டில்**
**தேடி வரும் யோகம்!**

ஆடி பதினெட்டு (2.8.2016) முதல் குரு பகவான் உங்கள் ராசிக்கு 10 ஆம் இடத்தில் முறையாகச் சஞ்சரிக்கப் போகின்றார். அந்த அடிப்படையில் ஜீவன ஸ்தானம் எனப்படும் இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது உங்கள் ஆவல்கள் அனைத்தும் பூர்த்தியாகும். ஏழரைச் சனியின் ஆதிக்கமும் நடப்பதால் இடையிடையே வரும் பிரச்சினைகளைச் சமாளித்து விடுவீர்கள்.

'பத்தில் குரு வந்தால் பதவியில் மாற்றம் உண்டு' என்பது பழமொழி. அதன்படி உத்தியோகம், தொழிலில் வரும் மாற்றங்கள் வளம் சேர்க்கும். திசாபுத்தி பலம் இழந்தவர்களுக்கு நீண்ட தூர மாற்றங்கள் வந்து சேரும்.

அதே நேரத்தில் அதன் பார்வை பலத்தால் இல்லத்தில் உள்ளவர்களின் தேவை களைப் பூர்த்தி செய்வீர்கள். பண வரவில் தடை ஏற்படாது. சுப நிகழ்வுகள் நடைபெறுவதில் தாமதம் ஏற்பட்டாலும் நல்ல விதமாக நடைபெறும். மறைமுக எதிர்ப்புகள் அகலும்.

நாளை மகரம்

# தனது புகைப்படத்தை பார்த்து பிரமித்த ஜனாதிபதி



(கொழும்பு)

புகைப்படக் காட்சியில் வைக்கப்பட்டிருந்த தனது புகைப்படத்தினை பார்த்து பிரம்மித்தேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி அபிமங்கள வருட புகைப்படநினைவுகள்" கண்காட்சி பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக் கண்காட்சியை திறந்து வைத்து விட்டு, அங்கு வைக்கப்பட்டுள்ள அனைத்து புகைப்படங்கள் மற்றும் ஓவியங்களை ஜனாதிபதி பார்வையிட்டிருந்தார்.

ஜனாதிபதி புகைப் படக் கலைஞர் சுதத் சில்வா புகைப்படமெடுத்த ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன ஆட்சியின் முதலாம் வருடத்துடன் தொடர்பான விசேட நிகழ்வுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த புகைப்படங்களைப் பார்த்து விட்டு தான் பிரமிப்பு அடைந் ததாகவும், தன்னுடைய படங்களும், சேகரிக்கப்பட்டு, அவையும் பாதுகாப் படும் என தான் எதிர்பார்க்கவில்லை என்றும், தனது படங்கள் தனக்கே ஆச் சரியத்தை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்திருந்தன என்றும் ஜனாதிபதி தனக்கருகில் இருந்த அதிகாரிகளிடத்தில் தெரிவித்துள்ளார். (இ-7)


## நாட்டுக்கு பொருத்தமற்ற

# அரசியலமைப்பு திருத்தத்திற்கு ஆதரவளிக்கப் போவதில்லை

## அர்ஜுன ரணதுங்க எதிர்ப்பு

(கொழும்பு)

**நாட்டுக்கு பொருத்தமற்ற அரசியலமைப்புச் சட்டதிருத்தத்திற்கு தாம் எந்த வகையிலும் ஆதரவாக இருக்கப் போவதில்லை என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எவ்விதமான அரசியலமைப்புத் திருத்தத்தையும் மேற்கொள்ள மாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை துறைமுக அதிகார சபையில் நேற்று முன்தினம் முற்பகல் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

கறுப்பு கொடியேற்றும் கலாசாரத்தை ஏற்படுத்தி நாட்டை இனவாதத்தை நோக்கி திருப்ப சிலர் முயற்சித்து வருகின்றனர் எனவும் அர்ஜுன ரணதுங்க குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7)

## வாரம் ஒரு தகவல்

### தன்னம்பிக்கை

**இறகுகளைப் பறவைகள் பாரமாகக் கருதலாமா? பொறுப்புக்களே உங்களை உயர்த்தும் இறகுகள். பொறுப்புக்களைப் பாரமாகக் கருதாதீர்கள்.**

**கஷ்டம் வந்தால் புலம்பாதீர்கள். 'அதிர்ஷ்டம் அவ்வளவு தான்' என்று அலுத்துத் துக்க தீட்சை கொடுத்து உலகை இருட்டாக்காதீர்கள். மனித முயற்சியும் கடவுள் கருணையும் இணைந்தால் ஆகா, அது தான் அழகு.**

**நம்பிக்கைகள் முழுமையாக இருக்க வேண்டும். அரை குறை நம்பிக்கைகள் ஆபத்தானவை. கடவுள் நம்பிக்கை கூட பலருக்கு அரைகுறைதான்.**

**தன்னம்பிக்கை தாரம் மாதிரி. கடவுள் நம்பிக்கை தாய் மாதிரி. இரண்டோடும் இருப்பது தான் சரியான வாழ்க்கை. தன்னம்பிக்கை ஆணவமாகி கடவுள் எதிர்ப்பு என்ற பிதற்றலாக மாறுகிறபோது தாரத்திற்காக தாயை கொல்கிற பாதகர்களாக நாம் மாறுகிறோம். நாம் செய்ய வேண்டிய வேலைகளைக் கூட செய்யாமல் கடவுள் செய்யட்டும் என்று சோம்பிக் கிடப்பது கட்டிய மனைவியை பழி தீர்க்கும் செயலாகும்.**

**எனவே தன்னம்பிக்கை, கடவுள் நம்பிக்கை என்கிற இரண்டும் அவசியம் என்கிறேன்.**

## 18 ஆம் திருத்தச் சட்டம் ஒரே இரவில் நிறைவேற்றம்

18 ஆம் திருத்தச் சட்டத்தை கடந்த அரசாங்கம் ஒரே இரவில் நிறைவேற்றியதாக பிரதி அமைச்சர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் அரசியல் சாசனத் திருத்தம் தொடர்பில் முழு நாடாளுமன்றை தெளிவுபடுத்தி மக்களின் அனுமதியுடன் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும்.

கடந்த அரசாங்கத்தைப் போன்று இந்த அரசாங்கம் செயற்படாது. கடந்த அராங்கம் ஜனநாயக விரோதமான முறையில் செயற்பட்டிருந்தது.

எனினும், தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் அவ்வாறு எந்தவொரு சநதர்ப்பத்திலும் ஜனநாயக விரோத தீர்மானங்களை எடுக்கப்போவதில்லை.

புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் தொடர்பில் பல்வேறு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

அரசாங்கம், தற்போதைய அரசியல் அமைப்பிற்கு முரணான வகையில் புதிய அரசியல் அமைப்பினை உருவாக்க முயற்சித்தால் எவரும் நீதிமன்றின் உதவியை நாட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மிகப் பெரிய மாணிக்கக்கல்லின் விலை 300மில்லியன் டொலர்களாக அதிகரிப்பு

(கொழும்பு)

100 மில்லியன் டொலர்கள் என்று மதிப்பிடப்பட்டிருந்த உலகின் மிகப்பெரிய சப்பையர் ரக மாணிக்கக் கல்லின் விலையை அதன் உரிமையாளர் தற்போது 300 மில்லியன் டொலர்கள் என்று அறிவித்துள்ளார்.

300 மில்லியன் டொலர்களுக்கு தம்மிடம உள்ள மாணிக்கக் கல்லை விற்பனை செய்ய முடிவெடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளதாக ஏஎப்பி தெரிவித்துள்ளது.

முட்டை வடிவிலான இந்த மாணிககக்கல் 1404.49 கரட்டை கொண்டது.

இநதநிலையில் ஏனைய மாணிககக் கற்களை காட்டிலும் இந்த மாணிக்கக் கல் வித்தியாசமானது என்று தெரிவித்துள்ள மாணிக்கக் கல் விற்பனையாளர்கள், குறித்த மாணிக்கக் கல்லை யாராவது களவாடிவிடுவர் என்ற பயம் ஏற்பட்டுள்ளதாக அச்சம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த செப்டெம்பரில் அகழப்பட்ட இந்த மாணிக்கக் கல்லை தாம் இரகசியமான இடத்தில் வைத்திருந்ததாக உரிமையாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

# 2016 இல் இலங்கை, சர்வதேசம் எதிர்கொள்ளவுள்ள அரசியல் நிலைமைகள்!




ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் விடயங்களையும் முன்னையதைப் போன்ற ஒரேவித அக்கறைக்குரிய விடயமாகவே சர்வதேசம் காண்கிறது.



....மேற்கு ஆசியாவிலும் தாமே பற்ற வைத்த தீயை அணைப்பதற்குப் போராடிக்கொண்டிருக்கும் உலக வல்லரசுகள் தம்மை அறியாமலேயே பயங்கரத்திற்கு எதிராக பயங்கரத்தையே கட்டவிழ்த்துவிடுவதன் மூலம் மூண்டுகொண்டிருக்கும் தீச்சுவாலைகளுக்கு மேலும் மேலும் எண்ணெயை வார்த்து குழப்பகரமானதொரு பயங்கரவாத நிலையை இந்த வருடத்திலும் அவை தொடரப்போவதாகவே தெரிகிறது. அதாவது ஒருவித ஒட்டுமொத்த பயங்கரவாத நிலையாகவும் அது இருக்கலாம். இருந்தும் விருப்பதற்குரிய ஒரு ஆலோசனையாக மற்றவர்களும் பின்பற்றக்கூடிய விதமான அரசியல் தீர்வொன்று அவர்களுக்கு முற்றிலும் கிட்டாத ஒன்றாகிப்போய்விடப் போவதுமில்லை. எண்ணெய் வளம் கொழிக்கும் மேற்காசியா கொழுந்துவிட்டெரிகிறது.

ஏற்கனவே தீயினால் தீய்ந்து கொண்டிருக்கும் சிரியா, ஈராக், யேமன் போன்ற ஏனைய வேறு இடங்களிலும் போரின் கொடுமைகளையே தொடர்ந்தும் அனுபவித்துக் கொண்டிருக்கும் அப்பாவி மக்களின் குமுறல்களும் எதிரொலிகளும் மழுங்கடிக்கப்படுமளவிற்கு பரீஸ்ஸிலோ கலிபோர்னியாவிலோ நிகழ்த்தப்பட்ட பைத்தியக்காரத்தனமான பயங்கரவாத தாக்குதல்கள் முழுமையான சர்வதேச கவனத்தையும் தொடர்ந்தும் ஈர்த்துக்கொண்டேயிருக்கிறது. பல இலட்சக்கணக்கான மக்கள் தமது சொந்த நாட்டிலிருந்தபடி செத்துச் செத்துப் பிழைப்பதிலும் பார்க்க கடலில் செத்தாலும் சரி கொடுமைகளிலிருந்து தப்பித்தால் போதும் என்ற நம்பிக்கையில் ஐரோப்பிய நாடுகளுக்கு ஓடிக்கொண்டிருக்கிறார்கள். சிரியாவில் மட்டும், அதன் 24 மில்லியன் மக்கள் தொகையில் இதுவரை 2, 50,000 பேர்கள் போரில் கொல்லப்பட்டும், பாதித் தொகைக்கு மேற்பட்டவர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாகவும் வெளிநாடுகளுக்கு அகதிகளாக புலம்பெயர்ந்து சென்றவர்களாகவுமுள்ளனர். இந்த நான்கு வருட கால வன்முறைப் போரின் துன்பியல் விளைவுகளுக்கெல்லாம் அடிப்படையான ஒட்டுமொத்த காரணம் சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாட் நடத்தி வரும் சர்வாதிகார ஆட்சியேதான் என்றில்லாமல் அமெரிக்கா, ரஷ்யா, சவுதி அரேபியா, ஈரான் மற்றும் அப்பிராந்தியம் சம்பந்தமான ஏனைய நாடுகளும் கலந்துகொண்டிருக்கும் ஒருவித அரசியல் ஆதிக்க போட்டியேயாகும். சிரிய உள்நாட்டுப் போருக்கு மேலோட்டமான காரணமாக இருக்கும் "அரபு- வசந்தம்" என்பதன் உள்நோக்கம்

**சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் "வாக்குறுதிகளும் நீண்டு செல்லும் தீர்வுப் பயணங்களும்" எனும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம்...**

அந்த பிராந்தியத்தில் ஈரானுக்கு இருக்கும் ஆதிக்கத்தை உடைக்கும் முயற்சியேயாகும். இவர்களெல்லாம் தெரிந்தோ தெரியாமலோ " 'ஐ.எஸ்.ஐ.எஸ்.' இஸ்லாமிய இராச்சியம்" என்ற ஒன்றிணைந்த உலக இஸ்லாமியப் பயங்கரவாதப் பூதமான ஒருகொடூர பயங்கரவாதம் பிராந்தியத்தில் காலூன்றி உலகெல்லாம் பரந்து விரிந்து விஸ்வரூபமெடுக்க அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை உலகமே கண்டிராத இந்த பயங்கரவாத அமைப்பானது ஈராக் மற்றும் சிரியாவின் பரந்துபட்ட பாரிய விளைநிலப் பிராந்தியங்களை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு தனது அமைப்பை பலமான ஒன்றாக ஸ்தாபித்துக் கொண்டது மட்டுமல்லாது இராட்சத கணவாய் ஒன்று தனது நீண்ட கரங்களை (கூந்தல்கள்) எல்லாத்திக்கிலும் விரித்து இரை தேடிச் செயற்படுவது போல் தனது இணையத் தள வலை அமைப்புகளை விரிவாக்கம் செய்து பயங்கரவாதச் செயற்பாடுகளை உலகெல்லாம் மேற்கொண்டு வருகிறது.

ஏழு தசாப்தகால நீண்ட ஸ்ரேலிய- பாலஸ்தீனிய சச்சரவு தடையில்லாது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. எப்படியும் பொதுவில் உலகிற்கே மாபெரும் சவாலாக அமைந்திருக்கும் "காலநிலை மாற்றம்" என்ற தலைவிதி பற்றிய பொதுவான உணர்வலைகளை அதற்கான பரிஸ் உச்சி மாநாட்டில் காணக்கூடியதாயிருந்தது. ஆனாலும் எவரையும் கட்டுப்படுத்துவதாய் அமையாத வலுவற்ற 'COP 21' தீர்மான விதிமுறைகளே இங்கு மீண்டும் தொடர்வது முன்னரும் பூகோள வெப்பமடைதலை கட்டுப்படுத்துவதற்கு உருப்படியான வழிமுறைகளை ஏற்படுத் திக் கொடுக்காத முந்திய றியோ, கயோட்டோ மற்றும் கொப்பென்ஹெகன் உச்சி மாநாடுகளின் போக்கிலேயே இதுவும் போய்விடுமோ என்ற சந்தேகத்தையே கிளப்புவதாயுள்ளது.

தனது ஆயுத பலத்தை உக்ரெயினிலும் சிரியாவிலும் வெளிப்படுத்திக் காட்டுவதன் மூலம் ஒரு உலக இராணுவ வல்லரசாக ரஷ்யா மீளவும் எழுச்சி பெறுவதுடன் சீனாவின் எழுச்சியும் சேர்ந்து முன்னைய பனிப்போர் நிலைமைகள் போன்ற பகைமை உணர்வுகளே அமெரிக்காவுக்கும் சீனாவுக்குமிடையிலும் வளர்ந்து வருவதாக தெரிகிறது. உக்ரெய்ன் பிரிவினைவாத கிளர்ச்சியாளர்களுக்கு மொஸ்கோ நேரடி ஆதரவு வழங்குவதன் நிமித்தம் ரஷ்யா மீது அமெரிக்கா விதித்திருக்கும் பொருளாதாரத் தடை சர்வதேசத்தின் பார்வைக்குள் இருந்து கொண்டிருக்கும் அதேவேளை, தென் சீனக்கடலில் சீனாவும் அமெரிக்காவும் பழிக்குப் பழி என்ற விதத்தில் ஆசிய பிராந்தியம் மீதான சீன ஆதிக்கத்தை தடுத்து அதனைக் கட்டுப்படுத்துவதற்கான "ஆசியமைய அமைவிட கொள்கை"யை கடுமையாக கைக்கொள்வதில் அமெரிக்கா காட்டி வரும் பிடிவாதம் பொருளாதார ரீதியிலும் தொடரவே செய்கிறது. இந்து சமுத்திரத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் இலங்கையையும் சேர்த்திணைக்கும் சீனாவின் நீர்வழிப்பட்டுப் பாதைகளை உள்ளடக்கும் விதத்தில் ஏற்படுத்தப்பட்ட சீனப் பட்டுப்பாதைப்பெரும் திட்டத்திற்கு எதிராக அமெரிக்காவும், சீனா போன்ற நாடுகள் பூகோள பொருளாதார விதிமுறைகள்- கொள்கைகளை வகுப்பதற்கு இடமளிக்காத வகையில் இந்து- பசுபிக் சமுத்திர வழி நாடுகளை சேர்த்திணைத்து நிர்ப்பந்தங் கொடுக்கும் விதமான ட்ரான்ஸ் பசுபிக் பங்காளிகள் ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தி நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கிறது.

நீண்டகால "இஸ்ரேலிய- பாலஸ்தீன" விவகாரம் போலவே "இந்தோ- பாகிஸ்தான்" விவகாரமும் கூட நகர முடியா முடக்க நிலையிலேயே தொடர்ந்தும் இருந்துகொண்டிருக்கிறது. கடந்த வருட இறுதி வெள்ளிக்கிழமையன்று (கிறிஸ்மத்து தினம்) ஆப்கானிஸ்தானிலிருந்து நாடு திரும்பும் வழியில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியவர்கள் எதிர்பாராத விதமான பாகிஸ்தானின் லாகூருக்கு மேற்கொண்ட திடீர் விஜயமானது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையிலான பதற்ற நிலைமைகளை தணித்து ஆறுதலை அளிப்பதாக இருக்கும் இந்த புதிய சுமூக நிலை புதிய வருடத்திலும் தொடர வேண்டும் என்ற புதியதோர் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

2015 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிகளின்போது ஈரான் தனது அணுவாயுதத் திட்ட செயற்பாடுகளை குறைத்துக் கொள்வதாக உலக வல்லரசுகளுடன் எழுத்து மூல உடன்படிக்கை செய்து கொண்டமை மற்றும் மியன்மாரின் ஜனநாயக ஆதரவாளரும் தீவிர செயற்பாட்டாளரும் முன்னாள் அரச அதிருப்தியாளருமான ஆங் சான் சூகியின் தேர்தல் வெற்றிகளைத் தொடர்ந்து நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்காக இராணுவத்தின் கழுகுக் கண்களின் கீழ் அவர் மேற்கொண்டு வரும் ஆபத்தானதும் கடினமானதுமான ஜனநாயக முயற்சிகள் போன்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் புதிய ஆண்டான 2016 இற்கு புதிய பாதையைத் திறந்து விட்டுள்ளதாகவே கொள்ளலாம்.

மொத்தத்தில் 2015 ஆம் ஆண்டானது சமாதானத்திலும் பார்க்க கூடுதலாக போரையும், நம்பிக்கை எதிர்பார்ப்புகளுக்கும் அப்பால் அவநம்பிக்கையையும் அவலத்தையும் பிரகாசமான ஒளிக்குப் பதிலாக ஒளிக்கீற்றுக்களுடன் கூடிய இருள்மய அடிவான தெளிவின்மையையுமே உலகிற்குப் புலப்படுத்துவதாயிருந்தது!

2016 இல் உலகம் எங்கே சென்று கொண்டிருக்கிறது?!!!

நாம் எங்கே போகிறோம்? (முற்றும்)

தமிழில் யோகர்

# உண்மையை உணர்த்திய செல்வகுமாரியின் மரணம்

போரிலே பல்லாயிரக் கணக்கானவர்களைப் பறிகொடுத்த தமிழினம் பாதிப்புக்களிலிருந்து மீள முடியாமல் நாளுக்கு நாள் உயிரிழப்புக்கு உயிரூட்டிக் கொள்வதில் தடையின்றி பயணித்துக்கொண்டுள்ளது. இனவிடுதலைக்காக போராயடிவர்களின் அவலம் அரசியல் ஆக்கப்பட்டதால் இந்த துர்ப்பாக்கிய நிலைக்கு தமிழினம் தள்ளப்பட்டுள்ளது.

போரிலே அழிவை ஏற்படுத்திய படையினருக்கு அரசு பல்வேறு நலத்திட்டங்களையும் உயிரிழந்த படையினரின குடும்பங்களுக்கும் அங்கவீனமானவர்களுக்கும் வாழ்வாதார உதவிகளை அள்ளி வழங்கி ஆதரவைப் பெருக்குகின்றது. ஆனால் கொடிய யுத்தத்திற்கு இடம்கொடுத்து, முகங்கொடுத்து, பலிகொடுத்து நீங்கா வேதனைகளைச் சுமநதபடி வாழ்வாதாரத்தை உயர்த்த நாளாந்தம் போராடும் தமிழினத்தவர்களுக்கு உதவிகளைச செய்யும் வழிவகைகளை உருவாக்கக்கூட தடைகளைப போட்டு வருகின்றது.

அரசின் இந்த ஓரவஞ்சனைக்கு தமிழர் தரப்பிலுள்ள மிகப்பெரிய பலவீனமும் முக்கிய காரணமாகவுள்ளது. தேர்தல் காலத்தில் வழங்கும் வாக்குறுதிகளை வெற்றியன் பின்னர் மறப்பதனால் இந்த நிலைக்கு எமது இனம் உட்படுவதை தடுக்க முடியவில்லை.

மக்களால் தான் எமக்கு இந்தப்பதவி கிடைத்தது என்பதை அறிந்திருந்தும் மக்களுக்கு தேவையான உதவிகளை அப்பதவிகள் ஊடாகப் பெற்றுக்கொடுக்க முயற்சிப்பதில்லை. மாறாக தமது தேவைகளை நிவர்த்தி செய்வதிலும் எதிர்கால அரசியலுக்கு அடித்தளமிடுவதிலும் அதிக ஆர்வம் காட்டுவதால் எம்மினத்துக்கு இந்நிலை தொடர்கதையாகிவிட்டது.

விடுதலைக்காக போராடிய தமிழினத்தவர்களில் பெரும் பகுதியினர் போர் ஓய்ந்து ஆறு ஆண்டுகளை கடந்த நிலையில்கூட அடிப்படை வசதிகளுக்காக அன்றாடம்போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். புற்றுநோயால் உயிர் குடிக்கப்பட்ட தமிழினியைத் தொடர்ந்து தீயில் வெந்து உயிரைத் துறந்த செல்வகுமாரி உட்பட முன்னாள் போராளிகளபலரின் குடும்ப நிலை பரிதாபத்துக்குரியதாக மாறியுள்ளது.

எதிர்கால வாழ்க்கையைப பற்றி சிந்திக்காது இன விடுதலைக்காக போராட களம் புகுந்தவர்கள் அந்த இனத்தவர்களாலேயே புறக்கணிக்கப்பட்டு அவர்களின் சந்ததியினர் வறுமைக்கு பலியாகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை எம் இனத்துக்கு கிடைத்த சாபக்கேடு.

தேர்தல் செலவீனங்களுக்காக வெளிநாடுகளுக்கு சென்று நிதி திரட்ட மறுத்த ஒரு மாகாணத்தின் முதலமைச்சரைக் கட்சியிலிருந்தும் அப்பதவியிலிருந்தும் அப்புறப்படுத்த அயராது பாடுபடுவோர் இனவிடுதலைக்காக போராடி தற்போது வாழ்வாதாரத்துக்காக போராடுபவர்களுக்காக குரல்கொடுக்க முற்படவில்லை.

இதனை எம்மினத்துக்கு கிடைத்த சாபக்கேடு என்று குறிப்பிடுவதில் எந்தத் தவறுமிருக்க முடியாது. முன்னாள போராளிகளின் விடுதலைக்காகவும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் போராடுபவர்கள் விடுதலை செய்யப்படுவோரின் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு வாழ்வாதார உதவிகளை வழங்குவதிலும் ஆர்வம்காட்ட வேண்டும. சிங்களப் படைகளுக்கு உதவிகளை வாரிவழங்கும் அரசுக்கு தமிழரின் நிலையையும் எடுத்தியம்பி அவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய தமிழ்த் தரப்பினர் முன்வர வேண்டும்.


நல்லாட்சி அரசுக்கு நிபநதனையற்ற ஆதரவை வழங்கி அதற்கு பிரதிபலனாக எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றதால் தமிழர்களின் துன்பங்களை போக்கி விட முடியாது. எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவிநிலையைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு தேவையானவற்றைப் பெற்றுக்கொடுக்க இரா. சம்பந்தன் முன்வர வேண்டும்.

பணம் பெற்று வந்து தேர்தல் செலவீனங்களுக்கு உதவவில்லை என்றபோது பொங்கியெழுநதவர்கள் முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கு உதவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்ற சூழ்நிலையிலும், வாழ்வாதாரத்துக்கு வசதியின்றி வறுமை குடிகொண்டுள்ளவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதிலும் அக்கறை செலுத்தவில்லை.

இனவிடுதலைக்காக போராடி தமது எதிர்காலத்தையும் தமது சந்ததியினரின் எதிர்காலத்தையும் தொலைத்தவர்களாக வாழ்வை முடிக்கும் முன்னாள்போராளி செல்வகுமாரிபோன்றோரின் அவல வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். போரின் உச்சக்கட்ட பாதிப்புக்களை எதிர்கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் போராளியான செல்வகுமாரியின் மூன்று பெண் பிள்ளைகளின் நிர்க்கதி நிலையை உணர்ந்தாவது உதவிகளை வழங்க முன்வரவேண்டும்.

**காண்டீபன்**

# 'பாக்ஸ்' நாவலுக்கு விருது




வரலாற்றில் தோற்கடிக்கப்பட்டவர்களின் வலியை உரக்கச் சொன்ன வகையில் ஷோபாசக்தியின் **பாக்ஸ்** ஒரு முக்கிய நாவலென புகழ்ந்துள்ள ஆனந்த விகடன் அந்த நாவலுக்கு 2015 இல் சிறந்த நாவல் விருது வழங்கி கௌரவித்துள்ளது.

ஈழத்தமிழர்களின் அரசியல் வரலாற்றை தொடர்ச்சியாகத் தன் படைப்புகளில் பதிவு செய்துவரும் ஷோபாசக்தியின் **பாக்ஸ்** நாவல், போருக்குப் பிறகான சூழலின் 'புதிய' துயரங்களைப் பேசுகிறது.

இலங்கையில் நடை பெற்ற இறுதிப்போர், தமிழர்கள் ஒவ்வொருவரின் மனநிலையையும் எப்படிக் குலைத்திருக்கிறது என்பதை, தேர்ந்த மொழிநடையில் காட்சிப்படுத்தியிருக்கிறார் ஷோபாசக்தி. சொந்தக் கிராமங்களில் இருந்து வேரோடு பிடுங்கி எறியப்படும் அவலம், முன்னாள் போராளிகளின் இன்றைய இருப்பு என வெவ்வேறு விதமான உணர்வு நிலைகளை நாவல் பதிவுசெய்கிறது.

கார்த்திகை என்னும் போராளியின் மரணத்தை, ஊரே ஒரு துயர விளையாட்டாக நடித்துக் காட்டும் இடம் நிச்சயம் நம் மனசாட்சிக்கான பரிசோதனை முயற்சிதான். பாக்ஸ் என்னும் போர் உத்தி எப்படி ஒரு கிராமத்தின் ஆழமான வடுவாக உறைந்திருக்கிறது என்பதை அழுத்தமாகச் சொல்கிறது நாவல். வரலாற்றில் தோற்கடிக்கப்பட்டவர்களின் வலியை உரக்கச் சொன்னவகையில், **பாக்ஸ்** ஒரு முக்கியமான நாவல் என்று குறிப்பிட்டுள்ளது. (இ)

# பல விடயங்களில் அரசாங்கம் மாற்றம் கொண்டு வந்துள்ளது

## வஜிர அபேகுணவர்தன தெரிவிப்பு

மாற்ற முடியாது என கூறிய பல விடயங்களில் அரசாங்கம மாற்றம் கொண்டு வந்துள்ளது என அமைச்சர் வஜிர அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். நாரஹென்பிட்டி கொழும்பு மாவட்டச் செயலக வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மாற்றப்பட முடியாது எனக்கூறிய பலவற்றை மாற்றிய தினம் ஜனவரி 8 ஆம் திகதியாகும்.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டை வேறு திசையில் நகர்த்த மக்கள் தைரியமான தீர்மானம் எடுத்திருந்தனர்.

இந்த தீர்மானத்திற்கு அமைய மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டியது அனைவரினதும் கடமையாகும். அரச ஊழியர்களின் முதன்மைக்கடமை மக்களுக்கு சேவையாற்றுவதாகும்.

அரசியல் அமைப்பு மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல்படுத்த வேண்டியதும் அரச ஊழியர்களின் கடமையாகும். 2016 ஆம் ஆண்டில் முழு நாட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது என உள்விவகார அமைச்சர் வஜிர அபே குணவர்தன தெரிவித்துள்ளார். (இ-7)

# அவன்கார்ட் நிறுவனத்தால் கடற்படைக்கு பாரிய நட்டம்

அவன்கார்ட் நிறுவன நடவடிக்கைகளினால் இலங்கைக் கடற்படைக்கு பாரியளவில் நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவன்கார்ட் சம்பவம் குறித்து பாரிய நிதி மோசடிகள் குறித்த ஜனாதிபதி விசாரணைக் குழுவினால் நடத்தப்பட்டு வரும் விசாரணைகளின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது. நேற்றுமுனதினம இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விசாரணைகளின் போது அவன்கார்ட் நிறுவன நடவடிக்கைகளினால் கடற்படையினர் பாரியளவில் நட்டத்தை எதிர்நோக்க நேரிடடமை வெளிச்சமாகியுள்ளது.

அவன்கார்ட் நிறுவனம கடற்படையினருக்கு செலுத்தப்பட வேண்டிய பணத்தின் 28 வீதத்திலிருந்து 25 வீதமாக குறைக்கப்பட்டதன் காரணமாக 2012 ஒக்டோபர் மாதம் முதல் 2013 ஒக்டோபர் மாதம் வரையில் இலங்கைக் கடற்படையினருக்கு 1249 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு பதிலாக அப்போதைய மேலதிக பாதுகாப்புச் செயலாளர் தமயந்தி ஜயசூரிய அவன்கார்ட் நிறுவனத்திற்கு சலுகை வழங்கும் அனுமதிக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளார்.

விசாரணைகளில் சட்சியமளித்த கடற்படையின் ரியர் அட்மிரல் நீல் பெரிஸ்டர் ஜூட் ரொய்சரியோ இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இந்த நட்டம் பற்றி பாதுகாப்பு அமைச்சிற்கு அறிவிக்குமாறு அப்போதைய கடற்படைத் தளபதி ஜயனத் ஜயவீரவிற்கு அறிவித்த போதிலும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். இதற்கான எழுத்து மூல ஆதாரங்கள் காணப்படுவதாக அவர் தெரிவித்தார். (இ-7)

# நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரனின் 50ஆவது அகவைநினைவுநிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான மணிமண்டபத்தில் ஐ.தே.க.செயற்பாட்டாளர் பா.சுரேஸ்குமார் தலைமையில் இடம் பெறவுள்ளது. (இ-7)

# சிறுகதைத் தொகுதி நூல் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

பொலிகை கலை இலக்கிய மன்றத்தின் படைப்பாளி ஆ.முல்லை திவ்யனின் ''தாய்நிலம்'' எனும் சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணியளவில் ஆலடிச்சந்திக்கு அருகாமையில் மக்கள் படிப்பக முன்பள்ளி முன்றிலில் ஓய்வுநிலை கிராமசேவகர் சி.சிவபாலசிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில்பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-60)

# தொழிற்கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தில் 2016 ஆம் ஆண்டிற்கான பின்வரும் தொழிற்கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தரம் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். இக் கற்கை நெறிகளாவன.

டிப்ளோமா டெக் உதவி அலுவலர் பயிற்சிநெறி, கரையோர வளங்களின் முகாமைத்துவம், மீன்வளர்ப்பு மற்றும் மீன்பிடி முகாமைத்துவம், சுழியோடிப் பயிற்சி நெறி, படகு உற்பத்தி செய்தலும் திருத்துதலும், மீன்பிடி தொழில் நுட்பம், வெளி இணைப்பு இயந்திர தொழில்நுட்பம் , கடலக ஓட்டுநர் பயிற்சி நெறி (Marine Welder) கடலக மாலுமி பயிற்சி நெறி (Seamanship), வெளி இணைப்பு இயந்திர பொறிவலர் (OBM Mechanic), உயிர் பாதுகாப்பு பயிற்சி நெறி, கடலக வரைபடம் வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும் (GPS)

இக் கற்கை நெறிகளை கற்க விரும்புவர்கள் உரிய விண்ணப்பபடிவங்களை அலுவலகத்தில் பெற்று இம்மாத இறுதிக்குள் விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தொடர்புகளுக்கு 021 222 6251, 021 738 8188 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# பொங்கல் விழா, கலாசார நிகழ்வு

(பொன்னகர்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு யாழ். வட்டுக்கோட்டை தொழில் நுட்ப வளாகத்தில் பொங்கல் விழா, கலாசார நிகழ்வு, பட்டமேற்றும் போட்டி என்பன நடைபெறவுள்ளன.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின தலைவர் சட்டத்தரணி எரநதிக்க பிரியங்கே, தேசிய கொள்கைத் திட்டமிடல் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் மேலதிக செயலாளர் சீலகெல, யாழ். மாவட்ட பொலிஸ்மா அதிபர் ஜ.கே.சில்வா, வடக்கு மாகாண செயலாளர் இ.ரவீந்திரன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபா நா. வேதநாயகன், வடக்கு மாகாண ஆளுநர் எம்.எம். ஜீ.எஸ்.பளிஹக்கார ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2-299)

# அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

யாழ்.உடுவில் மான்ஸ் த.க.பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டமும் பாடசாலை அபிவிருத்திக் குழுவிற்கான புதிய நிர்வாகத் தெரிவும் அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நாளை மறுதினம் (செவ்வாய்க் கிழமை) பி.ப.1.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பெற்றோர்கள், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (இ-7)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 6,981 மரங்கள் நடுகை

## அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 6 ஆயிரத்து 981 மரங்கள் நேற்று முன்தினம் நடுகை செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி பூநகரி பள்ளிக்குடாவில் நடைபெற்ற நல்லாட்சியின் ஓராண்டு நிறைவினையொட்டி நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களிலிருந்து பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகப்பட்ட மாவட்டமாக விளங்கியது.

போர் முடிவடைந்த பின்னர் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு நல்லதொரு காலம் உள்ளதாக அனுமானிக்க முடிகின்றது.

காரணம் மக்களின் வாழ்வாதாரத்தினை அண்டியதாகவும் மக்களுடைய வீட்டுத்திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றிலே முன்னேற்றகரமான வேலைத்திட்டங்கள் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. அதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாம் மகிழ்ச்சியடைய வேண்டிய காலகட்டத்திலுள்ளோம்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்வு மர நடுகை நிகழ்வானது. பல திணைக்களங்களூடாக அதாவது வன பரிபாலனத் திணைக்களம் மற்றும் சுற்றுச்சூழல் திணைக்களம், பனை அபிவிருத்தி, தென்னை அபிவிருத்தி மற்றும் வாழ்வின் எழுச்சி, விவசாயம் போன்ற பல்வேறு வகையான திணைக்களங்களுடைய ஒத்துழைப்பின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட மரங்களை கொண்டு இம்மரநடுகை நிகழ்த்தப்படுகின்றது.

6 ஆயிரத்து 981 மரங்கள் கிளிநொச்சி மாவட்டத்திலே நடுகை செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் கூறினார். (2)




# முள்ளியவளை வடக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் செயற்பாடுகள் முடங்கிய நிலையில்

## மீள இயங்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(வற்றாப்பளை)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை வடக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் செயற்பாடுகள் முடங்கிய நிலையில் காணப்படுவதாகவும் அதனை சீரான முறையில் இயங்க வைக்க நிர்வாகத்தினர், கிராம அலுவலர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி சங்கமானது யுத்தத்திற்கு முன்னரான காலப்பகுதியில் கரைதுறைப்பற்று பிதேசத்திலேயே சிறந்த சங்கமாகவும் ஏனைய சங்கங்களுக்கு முன்மாதிரியானதாகவும் காணப்பட்டது.

மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் இச்சங்கத்தை பொறுப்பேற்ற எந்தவொரு நிர்வாகமும் இதனை சரிவர இயங்கச் செய்ய முன்வரவில்லையென பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது இவ்வாறிருக்க கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகமும் அதே போக்கைக் கடைப் பிடிப்பதாகவும் அதாவது சீரான முறையில் நிர்வாகம் பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றை நடத்தாமை மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பான கணக்கறிக்கைகள், பொதுமக்களுக்கு காண்பிக்காமை என்பவற்றுடன் பிரதேச செயலகம், நிறுவனங்கள் ஆகியவற்றினால் நடத்தப்படும் தேவை காண் கூட்டங்களுக்கு பங்கேற்காமையென இந்நிர்வாகத்தின் செயற்பாடுகள் நீடிப்பதால் இக் கிராமம் பெரும் பின்னடைவை சந்திப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்து மேற்படி சங்கத்தை சீராக இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-310)

# இலவசமாக மூக்குக்கண்ணாடி வழங்கல்

(புதுமுறிப்பு)

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் புதுமுறிப்பு பாலா கடைச் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள விஞ்ஞான கல்வி நிலையத்தில் வைத்து இலவச மூக்குக் கண்ணாடி வழங்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். எனவே அப்பகுதி மக்கள் கண் பரிசோதனை செய்து இலவச மூக்குக் கண்ணாடியைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-307-254-298)



தமிழர் திருநாளான தைப்பொங்கல் நிகழ்வையொட்டி உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் உழவர் உலா நிகழ்வு உருத்திரபுரம் வடக்கு, மேற்கு, சிவநகர் ஆகிய கிராமங்களில் இடம்பெற்று வருகின்றது. இதில் வீடுகளைத் தரிசிக்கும் நிகழ்வில் பங்கேற்றுள்ளவர்களைப் படத்தில் காணலாம். (படம்:- சிவநகர் செய்தியாளர்)

# பண்டார வன்னியனுக்கு மிக விரைவில் முல்லைத்தீவில் சிலை அமைக்கப்படும்

(குருமன்காடு)

வன்னி பெருநிலப்பரப்பை ஆண்ட வீர தமிழ் மன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் உருவச் சிலையை முல்லைத்தீவு நகரில் அமைப்பதற்கான முயற்சிகளை வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சு மேற்கொண்டிருந்தது.

இந் நிலையில், மேற்படி சிலை அமைப்புக்கான முதற்கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன. விரைவில் சிலை அமைக்கப்படும்.

மாவீரன் பண்டாரவன்னியன் சிலை வடக்கு மாகாணத்தில் குறிப்பாக வன்னி பெருநிலப்பரப்பில் வவுனியா மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக மட்டுமே அமைக்கப்பட்டிருந்த நிலையில்.

ஒட்டுசுட்டான் பகுதியில் பண்டார வன்னியனின் சிலை போருக்குப் பின்னர் அமைக்கப்பட்டது.

எனினும் குறித்த சிலை திட்டமிட்டு விசமிகளால் இடித்து வீழ்த்தப்பட்டது.

இந்நிலையில் புதிதாக வாள் ஏந்திய நிலையில் பண்டார வன்னியனின் சிலை முல்லைத்தீவு நகரில் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாகவுள்ள சுற்று வட்டத்தில் அமைக்கப்படவேண்டும் என்ற பிரேரணையினை, முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கடந்த 2014.02.10 ஆம் திகதி நடைபெற்ற வடக்கு மாகாணசபை அமர்வில் முன்மொழிந்து தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

எனினும் குறித்த விடயம் தொடர்பான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாத நிலையில் 2015.02.24 ஆம் திகதி நடைபெற்ற வடக்கு மாகாணசபை அமர்வில் மீள நினைவுறுத்தலை ரவிகரன் சபையில் தெரிவித்திருந்தார்.

இதன் பின்னர் குறித்த விடயம் தொடர்பில் மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சு நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டதுடன், முல்லைத்தீவு நகரில் உள்ள சுற்றுவட்டதில் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில் தற்போது முல்லைத்தீவு நகரில் மாவட்டச் செயலகத்திற்கு பின்பாக உள்ள பழைய கோட்டை பகுதியில் இந்தக் கோட்டை பண்டாரவன்னியனால் வெற்றி கொள்ளப்பட்டதாக வரலாறுகள் சுட்டிக்காட்டும் நிலையில், கோட்டை பகுதியை அண்டியதாக மாவட்டச் செயலக வளாகத்திற்குள் அமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இவ்விடயம் குறித்து முல்லை. மாவட்ட மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு நகரில் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக உள்ள சுற்றுவட்ட பகுதியில் பண்டார வன்னியனின் வீரத்தை குறிக்கும் வகையில் வாள் ஏந்திய சிலை ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், வீதி அபிவிருத்தி அதிகார சபை உடனடியாக அதற்கு அனுமதி வழுங்காததுடன், அந்தப் பகுதி சிலை அமைப்பதற்கு இடப்பற்றாக்குறை கொண்டதாகவும் காணப்படுகின்றது.

இதனால் பண்டார வன்னியனினால் வெற்றி கொள்ளப்பட்ட அந்நியரின் கோட்டைக்கு முன்பாக பண்டாரவன்னியனின் சிலையை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றோம்.

மேலும் சிலை அமைப்பதற்கான நிதியும் எமக்கு கிடைக்கப் பெற்றிருக்கின்றது. இந்நிலையில் மிக விரைவில் சிலை அமைக்கப்படும் என தெரிவித்துள்ளார். (2-250-281)

# உத்தரவாதமற்ற இலத்திரனியல் பொருட்களை நடமாடும் வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர்

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளில் உத்தரவாதமற்ற இலத்திரனியல் பொருட்கள் நடமாடும் வியாபாரிகள் சிலரால் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் அதனைத் தடுத்து நிறுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூர் கிராமங்களுக்கு வருகை தரும் நடமாடும் வியாபாரிகள் சிலர் பல்வேறு வகையான இலத்திரனியல் பொருட்களை எவ்விதமான உத்தரவாத அட்டைகளோ பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் சிட்டைகளோ இன்றி விற்பனை செய்து வருவதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு விற்பனை செய்யப்படும் இலத்திரனியல் பொருட்களின் உற்பத்தி நிறுவனம், விற்பனை செய்யும் முகவர் நிறுவனம் என்பவை தொடர்பான எவ்விதமான தரவுகளும் இல்லை என்பதுடன் இறக்குமதி செய்து விற்பனை செய்வதற்கான அனுமதிப் பத்திர இலக்கமும் காணப்படுவதில்லையெனவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை இவ்வாறான தரமற்ற பொருட்களை விற்பனை செய்வோர் பகட்டு வார்த்தைகளையும் வாய்மூல உத்தரவாதத்தையும் கிராம மக்களுக்கு வழங்கி ஏமாற்றி வருகின்றனர்.

எனவே இவர்கள் போன்ற போலி வியாபாரிகள் தொடர்பில் உரியவர்கள் கவனமெடுக்கும் பட்சத்தில் பொதுமக்கள் ஏமாறுவதைத் தடுக்க முடியுமென சுட்டிக் காட்டப்படுகின்றது. (2-310)

# கத்திக்குத்து சம்பவம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சியில் கடந்த 7 ஆம் திகதி காலை இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி காலை இரணைமடுச்சந்தியில் ஒருவர் கத்திக்குத்திற்கு இலக்காகி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த சம்பவத்தில் விசுவமடுவைச்சேர்ந்த எஸ்.ரூபன (வயது-34) என்பவர் காயமடைந்துள்ளார். இரணைமடுச் சந்தியில் உள்ள வாகனத்திருத்தகத்தில் பணியாற்றும் பிரஸ்தாப நபர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் தாக்குதல் நடத்தி விட்டுதப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். தாக்குதலை மேற்கொண்டோர் தங்களை இனங்காண முடியாதவாறு முகத்தை துணியால் மூடியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

மன்னிக்க முடியாத தவறு என்று உலகத்தில் எந்தத் தவறுமே இருக்க முடியாது. ஆனால் மன்னிக்க முடியாத மனது இருக்கலாம்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மகாத்மா காந்தியின் பேரன் இலங்கைக்குக் கூறிய காந்தியம்

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று ஓராண்டு நிறைவு நேற்றுமுன்தினம் ஜனவரி 8ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவரும் மகாத்மா காந்தியின் பேரனுமாகிய கோபால கிருஷ்ண காந்தி பிரதம விருந்தினருக்கான உரையை ஆற்றியிருந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் உரையாற்றிய கோபால கிருஷ்ண காந்தி, இந்த நாட்டில் பிரபாகரன் தோன்றக் காரணம் என்ன என்பதை தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறினார்.

மிதவாதத் தமிழர்களை ஏமாற்றி விடாதீர்கள் என்று குறிப்பிட்ட கோபாலகிருஷ்ண காந்தி, எஸ். ஜே.வி.செல்வநாயகம், ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்ற தலைவர்கள் ஏமாற்றப்படாமல் இருந்திருந்தால் பிரபாகரன் தேவைப்பட்டிருக்கமாட்டார் எனக் கோபாலகிருஷ்ண காந்தி பகிரங்கமாகக் கூறினார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இருந்த கோபாலகிருஷ்ண காந்தி இலங்கையின் யுத்த சூழ்நிலை மற்றும் சிங்கள-தமிழ் மக்கள் இடையேயான உறவுநிலைகளை நன்கு அறிந்துள்ளதுடன், ஜனாதிபதியாக மைத்திரி பதவி ஏற்று ஓராண்டு நிறைவு நிகழ்வில் எதை உரையாற்றினால் இந்த நாட்டு மக்களுக்கு நன்மையாக இருக்கும் என ஆழமாகச் சிந்தித்து தனது உரையை மகாத்மா காந்தியின் பேரன் ஆற்றியுள்ளார்.

பொதுவில் இலங்கை அரசின் அழைப்பின் பேரில் விருந்தினராக வருகின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஆற்றுகின்ற உரைகள் அரச சார்புடையதாக இருப்பதே வழமை.

எனினும் அந்த வழமையை முறியடித்து எது உண்மையோ! எது நீதியோ! அதைத் தனது உரையாக அமைக்க வேண்டும் என்று நினைத்து அதை நிலைநாட்டிய கோபாலகிருஷ்ண காந்தி இலங்கைக்கு காந்தியத்தை மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

தமிழ் மக்களின் உரிமைகளை இலங்கை ஆட்சியாளர்கள் கொடுக்க மறுத்ததன் விளைவு தான் பிரபாகரன் முன்னெடுத்த விடுதலைப் போராட்டம் என்பதைப்பட்ட வர்த்தனமாக சுட்டிக்காட்டிய கோபால கிருஷ்ண காந்தி, தனது உரையில் ஒரு பேருண்மையையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதாவது இலங்கைக்கு இந்தியாவை விட நல்ல நண்பர்கள் ஐக்கிய இலங்கைக்குள்ளேயே இருக்க முடியும் என்பதாகும். காந்தியின் இக்கருத்து ஆழமான அர்த்தத்தைக் கொண்டது.

இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை தமது நண்பர்களாக ஆக்கிக் கொள்ளாமல் இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளை தமது நெருங்கிய நண்பர்களாக நினைத்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் உண்மையில் ஐக்கிய இலங்கைக்குள் இருக்கக்கூடிய நண்பர்களே உண்மையான நண்பர்கள் என்பதால் இலங்கை அரசு சிங்கள-தமிழ் உறவுகளைக் கட்டி எழுப்ப வேண்டும்.

தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகளைக் கொடுத்து அவர்களைத் தமது நல்ல நண்பர்களாக ஆக்கினால் இலங்கையின் எதிர்காலம் மிகவும் ஆரோக்கியமானதாக இருக்கும் என்பது கோபாலகிருஷ்ண காந்தியின் முடிவு.

ஆக, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று ஓராண்டு நிறைவில்-ஒரு முக்கியமான நிகழ்வில்-இந்த நாட்டின் முதன்மைத் தலைவர்கள் ஒரே மேடையில் அமர்ந்திருந்த நேரத்தில்,

காந்தியத்தின் தந்தை மகாத்மா காந்தியின் பேரன் கோபால கிருஷ்ண காந்தி காந்தியம் உரைத்தது சாலப் பொருத்துடையது. இனி ஏமாற்றாமல் இருக்க வேண்டியது இந்த நாட்டின் ஆட்சியாளர்கள். இதில் இருந்து அவர்கள் தவறுவார்கள் ஆயின் அதன் விளைவு எவ்வாறாக இருக்கும் என்பதையும் கோபால கிருஷ்ண காந்தி தெட்டத்தெளிவாக எடுத்தியம்பியுள்ளார்.

## இரவு வேளைகளில் திடீர் சுற்றிவளைப்பு

(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் குற்றச்செயல்களை தடுக்கும் முகமாக இரவு வேளைகளில் திடீர் சுற்றிவளைப்பும் ரோந்து நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலங்களில் நெல்லியடியை அண்மித்த பகுதிகளில் திருட்டுக்கள், கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 20 பொலிஸாரைக் கொண்ட விசேட பொலிஸ் அணி ஒன்று உருவாக்கப்பட்டு இரவு வேளைகளில் திடீர் ரோந்து நடவடிக்கைகளும் சுற்றிவளைப்புகளும் கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரவு வேளைகளில் தேவையற்ற விதத்தில் வீதிகளில் நிற்போர், சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடுவோர் போன்றோரை விசாரணை செய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9-60)

## இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தின் மாதாந்த இசையரங்கு தொலபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் இன்று மாலை 4 மணிகக்கு இணுவையூர் வி.கே.குகானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பாட்டு செல்வி மதுராங்கி சிறீஸ்கந்தராசா, வயலின் பி.சியாம் கிருஷ்ணா, மிருதங்கம் செல்வன் கே. ரவிசங்கர், கடம் செல்வன் எஸ்.பிரணவன ஆகியோர் பங் கேற்கவுள்ளனர். (இ-7)

## சொற்பொழிவு

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயிலின் வாராந்த ஆன்மிகச் சொற்பொழிவு இன்று முற்பகல் 10 மணியளவில் பெரியார் ஆச்சிரமத்தில் இடம் பெறவுள்ளது.

**இந்துமதம் காட்டும் வாழ்வியல** எனும் தலைப்பில் கலாநிதி காரை. எம்.பி. அருளானந்தன் சிறப்பு சொற்பொழிவு ஆற்றவுள்ளார். இதனைத் தொடர்ந்து முன்னாள் இந்து சமய கலாசார அமைச்சர் அமரர் தி.மகேஸ்வரனின பிறந்தநாள் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ-19)

## சரத்தின் இணையத்தளம் மீது ஐ.எஸ் தீவிரவாதிகள் தாக்குதல்

(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் தலைமையில் ஜனநாயக கட்சியின் இணையத்தளத்தின் மீது சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்த சைபர் தாக்குதல் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் செயல் என சந்தேகிக்கப்படுகின்றது.

லங்கா இஸட் நியூஸ் என்ற இந்த இணையத்தளத்தின் முகப்பு பகுதிக்கு பிரவேசிக்கும் போது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கொடியும் பிரசார வாசகங்களும் காணப்படுகின்றன.

மேலும் பின்னணியில் பிரசார இசையையும் கேட்ககூடியதாக இருக்கின்றது என ஜனநாயக கட்சியின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

சில எதிர்ப்புக் குழுக்கள் இலங்கையின் இணையத் தளங்களுக்கு பிரவேசித்து அவற்றின் மீது சைபர் தாக்குதல்களை நடத்தியிருந்தன. எனினும் இலங்கையின் இணையத்தளம் ஒன்றின் மீது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் சைபர் தாக்குதல் நடத்தியுள்ளமை இதுவே முதல் முறையாகும்.

ஜனநாயகக் கட்சியின் இணையத்தளம் அண்மையகாலமாக ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு எதிரான பல கட்டுரைகளை வெளியிட்டிருந்தது. இதுவே சைபர் தாக்குதலுக்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (செ-12)

## கடலாமைகளுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

குருநகர் பழைய பூங்கா வீதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 3 கடலாமைகளை நேற்றுமுன்தினம் மீட்டுள்ளதுடன், சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மூன்று ஆமைகளையும் இறைச்சியாக்குவதற்கு சந்தேக நபர் வீட்டின் பின்பக்கம் கட்டி வைத்திருந்ததாகவும் மூன்று ஆமைகளும் தலா 48, 32 மற்றும் 30 கிலோ கிராம் நிறையுடையவை என பொலிஸார் கூறினர். கைதான சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. (செ-12)

## நல்ல செயல்களை நாமும் எங்காவது ஓரிடத்தில் என்றாவது ஒருநாள் எப்போதாவது ஒருநேரம் ஆரம்பிப்போம்

இன்று நாம் இயேசுவின் திருமுழுக்குப் பெருவிழாவை கொண்டாடுகின்றோம். பாவ வாழ்விலிருந்த மக்களை விடுவித்து ஒளியின் பாதையில் நடத்திச்செல்ல - புதுவாழ்வை அவர்களில் தொடங்கி வைக்க - இயேசுவிற்கு சொந்தமானவர்கள் அவர்கள் எனும் முத்திரையை அவர்களுக்கு கொடுக்க திருச்சபை வழங்கும் ஓர் அடையாளமே திருமுழுக்கு ஆகும்.

இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்து ஜோர்தான் ஆற்றில் திருமுழுக்கு யோவானிடம் மக்கள் எல்லோரும் திருமுழுக்குப் பெறும் வேளையில்திருமுழுக்குப் பெற்றார். அவர்


### பரமபிதா காட்டிய பாதை

ஜோர்தான் ஆற்று தண் ணீரில் மூழ்கி திருமுழுக்கு பெற்றதன் மூலம் அவர் தம்மை நம்மோடு இணைத்தார். திருமுழுக்கு-கடவுள் தமக்கும் எமக்குமிடையே கட்டியுள்ள பாலம்போன்றது. இந்தப் பாலத்தின்வழியாக நாம்கடவுளை அடைய முடிகின்றது, இது எமது நம்பிக்கைக்கு வாயிலாகும். அந்தப் பாலப்பாதையைச் நாம் பலமானதாகவும் உயிரூட்டமுள்ளதாகவும் வைத்திருக்க வேண்டும்.

இயேசுவிற்கு திருமுழுக்கு கொடுத்த திருமுழுக்கு யோவான் யார்: இயேசுவிற்கு ஆறு மாதங்கள் வயதில் மூத்தவர். இயேசுவின் வழியை ஆயத்தப்படுத்த இறுதியாக வந்த இறைவாக்கினர். மக்களை கடவுளிடம் அழைத்து வருவதை நோக்கமாக கொண்டவர். 'மனந்திரும்புங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கிவிட்டது" என்று முழக்கமிட்டவர். இயேசுவைக் கவரும்படி புரட்சிகர வீரமுழக்க அறைகூவல் விட்ட வர். சட்டங்களையும் சடங்குகளையும் உயர்த்திப் பிடிக்காமல் அன்பையும் ,நீதியையும், சமத்துவத்தையும், பகிர்வையும், வலியுறுத்தியவர். இவ்வாறான திருமுழுக்கு யோவானின் புரட்சிக் கருத்துக்கள் இயேசுவின் கருத்துக்களோடு ஒருமித்திருந்தன.

அன்று இயேசு பாலஸ்தீனத்தின் அவலங்களையும், சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும், அடித்தட்டு மக்களின் அழுகைப் பிரலாயங்களையும் அன்றாடம் கண்டிருப்பார். புறந்தள்ளப்பட்ட அடித்தட்டு மக்களின் விடுதலை, நம்பிக்கைதான் இயேசுவின் இறையாட்சிப் பணிக்கு வித்திட்டது எனலாம். வரலாற்றில் பல்வேறு இறைவாக்கினர்களை அனுப்பிய இறைவனின் செயற்றிட்டத்தில் தாமும் அழைக்கப்பட்டிருப்பதை ஆழமாக இயேசு உணரந்திருக்கவேண்டும். இதன் மூலம தன்னை கடவுளின் அன்புக்குரிய மகனாகவும், மக்களோடு தன்னை ஒன்றிணைத்துக் கொள்பவராகவும் வெளிப்படுத்துகிறார். இயேசு பெற்ற திருமுழுக்கு மக்கள் அனைவரையும் மனமாற்றத்திற்கு அழைத்துச் செல்லும் ஓர் அடையாளச்செயல். இயேசுவின் திருமுழுக்கு பாவிகள்,தொழுநோயாளிகள், அடித்தட்டுமக்கள் இவர்களுடன் நெருக்கமான உறவையும் தோழமையையும் எடுத்துக்காட்டும் செயல். நாம் இன்று எம்மிடையே சாதி, சமயம் மொழி என எம்மை அடையாளப்படுத்திக் கொள்ள முற்படுகிறோம். இவற்றை கழைந்து நெருக்கமான உறவையும் தோழமையையும் ஏற்படுத்த நாம் தயாரா? கிறிஸ்தவர்களாகிய நமக்கு திருமுழுக்கு கிறிஸ்துவோடு ஒன்றிணைப்பதாகவும் நமக்குரிய தனித்தன்மையிலும் அவரது மீட்புப் பணியிலும் நம் அனைவரையும் அது ஒன்றிணைக்கச் செய்கிறது.

திருமுழுக்கு பெற்ற நாம் இறைவனின் குடும்பத்தில் அங்கத்தவராக மாறி விண்ணகப் பேரின்ப முத்திரையாக மாற வேண்டும். இதுவே இயேசுவின் திருமுழுக்கு எமக்குத் தரும் செய்தியாகும். இன்று நாமும் திருமுழுக்கு மூலமாக இறைவனின் ஊழியராக வாழ்ந்து நானிலமெங்கும் பணியாற்ற முன்வரவேண்டும். அப்போது நாமும் இறைவனை மகிழ்விக்கலாம்.



ஒருநாள் மாலை, கடற்கரையில் நடந்து கொண்டிருந்த ஓர் அறிவாளி இந்த உலகத்தை எப்படி காப்பாற்றுவது என்பது பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார். உலகத்தின் பிரச்சினைகள் உச்சநிலையில் தெரிந்ததால் எங்கு எப்படி ஆரம்பிப்பது என்று குழம்பிப் போயிருந்தார். அவருக்கு முன் ஓர் ஏழை மீனவன் கடற்கரையில் ஒதுங்கிக் கிடந்த சின்னச் சின்ன நட்சத்திர மீன்களை எடுத்து கடலில் எறிந்ததைப் பார்த்தார. 'என்ன செய்கிறீர் நண்பரே?" என்று கேட்டார் அவர். 'இவை இங்கேயே தங்கி

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

விட்டால், இறந்துவிடும். அதனால், இவைகளை மீண்டும் கடலுக்குள் அனுப்பி வைக்கிறேன்." என்ற மீனவனிடம் 'அது தெரிகிறது. ஆனால்,நீர் இப்படி செய்வதால் என்ன பயன்? இது போல் உலகத்தின் பல கடற்கரைகளில மீன்கள் கிடக்கின்றனவே. உமது இந்த செயலால் எத்தனை மீன்களைக காப்பாற்ற முடியும் என்று நினைக்கிறீர்?" என்று கேட்டபோது, அந்தமீனவன், 'எல்லா மீனையும் காப்பாற்ற முடியுமா என்று தெரியவில்லை. ஆனால், இதோ, இந்தமீனை என்னால் காப்பாற்ற முடியும்." என்று சொன்னபடி, ஒரு மீனை எடுத்து கடலில் எறிந்தாராம். நல்ல செயல்களை நாமும் எங்காவது ஓரிடத்தில், என்றாவது ஒருநாள், எப்போதாவது ஒருநேரம் ஆரம்பித்தாலே போதும். நல்ல செயல்களால் நானிலம் நிறையும் நாமனைவரும் நல்லமைதியில் வாழ்வோம்.

# J.D.C.A வெற்றிக்கிண்ணம்-2015

# சென்றலை வென்றது திருநெல்வேலி




J.D.C.A வெற்றிக்கிண்ணத்திற்காக கடந்த வருடத்தில் நடத்தப்பட்ட போட்டி காலநிலை காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் அப்போட்டிகள் 02.01.16 அன்று ஆரம்பமாகியுள்ளது. இடைநிறுத்தப்பட்ட போட்டிகளின் வரிசையில் திருநெல்வேலி சி.சி. அணி அரியாலை சென்றல் விளையாட்டுக் கழகத்தை 5 இலக்குகளால் வெற்றி பெற்று தனது முதல் வெற்றியை பதிவு செய்தது.


பூவா? தலையா? நிகழ்வில் வெற்றி பெற்ற அரியாலை சென்றல் அணி தமது துடுப்பாட்டத்தில் 41.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 133 ஓட்டங்களை பெற்றது.

திருசங்கர்-15, கோபி-33, விசாகன்-13, நிரோஸன் -17 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் திருநெல்வேலி சி.சி. அணியை சேர்ந்த விதுன்-02, பிரபு-01, செந்தூரன்-05, லவகாந் -01, இலக்கினை கைப்பற்றினர்.

134 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய திருநெல்வேலி சி.சி. அணி 31.2 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களை பெற்றுள்ளனர். பிரபு-21, ஜீவதாஸ்-21, கீர்த்திகன் ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் துவாரகன்-03 லினோர்த்தன்-01, கோபி-01 இலக்கை கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணித்தெரிவுக்கு திருநெல்வேலி சி.சி. அணி 7.84 புள்ளிகளையும் அரியாலை சென்றல் 1.83 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (க)

## ஜெயவர்த்தனவின் அதிரடியில் ஸ்ட்ரைக்கர்ஸ் வெற்றி







மஹேல ஜெயவர்தனவின் அதிரடியால் பிரிஸ்பேன் ஹேட் அணிக்கு எதிரான ஆட்டத்தில் அடிலெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

பிக் பாஷ் இருபது-20 லீக் தொடரின் நேற்றுமுன்தினம் முதல் போட்டியில் பிரிஸ்பேன் ஹீட்- அடிலெய்டு ஸ்ட்ரைக்கர்ஸ் அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வென்ற அடிலெயடு அணி முதலில் களத்தடுப்பை செய்தது. அதன்படி பிரிஸ்பேன் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணியின் தொடக்க வீரர் பியர்சன் 36 பந்தில் 51 ஓட்டங்கள் குவித்தார். ரியர்டன் 32 பந்தில் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்கள் சேர்க்க அந்த அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 175 ஓட்டங்கள் குவித்தது.

176 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அடிலெய்டு ஸ்ட்ரைக்கர்ஸ் அணி களம் இறங்கியது. தொடக்க வீரர்களாக களம் இறங்கிய லூட்மேன், ஜெயவர்தன சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

ஜெயவர்தன அதிரடியாக விளையாடி 30 பந்தில் 5 பவுண்டரிகள், 3 சிக்சர்களுடன் 53 ஓட்டங்கள் குவித்தார். அதன்பின் வந்த ஹெட் 25 பந்தில் 50 ஓட்டங்கள் குவித்தார். தொடக்க வீரர் லூட்மேன் 49 பந்தில் 57 ஓட்டங்கள் சேர்த்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இவர்களது சிறப்பான ஆட்டத்தால் அடிலெய்டு ஸ்ட்ரைக் கர்ஸ் அணி 18.4 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 179 ஓட்டங்கள் குவித்து 8 விக்கெட் டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (க)

## யாழ். மாவட்ட கிரிக்கெட் அணி தெரிவு

2016 ஆம் ஆண்டுக்கான யாழ். மாவட்ட கிரிக்கெட் அணி விரைவில் தெரிவு செய்யப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.

விளையாட்டுக்கழகங்கள் தமது சிறந்த வீரரை மேற்படி தெரிவுக்கு அனுப்ப முடியும்.

வீரர்கள் பற்றிய விபரங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (க)


### பிரிஸ்பேன் டென்னிஸ்

## சானியா-ஹிங்கிஸ் ஜோடி இறுதிப் போட்டிக்கு தகுதி

சர்வதேச டென்னிஸ் அரங்கில் இந்தியாவின் சானியா மிர்சா-சுவிட்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸ் ஜோடி, பெண்கள் இரட்டையர் போட்டியில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. தர வரிசையில் முதலிடத்தில் இருக்கும் இவர்கள் கடந்த 2015 ஆம் ஆண்டு ஏராளமான சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்கள்.

இந்த ஆண்டின் முதல் போட்டியாக பிரிஸ்பேன் இண்டர்நஷனல் போட்டியில் கலந்து கொண்டனர். இதன் அரையிறுதியில் ஸ்லோவாக்கியா- ரஷயா ஜோடியான அன்ட்ரேஜா கிளேபாக்- அல்லா குட்ரியாவ்ட்சேவா ஜோடியை எதிர்கொண்டது.

முதல் செட்டை சானியா ஜோடி 6-3 என எளிதில் வென்றது. ஆனால், 2 ஆவது செட்டில் எதிர்ஜோடி நெருக்கடி கொடுத்ததால் கூடுதல் நேரம் எடுக்க வேண்டியிருந்தது. அந்த செட்டையும் 7-5 எனக் கைப்பற்றி 2-0 என நேர்செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. சானியா-ஹிங்கிஸ் ஜோடியின் தொடர்ச்சியான 25 ஆவது இறுதிப்போட்டி இதுவாகும். (க)






## அதிகாரம்...

ளுடனான கலந்துரையாடலொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், நியாயமான அரசியல் தீர்வொன்று புதிய அர்சாங்கத்தால் முன்வைக்கப்படுமென த.தே.கூ. நம்பிக்கை கொண்டுள்ளது. அதிகாரம் அற்ற எந்த தீர்வையும் நாம் ஏற்போமெனெ யாரும் அவ நம்பிக்கை கொள்ள வேண்டிய அவசியமில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் இன்றைய நிலைப்பாடுகள் எமக்கு திருப்தி அளிப்பதாகவும் நம்பிக்கை தருவதாகவும் அமைகின்றன. பாராளுமன்றத்தை அரசியல் அமைப்பு சபையாக மாற்றும் இன்றைய கைங்கரியமானது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஒளியூட்டுவதாக அமைகிறது. அரசியல் அமைப்பு சபைக்கு தமிழ் மக்கள் சார்பில் யாரும் தமது ஆலோசனைகளை முன்வைக்க முடியும். அந்த ஆலோசனைகள் ஆரோக்கியம் கொண்டதாக அமைவதுடன் தென்னிலங்கை சக்திகளை குழப்பாமல் கூறப்படுமானால் நன்மை தரும்.

குறிப்பாக சிங்கள மக்களையும் சிங்களத் தலைவர்களையும் குழப்பாமல் நாங்கள் இத்தீர்வைத் தான் விரும்புகிறோமென்று கூற விரும்புகின்றவர்கள் கூறட்டும். இதற்கு கூட்டமைப்பு ஆலோசனை தெரிவிக்கப் போவதில்லை. எல்லோருடைய ஆலோசனைகளையும் நாங்கள் உள்வாங்குவோம், நிராகரிக்க மாட்டோம்.

தமிழ் மக்கள் தமது அதிகாரங்களைப் பயனபடுத்தி வாழும் சூழ்நிலையொன்று உருவாக்கப்பட வேண்டும். அதிகாரங்கள் கிடைக்க வேண்டுமென்பதற்காகவே அரசாங்கத்திடமிருந்து எந்த சலுகைகளையும் எதிர்பார்க்காமல் எல்லாவற்றையும் புறந்தள்ளி எமது மக்கள் இருந்து வந்துள்ளார்கள். எம்மக்கள் எவ்வளவோ விடயங்களை இழந்துள்ளார்கள், அழிந்துள்ளார்கள். நல்லதொரு அரசியல் தீர்வைப் பெற வேண்டுமென்பதற்கவே அனர்த்தங்களை அனுபவித்து அட்டூழியங்களைப் பொறுத்துக்கொண்டு வாழ்ந்து வந்திருக்கிறார்கள். எனவே அதிகாரம் அற்ற தீர்வு கிடைக்குமாயின் அத்தீர்வினால் எந்தப் பலனையும் எமது மக்கள் அடையப் போவதில்லை.

இது விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வாரம் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளது. ஜனாதிபதி திறந்த மனதுடன் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். அனைத்து சமூகங்களையும் திருப்திபடுத்த வேண்டும், நல்லிணக்கம் காணப்பட வேண்டுமென்பதற்காக உழைத்து வருகின்றார். எந்தவொரு தீர்வும் 2016 ஆம் ஆண்டுக்கு முன் கொண்டு வரப்பட வேண்டும், கொண்டு வரப்படவில்லையாயின் தமிழர் பிரச்சினைக்கு முடிவு காணப்படமுடியாத சூழ்நிலையே இலங்கையில் உருவாகும். இக்கருத்தை நான் மைத்திரிபால சிறிசேனவுக்கு அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவுடனேயே எடுத்துக் கூறியுள்ளேன். பிரதமருக்கும் தெளிவுபடுத்தியுள்ளேன்.

பாராளுமன்றில் நிறைவேற்றப்படும் அரசியல் நிர்ணய சபைத் தீர்மானமானது நீண்ட கால தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண உதவும் என நம்புகிறேன் என சம்பந்தன் தெரிவித்தார். (செ-11)

## மர்மமான...

மீன்பிடியில் நேற்றைய தினம் ஈடுபட்டுக் கொண்டு இருக்கும் போது திடீரென உதவி கோரி,

கடலில் வள்ளத்தில் மீன்பிடித்து கொண்டிருந்த ஒருவரிடம் கையால் சைகை மூலம் காட்டியுள்ளார். இதனால் உடனடியாக அவரை அணுகிய வள்ளத்தில் இருந்தவர், குடும்பஸ்தரை மீட்டு வளந்தலை வைத்தியசாலையில் அனுமதித்தார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அனுமதிக்கப்பட்டு சில நிமிடங்களிலேயே குடும்பஸ்தர் உயிரிழந்து விட்டதாக உறவினர்களிடம் கூறப்பட்டுள்ளது. இறப்பு தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி என்.பிரேம்குமார் மேற்கொண்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்ப---ட்டுள்ளது. (செ-4)

## ஊடகப்...

பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலைசெய்யப்பட்டு 7 வருடங்கள் கடந்துள்ள நிலையில் விசாரணைகளில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பிலும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் ஊடக பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் மேலும் தெரிவித்துள்ளார்.(செ-12)

## புதிய அரசியல்...

இதனையடுத்து, புதிய அரசியல்யாப்புக்கான சட்டமூலம் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டு, பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டால் அதற்கு மக்களின் அனுமதியை பெறுவதற்காக சர்வஜன வாக்கெடுப்புக்காக சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளாக புதிய அரசியல் யாப்பொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கங்கள் முயற்சித்த போதிலும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு இல்லாத காரணத்தால் அந்த முயற்சிகள் கைவிடப்பட்டிருந்தன.

ஆனால், தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு புதிய அரசியல் யாப்பொன்றை உருவாக்குவது அவசியம் என நல்லாட்சி அரச தரப்பினர் உட்பட பலரும் கருதுகின்றனர்.

நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்ற சமர்ப்பிக்கப்பட்ட தீர்மான வரைவில் கூட்டு எதிரணி மற்றும் ஜேவிபி உள்ளிட்ட கட்சிகள் திருத்தங்களை முன்வைத்துள்ளன.

இதனால் எதிர்வரும் 12ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வில் நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்ற சமர்ப்பிக்கப்பட்ட தீர்மான வரைவு மீது வாக்கெடுப்பு நடத்தி அதனை நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது.(செ-12)

## ஹிருணிகா...

னர் ஹிருணிகா பிரேமச்சந்திர கொழும்பு மேலதிக நீதிவான் மொகமட் மிஹர் முன்னிலையில் நிறுத்தப்பட்டார்.

இதன்போது அவரை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு பேரின் சரீரப் பிணையில் விடுவிக்க அனுமதி அளித்த நீதிவான், எதிர்வரும் 12ஆம் திகதி அவரை நீதிமன்றத்தில் முன்னிலையாகவும் உத்தரவிட்டார்.

தெமட்டகொடவில் இளைஞர் ஒருவரைக் கடத்திய சம்பவம் தொடர்பாக ஹிருணிகா பிரேமச்சந்திரவை கைது செய்வதற்கு சட்டமா அதிபர் பொலிஸாருக்கு உத்தரவிட்டதை அடுத்தே அவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்த வருடத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக பரப்புரை செய்தவர்களில் ஹிருணிகா பிரேமச்சந்திர முக்கியமானவர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு போட்டியிட அனுமதி வழங்கப்பட்ட போது, அதற்கு எதிராக குரல் கொடுத்த இவர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறி ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார்.

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஒரு ஆண்டு நிறைவடையும் நிலையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## மன்னார்...

சென்ற வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ஆயரை சந்தித்து சுகம் விசாரித்தார்.

இதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முதலமைச்சர்,

ஆயர் மிக விரைவில் குணமடைவார். அதன் பின் தமிழ் மக்களினுடைய பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு முன்வருவார், இதற்கு இறைவன் அருள் புரிவார் என்கின்ற நம்பிக்கை எனக்குண்டு என்றார். (செ-12)

## தமிழ்க் கட்சிகளை...

வெளிவிவகாரச் செயலாளர் எஸ்.ஜெய்சங்கர் தமிழ்க் கட்சிகளைச் சந்திப்பாரா என்பது தொடர்பில் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்திய வெளிவிவகாரச் செயலாளரின் இவ்விஜயத்தின் போது அவரைச் சந்தித்துப் பேச தமிழ்க் கட்சிகள் விருப்பம் வெளியிட்டிருந்தன.

மாலைதீவில் இருந்து கொழும்பு வரும் அவரின் ஒருநாள் பயணம் இறுக்க மான நிகழ்ச்சி நிரலைக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், அவசியம் எனக் கருதினால மட்டுமே தமிழ்க் கட்சிகளுடனான அவரின் சந்திப்பு உறுதி செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது.

கொழும்புக்கு நாளை மறுதினம் 12ஆம் திகதி வரவுள்ள இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ஜெய்சங்கர் அன்றே பிரதமர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் வெளிவிவகாரச் செயலாளருடன் பேச்சு நடத்தவுள்ளார். (செ-12)

## ஜனாதிபதி...

பெறவுள்ள இப்போராட்டத்தினை, வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஏற்பாடு செய்துள்ளார். அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக ஆட்சி ஏற்றபோது புதிய அரசு கூறியது. ஆனால் அவர்களுக்கு எந்த ஆக்கபூர்வமான பதிலும் இதுவரை வழங்கப்படவில்லை.

இதனை விட காணாமல் போகச் செய்யப்பட்டோர் தொடர்பிலும் எந்தவிதமான முன்னேற்றங்களும் நடைபெறவில்லை. அவர்களது உறவுகள் இப்போதும் கண்ணீருடன் தான் அலைந்து திரிகின்றனர். காணிகள் எந்தவிதமான விடுவிப்பும் இன்றியும் தொடர்ந்தும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

இனப்படுகொலையை நடத்தியவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். ஆனால் இனப்படுகொலையை எதிர்கொண்ட நாம் அச் சத்துடன் வாழ்ந்து வருகின்றோம். எம் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை மற்றும் காணாமல் போனோர், அரசியல் கைதிகள், காணிகள் விடுவிப்பு ஆகியவை தொடர்பில் நியாயமான நடவடிக்கைகள் எடுக்க கோரியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட உள்ளோம்.

மக்களின் குறைகள் கஷ்டங்களை தீர்க்காதவர்கள், அதே மக்களுக்கு முன்பாக வந்து தைப்பொங்கல் கொண்டாடுவது எந்த வகையில் நியாயம்? இது துன்பத்தில் துவண்டுள்ள எமது மக்களை மேலும் துன்ப த்துக்கும் எரிச்சலுக்கும் உள்ளாக்கும் செயலாகும், ஆகையால் தைப்பொங்கல் கொண்டாட முடியாத துன்பத்தில் நாமிருக்க,

எங்கள் இடத்தில் தைப்பொங்கல் கொண்டாட வருகை தரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு எதிர்ப்பு தெரிவித்தும் கறுப்பு துணி கட்டியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட உள்ளோம். இதற்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் என சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (செ-4,9)

## கிணற்றினுள்...

ணற்றடிப் பகுதிக்குச் சென்றிருந்த நிலையில் நீண்ட நேரமாகியும் அவரை காணாததால் குடும்பத்தினர் அவரைத் தேடியுள்ளனர்.

அப்போது குறித்த குடும்பஸ்தர் கிணற்றில் வீழ்ந்து கிடப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

உடனடியாக அயலவர்களின் உதவியுடன் கிணற்றிலிருந்து குடும்பஸ்தரை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட பிரஸ்தாப நபர் அனுமதித்த சிறிது நேரத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-12,30)


A/L இல் எதிர்பார்த்த பெறுபேறு இல்லையா
அதனாலென்ன? Yes You Can
O/L உடன்
3 - 6 மாத Entry Level கற்கைநெறியுடன் உள்நாட்டு - வெளிநாட்டு கல்வி தொழில் - விசா ஏற்பாடு!
Business / IT / Hotel Management / Media
பிரித்தானிய, அவுஸ்ரேலிய, கனேடிய பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கள்
University of Sunderland UK
UNIVERSITY OF WOLLONGONG Australia
UNIVERSITY OF TORONTO Canada
Conditions apply
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு VISA
உத்தரவாதம்*
SIKARAM Edu Solutions
Call or SMS 0773 616 798
மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)


## செல்வாவின்...

மேலும் தெரிவிக்கையில், நாட்டு மக்களின் விருப்பு வெறுப்புகள் உள்வாங்கப்பட்ட மற்றும் காலத்துக்கு பொருந்தக் கூடியவாறான அரசியலமைப்பு முறை இருக்க வேண்டும் என்பது எனது கருத்து.

டட்லி - செல்வா மற்றும் பண்டா - செல்வா ஒப்பந்தங்கள் அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் பிரபாகரன் என்று ஒருவர் உருவாகி இருக்க மாட்டார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இருந்தததனால் தான் போரை முடிவுக்கு கொண்டுவர முடிந்ததாகவும், ஆகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இல்லாது செய்யப்படக் கூடாது என்று சிலர் கூறுகின்றார்கள்.

இவ்வாறு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இருந்தால்தான் போரை முடிவுக்கு கொண்டு வர முடியும் என்றால் எதிர்காலத்தில் மீண்டும் போர் ஒன்று ஏற்பட வேண்டிய தேவை இருக்கின்றதா?

போர் ஒன்று ஏற்படாதிருப்பதற்கு நாட்டுக்குத் தேவையான நடவடிக்கைகளையே நாங்கள் செய்ய வேண்டும். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட உள்ளது குறித்து வெவ்வேறான பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதிய அரசியலமைப்பை மாற்றுகின்ற போது, பெடரல் என்றால் தெற்கில் உள்ள அடிப்படைவாதிகளுக்கு கசக்கின்றது. ஐக்கியம் என்றால் வடக்கில் உள்ள அடிப்படைவாதிகளுக்கு கசக்கின்றது. இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும்.

புதிய அரசியலமைப்பு உருவாக்குவதனால் பௌத்த மதத்துக்கும், நாட்டின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்பு உள்ள தாக மஹா சங்கத்தினர் என்னிடம் கூறினர். இது தொடர்பில் ஏன் நாங்கள் கலக்கமடைய வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படப் போவதில்லை.

எங்களிடம் அறிவு, திறமை, கடந்தகால அனுபவங்கள் நிறையவே இருக்கின்றன. இவற்றைக் கொண்டு நாட்டை கட்டியெழுப்புவதற்காகவும், நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்துமே செயல்பட வேண்டும்.

வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்கள் காரணமாகவே புதிய அரசியலமைப்பு முறை உருவாக்கப்பட இருப்பதாக சிலர் கூறுகின்றார்கள். இது தொடர்பில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எனக்கோ, பிரதமருக்கு எந்த வெளிநாடுகளும் அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற 26 வருட கால போரில் வடக்கு இளைஞர்கள் போலவே தெற்கிலும் எவ்வளவோ இளைஞர்கள் உயிரிழந்தார்கள். வடக்கிலும் தெற்கிலும் உள்ளவர்களை ஒன்றிணைக்கும் முறையே எமக்குத் தேவை. அனைத்து மக்களும் அனைத்து மதத்தினரும் ஐக்கியத்துடன் வாழ்வதற்குரிய இலங்கையை கட்டியெழுப்ப வேண்டும் என அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

## உடனடி விற்பனைக்கு

புடவைக்கடை
தளபாடங்கள் கண்ணாடி
கதவுகள்,
இணைப்புக்கள்
தொடர்பு :
077 6592237
(3128)

## Personal Class-கணினி

*O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.
*12வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design,
DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker, Adobe Illustrator CC, Adobe Indesign CC)
*சிறுவர்களிற்கான கற்கைநெறி
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்
TP:0779672038 ஆசிரியர்:KRC

## Group Classes SCIENCE

English Medium
By. Mr. RAGUMAR
0776059650
(3119)

## தேவை

விநியோக சேவை நடாத்தும் நிறுவனமொன்றிற்கு
கனரக வாகன சாரதி
தேவை.
வயது 30க்கு குறைவாக 3 வருட அனுபவம். யாழ்ப்பாணம், வவுனியாவில் வசிப்பவராகவும் சிங்களம் கதைப்பவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.
சம்பளம் 24,000/=
அழையுங்கள்.
0773 911 922 , 0774 921 377

## விண்ணப்பம் கோரல்



பல்தேசிய நிதிச்சேவை நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் தனது கிளையினை விஸ்தரிக்கும் பொருட்டு சந்தைப்படுத்தல் துறைக்கு புதிய ஆளணியினரை உள்வாங்குவதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

விண்ணப்பதாரிகள் க.பொ.த சாதாரண தரத்தை பூர்த்தி செய்தவராகவும் சிறந்த ஆளுமை, மக்கள் தொடர்பாடல், நிதி கையாளும் திறன் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:-**

நிறுவனமானது க.பொ.த உயர்தரத்தில் (2015 Batch) சிறந்த பெறுபேறு கிடைக்கப்பெற்றவர்களிடமிருந்து அதிக விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.
விண்ணப்பதாரிகள் தங்களின் சுயவிபரக் கோவையை 25-01-2016 திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

Director,
No -57, 2B W.A Silva Mawatta
Wellawatte, Colombo -06
(3142)

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிரித்தானிய பட்டப்படிப்புகள்

NEW INTAKE 2016
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA
Hotline 077 710 2131
(C-3299)

## ஐ.எஸ்...

த்துள்ளார்.

அதன் அடிப்படையில் மாதாந்தம் இரண்டு இலங்கையர்கள் குறித்த அமைப்பில்இணைந்து கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந் நிலையில் இலங்கை பயங்கரவாதத்திற்குள் தள்ளப்படுவதனை கட்டுப்படுத்த வேண்டியது அவசியமானது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனினும்ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில ஐ:எஸ் தீவிரவாத அமைப்பிற்கு ஏதிராக இலங்கை முன்னின்று செயற்படுவதாக பேராசிரியர் ரொஹான குணரட்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் முஸ்லிம் மக்கள மற்றும் முஸ்லிம் அமைப்புகளுடன் நெருங்கி செயற்படுவதே இதற்கு காரணம் என அவர் கூறியுள்ளார்.

மேலும் இலங்கை அரசாங்கம் அனைத்து இஸ்லாமிய அமைப்புக்களையும் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும் என பேராசிரியர் ரொஹான் தெரிவித்துள்ளார்.

(செ-12)

## இறுதிச்சந்தர்ப்பம்

CIMA-UK ENGINEERING-USA
BIT - University of Colombo
புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள்

கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோர், பல்கலைக்கழக மாணவர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடு செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரச வேலையிலும், வங்கிகளிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிகசம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக்குறைந்த கல்வித்தகைமை க.பொ.த.சா.த சித்தி. விண்ணப்ப முடிவு திகதி 10 ஜனவரி, புலமைப் பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும் உங்கள் முழுப்பெயர், கற்கைநெறி பிறந்த திகதி என்பவற்றை 772395895 ற்கு sms செய்யவும். பதிவுக்கட்டணம், வருடாந்தக்கட்டணம், கற்கை நெறிக்கட்டணம், பரீட்சைக் கட்டணம் என்பன புலமைப்பரிசிலாக வழங்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களை யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள MCS நிறுவனத்தில். A.L 2015 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். (C-3344)

## திருமறைக் கலாமன்றம்
## கலைத்தூது அழகியல் கல்லூரி

எமது கல்லூரியினால் நடத்தப்படும் பின்வரும் பாடங்களுக்கான 2016 ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பிரதான பாடங்கள்**

★வாய்ப்பாட்டு ★நடனம் (பரதம், கதகளி, மோகினி)
★வீணை ★வயலின் ★புல்லாங்குழல் ★மிருதங்கம்
★ஓர்கன் (கீபோட்) ★கிற்றார் ★ட்றம் ★ஒக்ரோபாட்
★சித்திரம் ★நாடகமும் அரங்கியலும்

**சிறப்புப் பாடங்கள்**

★கூத்து ★கண்டிய நடனம் ★யோகாசனம்
★அழகுக்கலை (முக ஒப்பனை; தலையலங்காரம், கேக் ஐசிங் , சேலை அலங்காரம், தையல்)
★பண்பாடு (கிறிஸ்தவக் கலைகள், சைவசித்தாந்தம்)

**துணைப் பாடம்**

★ஆங்கிலம்

இப் பாடங்களை பயில விரும்புவோர் எமது கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து 25-01-2016 திங்கட்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும்

அதிபர்,
கலைத்தூது அழகியல் கல்லூரி
இல. 128 , டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே 021 222 9419
(C-3417)

## Study Medicine

## MBBS / MD

Approved by Sri Lankan Medical Council
UK, ECFMG-USA , IMED, WHO & UNESCO

* Raiga Strands University - Latvia
* International Medical University - Malaysia
* Manipal University - India / Malaysia
* Segi University - Malaysia
* Sichuan University - China
* China Medical University - China
* Tongji University - China
* Guangxi University - China
* Zhengzhou University - China
* Ningbo University - China
* Gomel State Medical University - Belarus
* Vitebsk State Medical University - Belarus



Admission Open for the Year 2016
ICS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B-1/1 Galle Road, Colombo 06
Appointments 077 3013060
(C-3419)

## BIOLOGY (2018 A/L New Batch)

Tamil and English Medium
K.Kalaivanan
Con No : 071 34 38 442
021 205 2716
barathyvanan@gmail.com
(3139)

## Personal and Group Classes

3rd mile post lane,K.K.S Road, Kokuvil
Batch I - Saturday and Sunday Eve 5.00pm-6.30pm
Batch II- Tuesday and Wednesday 6.00am-7.00am

## CCTV CAMERA



- இணையத்தளம், கைத்தொலைபேசி மூலம் கண்காணிக்கும் வசதி.
- ஒரு வருட உத்தரவாதம்
- விற்பனைக்கு பிந்திய சேவைகள்.

மேலதிக விபரங்களுக்கு 075 6 676767

உங்கள் வியாபார நிறுவனங்களை, வீடுகளை மற்றும், சொத்துக்களை 24 மணிநேரமும் பாதுகாக்கும் நோக்குடன்

**4Ch Package**
Rs 75,990 Only
4Ch StarTech DVR
1000GB HDD
4 IR Camera 1.3 MP
20" New Moniter
Free Installation
*condition apply
(C-3424)



Hotline 021 5 676767
AJ SYSTEMS I (PVT) LTD
Anyplace, Anywhere, Anytime ! Your POS & CCTV Partner
இல. 315,1/2 பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
Tel : 0212219234 Email: info@aj-sys.lk Web: www.aj-sys.lk

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 10.01.2016 தொலைபேசி : 021 222 3378

நாதம் 48

# பேரவை உதித்ததால் கூட்டமைப்பு விழித்தது





## ஆட்சியைக் கவிழ்க்க சீனா செல்கிறாரா மகிந்த?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**ப**ண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. ஆலடி மாநாட்டிற்கு உறுப்பினர்கள் அனைவரும் வருகை தந்திருந்தனர்.

இறைவணக்கத்தோடு மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் கூறியதும் மாநாட்டில் இருந்தவர்கள் அனைவரும் எழுந்து நின்று இறைவழிபாடு செய்தனர்.

**பண்டிதர்:** தமிழ்மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் எங்க பார்த்தாலும் அதுதான் பேச்சு. ஊடகங்களும் அதற்கு நல்ல முக்கியத்துவம் கொடுக்கின்றன.

**வாத்தியார்:** மக்கள் அமைப்பல்லோ. எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா அதில இணைத் தலைவராக இருக்கிறதால சனங்களும் மக்கள் பேரவை தொடர்பில அதிகூடிய கவனமும் கரிசனையும் கொண்டுள்ளனர்.

**கங்காணி:** ஏன் வாத்தியார் மதத்தலைவர்களும் அதற்கு தங்கட ஆதரவைப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளனர் தானே.

எங்கட நல்லை ஆதீன குரு முதல்வர் வணக்கத்திற்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், வீணாகான குருபீடத்தின் பீடாதிபதி வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள், யாழ்ப்பாண ஆயரின் பிரதிநிதி அருட்தந்தை மங்களராஜா அடிகளார், சிவில் சமூகத்தின்ர சார்பில் அருட்தந்தை ரவிச்சந்திரன் அடிகள் என அனைவரும் தமிழ்மக்கள் பேரவையின்ர தொடக்க நிகழ்வில் கலந்து கொண்டு தங்கட ஆசியை வழங்கினவியல் அல்லோ.

மூப்பர்: அதுமட்டுமல்ல கங்காணியார். எங்கட மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் மேதகு யோசெப் பொன்னையா ஆண்டகை, திருகோணமலை மாவட்ட ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை ஆகியோரும் தமிழ்மக்கள் பேரவையை வரவேற்றுள்ளதுடன் இப்படியொரு அமைப்பு நமக்குத் தேவை என்று கூறியிருக்கினம் எண்டால் தமிழ்மக்கள் பேரவைக்கு எதிராகக் கருத்து வெளியிட்டவியளுக்கு பலத்த அடியல்லோ.

**பண்டிதர்:** தமிழ் மக்கள் பேரவையை மதத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டமை அந்தப் பேரவைக்குக் கிடைத்த பெருவெற்றி. அதிலும் பேரவையின்ர இணைத் தலைவராக இந்த யாழ்ப்பாண மண்ணில இருந்து பணி செய்கின்ற இருதய வைத்திய நிபுணர் டாக்டர் பூ.லக்ஷ்மன் மற்றும் பொது வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். சிவன்சுதன் ஆகியோரும் இடம்பெற்றிருக்கினம் எண்டால் அந்த அமைப்புக்கு எங்கட மக்கள் தங்கட ஆதரவைத் தெரிவிப்பினம் தானே.



**வாத்தியார்:** பண்டிதர் சொல்லுறது நூறு வீதம் உண்மை. போர்க்கால சூழ்நிலையிலும் இந்த மண்ணில இருந்து கடமையாற்றிய எங்கட மருத்துவ நிபுணர்களுக்கு எங்கட மக்கள் எண்டைக்கும் தலை வணங்குவினம். நான் அடிச்சுச் சொல்லுறன் தமிழ் மக்கள் பேரவையை ஒரு தம்பியாலும் அசைக்க முடியாது. ஏனென்றால் எங்கட மண்ணில எங்களோட நிண்டு நாங்கள் பட்ட அத்தனை துன்பங்களையும் அனுபவித்த எங்கட மருத்துவ நிபுணர்கள் அந்த அமைப்பில முக்கிய பங்கை வகிக்கினம் எண்டால் எங்கட சனங்கள் நிச்சயம் தங்கட பூரண ஆதரவைக் கொடுப்பினம் என்பது மறுக்க முடியாத உண்மை.

**விதானையார்:** தமிழ் மக்கள் பேரவை பற்றி யார் என்ன குறை சொன்னாலும் அதுபற்றி பேரவையில இருக்கிறவியள் மனம் சோராமல் தங்கட பணியை முன்னெடுக்க வேணும். என்ர சிற்றறிவில நான் பேரவைக்கு ஆலோசனை சொல்லுறதா இருந்தால் முதலில எங்கட கிராமங்களுக்கு செல்லுங்கள். அந்தக் கிராமத்தில இருக்கிற மக்களோட கதையுங்கள். அவர்களுக்குப் பணி செய்யுங்கள். எல்லாம் சரியா வரும்.

தமிழினம் நல்லா வரவேணும் எண்டு ஆரு நினைத்தாலும் எங்கட ஊருகளில கஷ்டப்பட்டு துன்பப்பட்டு வாழமுடியாமல் தவிக்கிற எங்கட மக்களுக்கு உதவி செய்யவேணும்.

**கங்காணி:** விதானையார் சொல்லுறது முற்றிலும் உண்மை. அண்மையில் வற்றாப்பளையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின்ர தாய் ஒருவர் தீக்காயங்களால் பாதிக்கப்பட்டு இறந்தவர் அல்லோ. அந்தத் தாய் ஒரு முன்னாள் போராளி. சாப்பிடக்கூட வழியில்லை எண்டு அந்தத் தாயின்ர சின்னப் பெண் பிள்ளைகள் கூறியபோது எத்தனையோ பேற்ற இருதயம் பற்றி எரிஞ்சுது.

அடக்கடவுளே! சாப்பிட வழியில்லாமல் அந்தப் பிள்ளையள் இருக்க நாங்கள்... அதால தான் சொல்லுறம் தமிழ் மக்கள் பேரவை ஊர் தோறும் சென்று இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள், சமூக ஆர்வலர்கள் அடங்கிய குழுக்களை அமைத்து மக்களின்ர கஷ்டங்களை நீக்க வேணும்.

புலியளோட இருந்த சிலர் எவ்வளவு வசதியா இருக்க போராளியாக இருந்த பிள்ளைகள் சாப்பிட வழியில்லை எண்டால் எங்களைக் கடவுள் மன்னிப்பாரோ.

**பண்டிதர்:** தீக்காயங்களுக்கு ஆளான அந்தப் பெண் இறந்துவிட்டார். அந்த மூன்று பெண் பிள்ளைகளும் பெரும்கஷ்டத்தில் வாடுகினம் எண்டு செய்தி வந்ததும் எத்தனையோ பேர் தாங்கள் உதவி செய்வதாக முன்வந்ததைக் கண்டு நான் அழுது போட்டன் பாருங்கோ.

எங்கட மக்கள் எவரும் பசியிருக்க ஒருக்காலும் விடமாட்டினம் என்பதற்கு இதைவிட வேறு என்ன தேவை.

**வாத்தியார்:** ஏன் பண்டிதர் எங்கட ஊருகளுக்கு மடம் என்று பெயர் இருப்பதை நீங்கள் மறந்தோ விட்டியள். கந்தர்மடம், மருதனார்மடம், சுப்பர் மடம், ஆறுகால்மடம் இப்படி மடங்களின்ர பெயரால ஊர்ப்பெயர்கள் அமைந்திருக்குது. யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில ஒரு வீதிக்குப் பெயர் அன்ன சத்திர வீதி. இதுக்கு என்ன பொருள் எண்டு ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கோ.

அன்னதானம் வழங்குவதற்கு சத்திரம் அமைத்த எங்கட மூதாதையர்களின்ர பண்பாடுகள் எங்களை விட்டு ஒரு காலமும் போகாது. என்ன செய்யிறது நாசமறுந்த யுத்தத்தால எங்கட பண்பாட்டு அடையாளங்கள் அழிஞ்சு போய்ச்சுது.

ஆனாலும் எங்கட பண்பாடுகள் எங்களிட்ட எங்கோ ஒரு மூலையில இருக்கத்தான் செய்யும். தேவை ஏற்படுகிற பொழுது அந்தப் பண்பாட்டுச் சிந்தனைகள் கட்டாயம் வெளிப்படும். அதற்கு நல்ல உதாரணம்தான், தீக்காயங்களுக்கு ஆளாகி இறந்துபோன அந்த இளந் தாயின்ர சின்னக் குழந்தையள காப்பாற்ற எங்கட சனம் போட்டி போட்டு உதவுகிற பரோபகாரம்.

**கங்காணி:** அதுசரி வாத்தியார். யாழ்ப்பாண மாநகர சபை தனது எல்லைக்குட்பட்ட பகுதியில குப்பை கூழங்கள், திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு ஒரு நல்ல திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிது.

நாங்கள் அத்தனை பேரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவேணும். எங்கட இடங்களை நாங்கள் தானே சுத்தமாக வைத்திருக்க வேணும். எங்கட இடங்களை நாங்கள் துப்புரவாக வைத்திருப்பதென்று முடிவு செய்து அதற்காகப் பாடுபடுவமாக இருந்தால் யாழ்ப்பாணம் குட்டிச் சிங்கப்பூர் என்று சொல்லுவதற்கு அதிக காலம் எடுக்காது.

இப்படி கங்காணியார்கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தனிக்காட்டு ராஜாவின் பார்வையில் மான்குட்டி துள்ளினாலும் பயம்தான்




தனிக்காட்டு ராஜாவுக்கு மான்குட்டி துள்ளிக் குதிப்பதும் விருப்பத்திற்குரியதன்று.

மான் குட்டியின் துள்ளலும் தன் எதேச்சதிகாரத்திற்கு ஆபத்தாக வந்துவிடுமோ என்ற பயம்தான் அதற்குக் காரணம்.

எல்லாம் இருந்த இருந்தபடியே அசையாமல் இருக்க, தனிக்காட்டு ராஜா மட்டுமே அசையவும் அனுபவிக்கவும் முடியும் என்பதாக நிலைமை இருக்க வேண்டும் என நினைப்பதே தனிக்காட்டுத் தனமாகும். எனினும் இத்தகைய தனிக்காட்டுத் தனம் நீண்ட காலத்திற்கு நிலைத்திருப்பதில்லை.

அத்தகையதொரு நிலைமை நீடித்தால் அதனால் அழிவைத் தவிர ஆக்கத்திற்கு இடமிருக்க முடியாது.

தனிக்காட்டு ராஜா என்ற சூழமைவை உடைத்தெறிவதில் மக்கள் ஒருபோதும் பின்னிற்கக் கூடாது. ஏனெனில் அத்தகைய நிலைமை மக்களையே கடுமையாகப் பாதிக்கும்.

ஆக, மக்கள் கிளர்ந்தெழுந்து ஜனநாயகம் வேண்டும் என்று கோஷம் போட்டால் அதுவே தனிக்காட்டு ராஜாவின் ஆட்சி முடிவுறுவதற்கான முதற் சங்கொலியாகும்.

இந்தவகையில் ஈழத் தமிழ்மக்களின் அரசியல் சூழமைவு என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் தலைமைக்குள் அகப்பட்டுள்ளதால் அரசியல் நடவடிக்கைகள் என்பன மிகவும் மந்தமாக இருப்பதை அவதானிக்க முடியும்.

இதற்குக் காரணம் தனிக்காட்டு ராஜா என்ற ஒரு தனியுரிமைத்தனத்தை கூட்டமைப்பு கொண்டிருப்பதாலாகும்.

இதனால் அரசியல்வாதிகள் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தின் மூலம் தாம் எட்டக்கூடிய வருமானங்களை எட்டிக் கொள்வது அரசியல் புலத்தில் தமக்கான இருப்பை நிலை நிறுத்துவது, தத்தம் எதிரிகளை ஓரங்கட்டுவது என்ற நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகச் செயற்பட்டு வருகின்றனர்.



இத்தகையதோர் நினைப்பில் தம்மைத் தெரிவு செய்த தமிழ்மக்களுக்கான தங்களின் பணி என்ன? என்பது

## தமிழ் மக்கள் பேரவையை காட்டி உரிமை பெறும் உபாயம் காண்மினே

பற்றிய நினைப்பு அறவே இல்லாமல் போய்விட்டது.

இவை ஒரு புறம் நடந்தேற மறுபுறத்தில் கூட்டமைப்பின் தலைமையைக் கைப்பற்றும் உள்நோக்கங்களும் கடுமையாக இயங்கு நிலையில் இருப்பதைக் காணமுடிகின்றது.

கேட்பதற்கு யாரும் இல்லை என்ற ஒரு மோசமான ஒரு நிலைமை தமிழ்மக்களுக்குரியதான போது எப்படியும்



நடக்கலாம் என்பது எல்லை மீறிக்கொண்டது. இது அவ்வளவு நல்லதல்ல என்ற கட்டத்தில் தமிழ்மக்கள் பேரவை என்ற அமைப்பு உருவாகியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

தமிழ்மக்கள் பேரவையின் செயற்பாடு என்ன என்பதற்கு முன்னதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இயங்கு நிலையை ஊக்கப்படுத்துவது கூட தமிழ்மக்கள் பேரவைக்கு வெற்றியைத் தரக்கூடியது.

அந்த வகையில் தமிழ் மக்கள் பேரவை உருவாகியதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நிறைய மாற்றம் தெரிகின்றது.

முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்களுடன் சந்திப்பது முதல் தமிழ்மக்களிடம் செல்லவேண்டும் என்ற நினைப்பை ஏற்படுத்தியது வரையில் பேரவையின் உருவாக்கமே காரணம் எனலாம்.

எதுவாயினும் தமிழ் மக்கள் பேரவையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான அமைப்பாக அல்லது மாற்று அரசியல் தலைமையாக பார்க்கப்படுவதன் பின்னணியில் கூட்டமைப்பின் போக்கில் மக்கள் அதிருப்தியைக் கொண்டுள்ளனர் என்ற உண்மையைக் கூட்டமைப்பிற்கு ஆதரவானவர்கள் அறிந்திருப்பதே காரணமாகும்.

அதாவது கூட்டமைப்பின் செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கு எந்தவகையிலும் பிரயோசனப்படவில்லை. அவர்கள் வேறோர் நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்றனர் என்ற கருத்து நிலை தமிழ் மக்களிடம் பரவலாக உள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு நல்ல மனிதர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மகிந்தவின் ஆட்சிக்குப் பின்பு நாட்டை நல்லாட்சிப் பாதைக்கு இட்டுச் செல்லவேண்டும் என நினைக்கின்ற ஒருவர் என நாம் அவர் மீது நம்பிக்கை கொண்டாலும் தமிழ்மக்களுக்கான தீர்வை வழங்குவதென்பதில் சிங்களத் தரப்பிடம் பெருந்தன்மை குறைவாக இருப்பதையே காண முடிகின்றது.

இதனால்தான் நோர்வே தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அண்மையில் கூறினார் தமிழ்மக்களின் உரிமைகளை சிங்கள மக்கள் ஒருபோதும் அன்பளிப்பாக்த் தரமாட்டார்கள். மாறாக தமிழ் மக்கள் ஜனநாயக வழியில் போராடியே தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமென்று. எனினும் எரிக் சொல்ஹெய்மின் கூற்று அறியப்படாத விடயமாகவே மக்களிடம் உள்ளது.

தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்குவது, தம்மையும் சிங்கள மக்களையும் அந்நியப்படுத்தும் என்று ஆட்சியாளர்கள் நினைக்கின்றனர். எனவே தமிழ்மக்களுக்கு உரிமைகளைக் கொடுக்கும்போது சிங்களப் பேரினவாதிகள் தென்பகுதியில் மக்களைக் குழப்பாமல் இருக்கும் வகையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு இருக்க வேண்டும் என்பது சமகால ஆட்சியாளர்களின் முடிவு.

எனவே தமிழ்மக்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதைச் சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறுவதைச் செய்யாமல், தமிழ் அரசியல் தலைமைகளை வளைத்துப் போட்டு; அவர்கள் (சிங்களப் பேரினவாதிகள்) குழப்புவார்கள். நீங்கள் விட்டுக் கொடுங்கள். உங்கள் விட்டுக் கொடுப்பு எதுவரை செல்ல வேண்டுமென்றால், நாங்கள் தருவதை வாங்குவது என்பதாக இருக்க வேண்டும் என்பது தான்.

இதற்காக எதிர்க்கட்சித் தலைவர் பதவி உட்பட நீங்கள் உங்களுக்காக, உங்கள் குடும்பங்களுக்காகக் கேட்பதைத் தருவோம் என்ற உடன்பாட்டில் தமிழ் மக்களின் உரிமைகள் விழுங்கப்படுகின்றன.

இத்தகையதொரு நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்கள் மீது உண்மையான விசுவாசத்தைக் கொண்டிருக்குமாயின் நாங்கள் எல்லாவற்றையும் விட்டுக்கொடுக்க முடியாது. தமிழ்மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கம் குறைந்த தீர்விற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் என்று கூறி சமகால ஆட்சியாளர்களிடம் எங்களின் உரிமைகளைக் குறைய விடாமல் பாதுகாப்பது இராஜதந்திரம்.

இருந்தும் அதனைச் செய்வதற்கு நாங்கள் தயாரில்லை. சிங்கள அரசியல்வாதிகளை சுட்டிக் காட்டி அதிகம் தரமுடியவில்லை என்று அவர்கள் சொன்னால், இவர்கள் பேரவையைச் சுட்டிக்காட்டி குறைய வாங்க விடமாட்டார்கள் என்று சொல்வது தான் இருப்பதைப் பயன்படுத்தும் நுட்பமாகும். இதைச் சம்பந்தர் செய்வாரா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

விதுரன்




# அல்ப்ரெட் ராஜாவும் பிச்சைக்காரனும்

அரண்மனையை ஒட்டி வசித்துவந்த பிச்சைக்காரன் ஒருவன், அந்த அரண்மனைக் கதவில் ஒட்டப்பட்டிருந்த அறிவிப்பைக் கண்டான். அதில், விருந்தளிக்கப்போவதாகவும், அரச உடை அணிந்து வருவோர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிச்சைக்காரன், தான் அணிந்திருந்த கந்தல் உடைகளை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டான். நிச்சயமாக அரசரும் அவருடைய குடும்பத்தினரும் மட்டுமே ராஜ உடை உடுத்திருக்க முடியும் என எண்ணினான்.

திடீரென அவனுக்குள் ஓர் எண்ணம்... அந்த மாதிரி எண்ணுகிற அளவுக்குத் தனக்குள் ஏற்பட்ட துணிச்சலைப் பற்றி யோசித்தபோது, அவனுக்குள் நடுக்கம் ஏற்பட்டது. இருந்தாலும் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, அரண்மனை வாசலை அடைந்தான்.

வாயிற்காவலனிடம், "ராஜாவைப் பார்க்க வேண்டும்" என்றான். அந்தக் காவலன், அரசரிடம் அனுமதி வாங்கி வந்தான். உள்ளே வந்த பிச்சைக்காரனிடம், "என்னைப் பார்க்கவேண்டும் என்றாயாமே?" என்றார் அரசர். ஆமாம்! நீங்கள் அளிக்கும் விருந்தில் கலந்துகொள்ள எனக்கும் ஆசை. ஆனால், என்னிடம் ராஜ உடைகள் இல்லை. "என்னை அதிகப்பிரசங்கி என நினைக்காவிட்டால், உங்களது பழைய உடையை அளித்து உதவினால், அதனை அணிந்துகொண்டு விருந்துக்கு வருவேன்" என்றான் மிகவும் பௌயமாக.

அதேநேரம், மன்னர் என்ன சொல்வாரோ என நடுங்கியபடி, அவரையே பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால், மன்னர், அவனுக்கு ராஜ உடை ஒன்றை வழங்கினார். அந்த உடையை உடுத்திக் கொண்டவன், கண்ணாடி முன் நின்று கவனித்தான்; தோற்றத்தில் கம்பீரம் மிளிர்வதைக் கண்டு வியந்தான்!

அப்போது மன்னர் அவனிடம், "விருந்தில் கலந்துகொள்வதற்கு தகுதி உடையவனாகிவிட்டாய். அதைவிட முக்கியமான ஒன்று... இனி உனக்கு வேறெந்த உடையும் தேவைப்படாது. உன் ஆயுள் முழுவதும் இந்த உடை அப்படியே இருக்கும். துவைக்கவோ தூய்மைப்படுத்தவோ அவசியம் இருக்காது" என்றார். கண்ணீர்மல்க, மன்னருக்கு நன்றி கூறிவிட்டுக் கிளம்ப எத்தனித்தவன், மூலையில் கிடந்த தனது பழைய ஆடைகளைக் கவனித்தான். அவனது மனம் சலனப்பட்டது. ஒருவேளை, அரசர் கூறியது தவறாக இருந்து, இந்த உடைகள் கிழிந்துவிட்டால்.. அப்போது நமக்குப் பழைய உடைகள் தேவைப்படுமே! என யோசித்தவன், சட்டென்று தன் பழைய உடைகளை வாரிக் கொண்டான்.

வீடு வாசல் இல்லா அவனால் பழைய துணிகளை எங்கேயும் வைக்க முடியவில்லை. எங்கே போனாலும் பழைய ஆடைகளையும் சுமந்தே திரிந்தான். மன்னர் அளித்த இரவு விருந்தையும் அவனால் மகிழ்சியாக ஏற்க முடியவில்லை. அடிக்கடி கீழே விழுந்துவிடும் பழைய துணிகளைச் சேகரிக்கும் மும்முரத்தில் பரிமாறப்பட்டதில் பதார்த்தங்களைச் சரிவர ருசிக்க முடியவில்லை. அரசர் சொன்னது உண்மை என்பது நாளடைவில் அவனுக்குப் புரிந்தது.

அவர் கொடுத்த ஆடை அழுக்காகவோ, கிழியவோ இல்லை. ஆனாலும் அந்த யாசகனுக்குப் பழைய உடைகள் மீது நாளுக்கு நாள் பிடிப்பு அதிகாமானது. மக்களும் அவனது ராஜ உடையைக் கவனிக்காமல், அந்த கந்தல் மூட்டையையே பார்த்தனர். அவனைக் கந்தல் பொதி கிழவன் என்றே அழைத்தனர். இறக்கும் தருணத்தில் இருந்த அவனைப் பார்க்க, அரசர் வந்தார். அவனது தலைமாட்டில் இருந்த கந்தல் மூட்டையைப் பார்த்து, அரசரின் முகம் சோகமாவதைக் கண்டான்.

ஆரம்பத்திலேயே அரசர் சொன்ன செய்தி நினைவுக்கு வந்தது. பழைய துணி மூட்டை, அவனது வாழ்நாளின் மொத்த மகிழ்ச்சியையும் பறித்துவிட்டது. அந்த யாசகனிடம் மட்டுமல்ல, நம் எல்லோரிடமும் அப்படியொரு மூட்டை இருக்கிறது. அதனுள் விரோதம், கோபம், கவலை, சோகம், பகைமை... எனப் பல பெயர்களில் வேண்டாத பொருட்கள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாப்பதிலேயே கவனம் செலுத்துவதால், நமது வாழ்வில் வீசுகின்ற மகிழ்ச்சித் தென்றலை நுகர முடியாமல் இருக்கிறோம். நம்முடைய தீராத கோபம், எத்தனை இன்பம் வந்தாலும் , அதை ஏற்றுக்கொண்டு ஆனந்தப்பட முடியாமல் செய்துவிடுகிறது.

அரண்மனைகளில் கூட, இன்றும் பலர் பிச்சைக்காரர்களாகவே வாழ்கின்றனர். அனாதை ஆச்சிரமங்களில் அரசர்களாக வாழ்வோரும் உண்டு. மனதில் இருக்கிறது மகிழ்ச்சி. வாழ்க்கை தினமும் நமக்கு புதுத் துணிகளை நெய்து தருகிறது. நமக்கோ, என்றோ வாங்கிய பல பொருட்கள் நிரம்பி இருக்கின்றன. அவற்றால் எந்தப் பலனும் இல்லாவிட்டாலும், தூக்கி எறிய மனமில்லை. வீட்டையே குப்பைத் தொட்டிக்கு இணையாக மாற்றி குடித்தனம் நடத்துவோரும் இருக்கின்றனர்.

இல்லத்தை மட்டுமல்ல, உள்ளத்தையும் குப்பைத்தொட்டியாக்கி பழைய சரக்குகளைப் பத்திரப்படுத்தினால், அவற்றின் அழுகல் நாற்றம் உதடுகளின் வழியே சொற்களாகவும் கரங்களின் வழியே செயலாகவும் வெளிப்பட்டு, வேதனையை விநியோகிக்கும். வெளிச்சத்தை வழங்காது.




# முப்பரிமாணக் கண்ணாடியால் பார்க்கும் கும்பிடுபூச்சிகள்...!

சிறிய- எளிமையான மூளையமைப்பைக் கொண்டுள்ள கும்பிடுபூச்சிகள், விஞ்ஞானிகளால் ஆய்வுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

படத்தில் உள்ளபடி முப்பரிமாணக் கண்ணாடிகள் அணிவிக்கப்பட்ட கும்பிடு பூச்சிகள், ஆய்வாளர்களுக்கு பயனுள்ள கண்டுபிடிப்புகளுக்கு வழி சமைத்துள்தாக நம்பப்படுகிறது.







இத்தகைய ஆய்வொன்றில் ஈடுபட்டுள்ளது, நியூகேஸ்ரில் பல்கலைக்கழகம்.

குண்டூசித் தலையைவிட சிறியதான மூளையைக் கொண்டுள்ள இந்தக் கும்பிடு பூச்சிகள், எவ்வாறு மிகவேகமாக நகருகின்றன,உருமறைப்புக்கான நிறமாற்றத்தை பெறுகின்றன, தமது வித்தியாசமான ஒலியை (பாடலை) எழுப்புகின்றன என்பதை இந்தப் பரிசோதனை வாயிலாக விஞ்ஞானிகள் காண்கிறார்கள்.

பாதிப்பில்லாத தேன் மெழுகு நூல் கொண்டு பச்சை, நீல நிறமான முப்பரிமாணக் கண்ணாடிகள் அவற்றுக்குப் பொருத்தப்பட்டுள்ளன. முப்பரிமாண வீடியோ மூலம் அப்பூச்சிகளுக்கு மிக விருப்பமான உணவுகளின் உருவகப்படுத்தல்களை (படங்கள்) திரையில் காண்பிக்கின்ற பொழுது, அவை அவற்றை பிடிப்பதற்கு மட்டும் முயற்சி செய்கின்றன. பச்சை, ஊதா கண்ணாடிகளை அணிந்திருக்கும் ஒரு கும்பிடு பூச்சியின் கண்ணாடிகள், சில வாரங்களின் பின்பு தானாக விழுந்துவிடுகின்றன. கண்ணாடி அணிந்திருப்பது அவற்றுக்கு அசௌகரியமாக இருப்பதாக இல்லையென்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

பேராசிரியர் ஜென்னி றீட் சொல்கிறார்... தனது ஆய்வுக்குழுவினரின் ஆராய்ச்சியானது, கணினிமற்றும் இயந்திரமனிதர்களில் முப்பரிமாணப் பார்வையை பயன்படுத்துவதில், புதிய வழிவகைகளைத் தோற்றுவிக்கும் ஒரு திருப்புமுனையாக அமையும் என்று. மேலும் ஒரு பூச்சியின் சில மில்லி மீற்றர் குறுக்களவேயுள்ள, சிறிய மூளை விஞ்ஞானிகளுக்கு பின்வரும் முறைகளில் பயனுள்ளதாக அமைகிறதாக அவர் தெரிவிக்கின்றார்.

1. இவ்வாறு முப்பரிமாணக் கண்ணாடிகளை அணிவித்த கும்பிடு பூச்சிகள், முப்பரிமாணப் பார்வை பற்றிய படிப்பில் சிறந்த ஒரு கருவியாக அமையும். இதன்படி சிக்கலான, எண்கணித அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட பல ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடியும்.

2. முப்பரிமாணக் கண்ணாடிகள் தானாக விழும்வரை அவை, அசௌகரியப்படுவதாக தெரியவில்லை என்பது ஆய்வுக்கு குந்தகமற்ற தன்மையை அளிக்கிறது.

3. இந்த முப்பரிமாணக் கண்ணாடி அணிவிக்கப்பட்ட கும்பிடு பூச்சிகள் எளிமையான மூளை அமைப்பைக் கொண்டிருப்பதால் ஆய்வுகளை இலகுவாக்குகிறது.

மேலும், இக்கண்ணாடி அணிவிக்கப்பட்ட கும்பிடுபூச்சிகள், மகிழ்சியாக உள்ளனவா என்றால், சொல்வது கடினம். ஆனால், அவை முப்பரிமாணக் கண்ணாடியை அணிந்திருக்கிறபொழுதும், அணியாத பொழுதும் அவற்றின் கூட்டுக்குள் தமது அதே பாடலை (விசேடமான ஒலி) பாடுகின்றன என்கிறார் ஜென்னி.






## வியாசர் பதில்கள்

**அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்**

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



மகாபாரதம் எனும் காவியம் ஏன் எழுதப்பட்டது?

மனிதன் சந்தோசமாக வாழ சொந்தமா சொத்தா அவசியம்?

முதலமைச்சர் விக்கி பற்றிய கம்ப வாரிதியின் கருத்துப்பற்றி உமது ...

**இன்பா — சுழிபுரம்**

**சேவை எவ்வாறு இருக்க வேண்டும்?**

தெருத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளை யாருக்கு உடைக்காமல் இருந்தால் சரி. இப்போது பலபேர் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**ஜனு — அச்சுவேலி**

**முதலமைச்சர் விக்கி பற்றிய கம்பவாரிதியின் கருத்துப்பற்றி உமது கருத்தென்ன?**

தன் பேச்சாற்றலால் உலகத்தையே கட்டியாளும் மதிப்பிற்குரிய கம்பவாரிதி அவர்கள் ஊழல், சுயநலம் கொண்ட பல அரசியல் வாதிகளை விட்டுவிட்டு தமிழர் மனங்களில் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக் கும் நீதியரசர் விக்னேஸ்வரன் ஐயாவை பற்றி எழுதிய கருத்துக்களைப் படிக்கும் போது எம் நெஞ்சம் நொருங்கிவிட்டது.

**நளாயினி — மீசாலை**

**சினிமா பாடலா பக்திப்பாடலா சிறந்தது?**

'வேலவா வடி வேலவா வேலனாக
வந்து நின்ற ...'

'ஐயப்பா சரணமென்று ஆனந்தமாய்
கும்பிடுவோம் ...'

'ஒருமணிக் கொருமணி எதிர் எதிர் ஒலித்திட ...'

இந்தப் பாடல்களுடன் உலகில் ஒலிக்கும் எந்தப்பாடலாவது போட்டி போட்டு ஜெயித்துவிட முடியுமா? சினிமாப் பாடல்கள் பொழுதுபோக்கானவை.பக்திப்பாடல்கள் எம் வாழ்வியலுடன் கலந்தவை.

**சிந்து — அல்வாய்**

**மனிதன் சந்தோசமாக வாழ சொந்தமா சொத்தா அவசியம்?**

தண்ணீருக்குப்பதில் சில்லறைகளையும் சாப்பாட்டிற்குப் பதில் நோட்டுக்களையும் சாப்பிட முடியும் என்றால் சொத்தெனலாம். உண வளிக்கும் உள்ளமும் கண்ணீர் துடைக்க கைகளும் இறுதியில் சுமந்து செல்ல நான்கு தோள்களுமிருந்தால் சொந்தமென்று சொல்லலாம்.

**துசி — மாங்குளம்**

**வீதியோர சாப்பாட்டுக் கடைகள் பற்றி?**

ஒரு காலத்தில் ஏழைகள் மட்டுமே சாப்பிடும் இடமாக இருந்தது. ஆனால் இப்போது காரில் செல்பவர்கள் கூட கடை அருகே நின்று மாசி வடையைருசிக்கிறார்கள். எல்லாம்காலமாற்றமே.



**சஞ்சயன் — யாழ்ப்பாணம்**

**தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வது எப்படி?**

உங்கள் பிள்ளை பென்சிலை கட்டரில் தீட்டுகிறது. தீட்டும்போது இரண்டுமுறை கூர் உடைந்து விடுகிறது. அப்போது அவன் உங்களிடத்தே வருவான் அப்பா தீட்டும் போது கூர் முறிந்துவிடுகிறது என. உன்னால் முடியும் ஒரு காரியத்தை செய்யும்போது அதில் கண்ணும் கருத்துமாய் இருந்து அதை முடிக்க வேண்டும் என்ற உத்வேகத்தில் செயற்படு என தட்டிக் கொடுங்கள். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதே.

**சமீதன் — நயினாதீவு**

**பொங்கலுக்கு வெளியாகும் படம் என்ன?**

சிவகார்த்திகேயனின் ரஜனிமுருகன், பாலாவின் இயக்கத்தில் சசிக்குமார் நடிக்கும் தாரை தப்பட்டை, விசாலின் கதகளி, உதயநிதியின் கெத்து.

**வி.வி.குமார் — புலோலி**

**விநாயகரை யாரும் வென்றதாய் வரலாறு உண்டா?**

விக்கினங்கள் தீர்க்கும் விக்னேஸ்வரனை யார் எதிர்க்கிறார்களோ? தொடங்கும் நிகழ்வில் முன்னிறுத்த மறுக்கிறார்களோ? அவர்கள் அழிவது சர்வ நிச்சயம்.



"இவர் போலி ஜோசியர்னு எப்படிச் சொல்றே?"

"என் குழந்தையோட ஸ்டார் என்னன்னு கேட்டதுக்கு, 'பவர் ஸ்டார்'னு சொன்னாரே!"

*அன்பு வாசகர்களே!*

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல்**
**(SMS)**
**021 567 1532**

**கிருஷா — வரணி**

**மருதாணியின் மருத்துவ குணங்களை சொல்லமுடியுமா?**

- மருதாணியை இட்டால் உடல் வெப்பம் தணியும்.
- மருதாணி நகங்களைப் பாதுகாக்கிறது.
- அரைத்த இலையை பூசிவர கருந்தேமல் மறையும்.
- ஆறாத புண்களுக்கு பூசிவர குணம் பெறும்.
- காலில் ஆணியை இல்லாதொழிக்கும்.

இன்னும் எவ்வளவோ பலன் இருக்கும் மருதாணியை வைப்பது இன்று நாகரிகம் இல்லாதுபோய் நாகரிகம் என்ற பெயரில் எம் பாரம்பரியங்களை இழக்கிறார்கள் பெண்கள்.

**செ.முரளி — நெடுங்கேணி**

**பொது நலனில் சுயநலம் இருந்தால் எப்படி இருக்கும்?**

நீங்கள் - நாங்கள் ஓட்டுப் போட்டு பாராளுமன்றம் அனுப்பி வைத்தவர்களில் சிலரை நினைத்துப் பாருங்களேன்... எப்படி இருக்கும்! ச்சா... என்ன கொடுமை சரவணா...

**கௌசிதன் — குப்பிளான்**

**மகாபாரதம் எனும் காவியம் ஏன் எழுதப்பட்டது?**

தர்மம் அழிந்து அதர்மம் மேலோங்கும் வேளை கடவுள் மனிதனாய் அவதரித்து அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவார் என்பதை மனிதனுக்கு உணர்த்திட.

**தனுஜன் — மானிப்பாய்**

**வாழ்க்கை என்பது எப்படிப்பட்டது?**


சாப்பாட்டுப் பார்சலுடன் தரும் சொதிப் பக்கற் போல பிரித்துவிட்டால் ஒரு பக்கத்திற்கு நிற்க மாட்டாது. நாம்தான் ஏதாவது ஒரு பக்கத்திற்கு இழுத்து நிப்பாட்டவேண்டும்.

**க.மயில்வாகனம் — யாழ்ப்பாணம்**

**முரண் கருத்துகளுக்கும் இடம் தரவேண்டியது பத்திரிகை தர்மம்தான். அதற்காக தர்க்கங்களுக்கு இடமளிக்கலாம். குதர்க்கங்களுக்குமா?**

சேற்றில்தானே செந்தாமரை மலர்கிறது. மகாபாரதத்தில் சக்கரவியூகத்தை உடைத்து உள் நுழையத் தெரிந்த அபிமன்யுவிற்கு அதில் இருந்து மீண்டு வரத் தெரியவில்லை. தர்க்கமோ குதர்க்கமோ. இதனூடாக சொல்ல வேண்டியதை சொல்லவேண்டியவர்களுக்கு சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லச் சந்தர்ப்பம் தந்த இறைவனுக்கு நன்றி சொல்கிறோம்.

# கவிதைக் கலசம்



## புத்தாண்டே பிறந்திடு

புத்தாண்டே பிறந்திடு
பூமியெங்கும் வெண்புறா பறந்திடு
புவனமெங்கும் புன்னகை மலர்ந்திடு
புதுயுகம் படைத்திடு
யுத்தங்கள் வேண்டாம்- இனி
அகதிகள் அழும்
சத்தங்கள் வேண்டாம்
என்ற சுத்தங்கள் பேணியே
புத்தாண்டே பிறந்திடு
அனர்த்தங்கள் இன்றியே
ஆயுளோடு பிறந்திடு
வறுமைகள் விரட்டிட
வளங்களை அளித்திடு
வள்ளுவன் வரிகளை
வாழ்வோடு இணைத்திடு
நல்லாட்சி வரவேற்கும்
நல்லாண்டே பிறந்திடு
நல்லதே நடக்கும் என்று
நம்புகின்றோம்
நலமோடு பிறந்திடு
இரண்டாயிரத்து பதினாறில்
அடியெடுத்து வைத்திடு
அறவழியை இவ்வாண்டில்
அகிலத்திற்கு புகட்டிட
புத்தாண்டே பிறந்திடு...

**ஸ்ரீயோதா**
**மண்டைதீவு**

## தேடல்

நிம்மதி, ஒரு புறம் தேடல்
மறுபுறம் பரந்த வானம்
தேடலில் முடிவு காணாத நிஜங்கள்
வானில் ஏதோ செய்கின்றன
வானில் தேடல் செய்வதென்றால்
நிம்மதி என்ற சொல்லும்
தேடலின் உள்ளடக்கமே!
உதிராத பூக்களும்
உதிரா உறவுகளும் இருந்தால்
புதுப்பூக்களுக்கும்
புது உறவுகளுக்கும்
மரியாதையில்லை
தேடல் உள்ளவரை
உதிர்வும் உதயமும்
சர்வ சாதாரணமே!
தேடல் இல்லாத உலகில்- நிம்மதி
தேடுவதும் கிடைத்தது
தொலைத்து- பின்னர்
தொலைந்ததை தேடி தொலைவது
போன்றதாகும்!

**புகழ்கீர்த்தி**
**முள்ளியவளை**

## கந்தா! கதிர்வேலா!

முச்சந்தியில் நின்று
குறி சொல்லும் மூடர்களே!
வீதியைக் கடக்க முற்பட்டு
விதியை விடும் அட்டைகளென
எண்ணினீரோ தமிழரை
ஆமைகள்தான் நாம்- ஆனால்
ஊமைகள் அல்லரே
சுயநலங்களுக்கு
விலை போனவர்களை
வீட்டிற்கு அனுப்பி வைக்கவே
முற்படுகிறோம்...
விதையிட்டிருக்கிறோம்
முளைப்பதை உம்மால்
நிறுத்த முடியாது

மாவை. நா.கஜேந்திரன்

## பேரவை கொடுத்த பேதி

கொல் என்றான் ஒருவன்
கொழுத்தென்றான் மற்றொருவன்
புல் என்றான் இன்னொருவன்
புலி என்றான் வேறொருவன்
பெற்றெடுத்தும் பேர் வைத்த
மற்றை நாளே ... கள்ளிப் பால் பருக்க
காத்திருந்த கயவர் தமை
கல்லெறிந்து கலைக்குமொரு
காலம் வரும்
"புல்"லும் புலால் கொத்தும்
கொடுத்துப் பணமிறைத்துப் பெற்ற
பதவிக்கு வந்ததே கெடுதி என்று
பேதி குடித்தவர் போல் பேரவையால்
பீதியுற்றுப் புலம்பினார் காண்

**தம்பியண்ணா**
**மீசாலை**

# மௌனத்தின் தேடல்- 282



## நிறுத்து உன் தீச்செயலை

நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்திருப்பது அன்பு ஒன்றுதான்
மலைக்கல்லை உருட்டி
சிலை போலிருக்குங் காதலனை
கொலை செய்யவா எண்ணுகிறாய் பாவி
தலைமீது மலை வீழ்ந்தாலும்
நிலைமாறா உள்ளம் வேண்டும்
தொல்லைகள் பல வந்தாலும்
மனங்குலைந்திடாது நிறுத்து
உன் தீச்செயலை
அலை போன்ற உன் மென்கரத்தால்
அன்போடணைத்து செல்லவனை

துரை
தென்மட்டுவில்

## அதிசயமான பலியுகம்

காதல்தான் கசந்ததோ
கண்ணாளனைத் தாக்க
கல்லுத்தான் உகந்ததோ
வெல்ல முடியாத நட்பால்
வீழ்ந்த அன்பும் நலிந்ததோ
ஆழமான பெண் மனசு
அழகான மணவாழ்வை
அழித்திட முனையுதோ
அம்மி மிதித்து
அருந்ததி பார்த்ததும்
வீணானதோ பெண்ணே?
இது கலியுகமோ இல்லை
அதிசயமான பலியுகமோ?

*அராலியூர்*
*சோ.சிவகுமாரன்*

## உயிரும் உணர்வும்

ஒருமுறை போனால்
விரும்பினாலும் மீண்டும்
திரும்பி வராதவைகள்
உயிர்கள் தானென்று
போதி மாதவருமென்று
போதித்த போதனையே
அனைவரும் மறந்ததால்
கொலைகளும் தற்கொலைகளும்
பல்கிப் பெருகுவதற்கு
விரக்தியே மூலகாரணம்
சகிப்புத் தன்மை குறைய
சதிகள் சரியாகின்றன

*க.நாகராசா*
*நுணாவில்*

## உள்ளம் மெல்ல அழுதது

கண்டேன் காதல் கொண்டேன்
கன்னியை இழந்தேன்
கணப்பொழுதில் அவனிடத்தில்
காதலை சுமந்தேன் என் வயிற்றில்
கல்யாணம் என்றேன்
காத்திரு என்றான்
காணாமல் போகிறான் கண்டவுடன்
கல்லுக்குள் மறைகிறான்
கல்லைப்புரட்டிக்
கொல்ல நினைக்கிறேன்
காதல் உள்ளம் மெல்ல அழுதது

*சந்நிதி*
*கதிர்ஷன்*

## பூ ஒன்று புயலானதே

அடிபட்ட நாயும்
மிதிபட்ட பாம்பும்
வஞ்சிக்கப்பட்ட வனிதையும்
வாய்ப்புக்காகக் காத்திருப்பார்கள்
வஞ்சந் தீர்க்க
நியூட்டனின் மூன்றாம்
விதியின் யதார்த்தம்
இவையுனக்குப் புரியாது
பாடசாலை செல்லாததால்
அன்று அவளை மிதித்தாய் நீ
இன்று அவள் மிதிக்கிறாள் உன்னை
இயற்கையின் நியதியும் அதுவே

*ஹோப் மேரிதாஸன்*
*வட்டுக்கோட்டை*

## இப்படியும் ஒரு செயலா

தாங்கி நிற்பதுமோ
சின்ன இடமாச்சே
தள்ளிவிடுவதுமோ
சிறிய இடையாச்சே
நம்பிக்கை கொண்ட எந்தன்
நல்ல எண்ணம் சிதைந்திடுமா
எத்தனையோ அவலங்கள்
எல்லாமே எதிர்கொண்டேன்
இப்படியும் ஒரு செயலா
ஏனிந்த கொலைவெறிதான்
தவறுதான் எங்கேயோ
தலைவிதியை
நொந்திடவா


அனிஞ்சில் புவபாலன்

## மறுபக்கம்

நவநாகரிக நங்கையே
நீ புரட்டுவது
காதலின் மறுபக்கத்தை
அதுதான் நீ
காதலனின் தலையில்
பாறாங்கல்லைப்
போடப் பார்க்கின்றாய்
வேண்டாம் தவறு
இதுதான் உன்னை
மதிக்கவைத்த உன்
பண்பாட்டின்
கல்லறையாகிவிடும்
மறந்து விடாதே

*க.அபர்ணா*
*வட்டுக்கோட்டை*

# மௌனத்தின் தேடல் -283



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 13.01.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# இதுதான்டா காதல்!

காதல் என்பதே கிறுக்குத்தனம் என்பவரா நீங்கள்? கொஞ்சம் இதைப்படிங்க. கற்பனை பண்ணிப் பார்க்க முடியாத வித்தியாசமான காதல் ஜோடிகள் இவர்கள்.



ஹெலன் - லெஸ்

அமெரிக்காவைச் சேர்ந்த ஹெலனும் லெஸ்ஸும் 1918-ல் டிசெம்பர் 31ஆம் திகதி ஒரே நாளில் வெவ்வேறு இடங்களில் பிறந்தவர்கள். ஸ்கூல் படிக்கும்போது லவ்வாகி 75 வருட குடும்ப வாழ்க்கையிலும் இணைந்து ஒரே நாளில் இறந்தும் போனார்கள். 'குஷி' படம் பார்த்திருப்பாங்களோ?




ரீட்டா மேயர்

கல்லானாலும் கணவன் என்று சொல்வார்கள். இந்தப் பெண் சுவரானாலும் புருஷன் என்று தாராளமாகச் சொல்ல லாம். 36 வருடங்களுக்கு முன் 1979-ல் உலகப் புகழ்பெற்ற பெர்லின் சுவரைத் திருமணம் செய்து கொண்டார் ரீட்டா மேயர் என்ற பெண். பத்தே வருடங்களில் அவரது கணவரை... ஸாரி ஸாரி... சுவரை அரசாங்கம் இடித்துவிட 'என் கணவரைக் கொன்று விட்டார்கள்' என வழக்குத் தொடுத்து விதவைக் கோலம் பூண்டார் ரீட்டா!




போரிஸ்- அன்னா

கல்யாணம் ஆனபிறகு மூன்று நாட்கள் ஒன்றாய் இருந்த அந்த அமெரிக்கத் தம்பதியை உலகப்போர் பிரித்துப்போடடது. போர் முடிந்து தாயகம் திரும்பி காதலி அன்னாவை போரிஸ் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. இன்னொரு கல்யாணம் செய்துகொண்டு செட்டில் ஆனார். அன்னா தற்கொலை முயற்சி செய்து காப்பாற்றப்பட்டு தாமதமாக அவரும் கல்யாணம் செய்து கொண்டு செட்டில் ஆனார். 60 வருடங்கள் ஓடிவிட்ட நிலையில் ஒருநாள் வீதியில் எதேச்சையாக ஒருவரை ஒருவர் சந்தித்து இருக்கிறார்கள். அன்னாவுக்கு முதலில் அது தன் போரிஸ் என்பது எளிதில் விளங்கிவிட ஓடிப்போய் கட்டிப்பிடித்திருக்கிறார். போரிஸால் நம்ப முடியவில்லை. 'என்னைவிட்டு எங்கே போனே செல்லம்?' எனக் கட்டிப்பிடித்து இருவரும் இன்னொரு திருமணம் செய்துகொள்ள குடும்பம் தடை போடவில்லை. தெய்வீகக் காதல்யா!



டெஃபி - சரின்யா

இங்கிலாந்தைச் சேர்ந்த டெஃபி என்பவர் விபத்தில் இறந்துபோன தன் காதலி சரின்யா என்ற பெண்ணின் உடலைத் திருமணம் செய்து அதன் பிறகு திருமணம் செய்துகொள்ளாமலேயே வாழ்ந்து வருகிறார். செம!



ஃபைசல்

77 வயதான ஃபைசல் ஹுசைன் தன் மனைவியிடம் உனக்காக தாஜ்மஹால் கட்டுவேன் என்று ஓப்பனாக சொல்லி வந்திருக்கிறார்.

குழந்தை பிறக்காததால் மன உளைச்சலுக்கு உள்ளான அந்த அம்மா நோய்வாய்ப்பட்டு இறந்துவிட தன் மனைவியின் நினைவாகத் தனியாளாக இருந்து கொண்டே கொஞ்சம் கொஞ்சமாக தாஜ்மஹால் போன்ற கட்டடத்தைக் கட்டி முடித்தார்.

படிக்காத அவரால் எப்படிக் கட்ட முடியும் என ஊரார் கிண்டல் செய்ததை நினைத்து இப்போது ஃபீல் செய்கிறார்கள். வைராக்கியக்காரர்யா!



போனி- க்ளைடி


போனி- க்ளைடி அமெரிக்க கிரிமினல் வரலாற்றில் முக்கியமான இடத்தில் இன்னும் இருக்கும் காதல் தம்பதி.

பல இராஜதந்திரங்களைக் கரைத்துக் குடித்து பல வங்கிகளை இணைந்து கொள்ளையடித்த இவர்களை பொலிஸ் சுட்டுத் தள்ளியபோது ஒன்றாக கைகோர்த்தபடி இறந்து போனார்கள். செம சினிமா மேட்டர்மா!



ஜெர்டா வெய்ஸ்மென் -கர்ட் க்ளைன்

ஜெர்டா வெய்ஸ்மென்-கர்ட் க்ளைன் தம்பதிக்கு காதல் வந்தது நாஜிக்களின் சித்திரவதை முகாமில். சித்திரவதை செய்ய வந்த கும்பலில் இருந்த ஜேர்மனிய வீரர் கர்ட்டுக்கு ஜெர்டாவைப் பார்த்ததும் காதல். மிக மிகப் போராடி யாருக்கும் தெரியாமல் காதலைச் சொல்லி அந்த இடத்திலிருந்து காப்பாற்றி கல்யாணம் செய்து இரண்டு பெண் குழந்தைகளையும் பெற்றிருக்கிறார்கள்!



டேவிட் ஹர்ட் - ஆவ்ரில்

டேவிட் ஹர்ட் என்ற நியூயோர்க் வாசி 1907-ல் கரீபியன் தீவிலிருக்கும் ஆவ்ரில் என்ற பெண்ணுக்கு கடிதம் எழுதி இருக்கிறார்.

பேனா நட்பாய் ஆரம்பித்து காதலாய் மாறி ஒரு கட்டத்தில் ஆவ் ரில்லும் ஓகே சொல்லிவிட கடிதத்திலேயே ஏழு வருடங்கள் காதல் வளர்த்திருக்கிறார்கள்.

1914-ல் இருவரும் சந்தித்து ஜமைக்கா தீவில் கோலகலமாகக் கல்யாணம் செய்து அதன் பிறகு நியூயோர்க் திரும்பி அரை டஜன் குழந்தைகளைப் பெற்றெடுத்திருக்கிறார்கள். சுப்பர்யா!

# தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு..... தருமா புதுவருடம்?

புதுவருடத்தில் தாயகத்தில் தமிழ்மக்களின் அரசியல்நிலைமைகளில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படும் என்பது தொடர்பான கருத்துப் பரிமாற்றங்களும் புலம்பெயர் தமிழ் மக்களிடையே புதுவருடத்தையொட்டிய பேசுபொருள்களில் ஒன்றாக உள்ளது. ஊடகங்களில் வெளியாகும் கருத்துக்களைவிட தனிப்பட்ட உரையாடல்களில் வெளிப்படும் கருத்துக்கள் பன்முகத்தன்மையினை கூடுதலாகக் கொண்டிருப்பதனையும் அவதானிக்க முடிகிறது. இதன் அடிப்படையில் கிடைத்த தகவல்களைக் கொண்டும் அவை குறித்த சிந்தனை வழிப்பட்டும் 2016 ஆம் ஆண்டின் தமிழர் அரசியல் குறித்து ஒரு பார்வையை இங்கு தரப்படுகிறது.




சிறிலங்காவின் அரசியலில் தற்போது அவதானிக்கப்படும் குறிப்பிடத்தக்கதொரு விடயமாக இருப்பது அரசியலமைப்பின்படி கூடுதலான அதிகாரத்தைக்கொணடிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நடைமுறையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கூடுதலான அதிகாரத் தைக கையளித்திருக்கிறார் என்பதாக இருக்கிறது. அரசாங்கத்தின் பிரதமராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க மீது மைத்திரிபால சிறிசேன மிகக் குறைந்தளவு கட்டுப்பாடுகளையே பேணிக் கொள்கிறார். தனக்கு உடன்பாடில்லாத விடயங்களை ரணில் விக்கிரமசிங்க செய்ய முயன்றாலும் தனது அதிகாரத்தின்மூலம் அவற்றைக்கையாளாது, உரையாடல் மூலம் கையாளும் அணுகுமுறையினையே பின்பற்றி வருகிறார். இது ஆட்சிமாற்றச் சூத்திரத்தின் ஒரு பகுதியா அல்லது தான் ஜனாதிபதியாக வருவதற்கு ரணில் வழங்கிய ஒத்துழைப்புக்கான ஓர் ஒத்தாசையா என்பது ஜனாதிபதி மைத்திரிபாலவுக்குத்தான் வெளிச்சம்.

எது எவ்வாறாக இருப்பினும் ஜனாதிபதி மைத்திரிபாலவும் ரணிலும் சிங்கள பௌத்த மேலாண்மையினைக் கொண்ட சிறிலங்கா அரசின் நலன்களைப் பேணுவது தொடர்பில் உறுதியாக இருக்கிறார்கள். தம்மை மென்போக்காளர்களாக வெளியில காட்டிக்கொள்ளும் அளவுக்கு இவர்கள் சிங்கள பௌத்த நலன்களைப் பேணிப் பாதுகாப்பதில் மென்போக்காளர்கள் அல்ல. இதில இவர்கள் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டவர்கள். இவர்களில் ரணில் சூழ்ச்சிகளை இலாவகமாகப் பயன்படுத்தக்கூடிய தந்திரவாதி எனப் பெயரெடுத்தவர். இத்தகையதொரு தந்திரவாதிதான் 2016 ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் தொடர்பான அரசியல் விடயங்களில் சிறிலங்கா அரசாங்கத்தின் சார்பில் முக்கிய பங்கு வகிக்கப் போகிறார். இவரது தந்திரத்தைத் தமிழர் தலைவர்கள் எவ்வாறு கையாளப் போகிறார்கள் என்பதனை 2016 வெளிப்படுத்தப் போகிறது.

2016 ஆம் ஆண்டில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணும் முயற்சிகள் இடம்பெறும் என்பது பொதுவாகப் பலரது கருத்தாக இருக்கிறது. புதிய ஆண்டில் எழுதுவதற்கு உத்தேசிகக்கப்பட்டுள்ள புதிய அரசியல் அமைப்பு, தீர்வுத் திட்டத்தை உள்ளடக்கிய வகையிலேயே எழுதப்படும் என்றும கூறப்படுகிறது. இத்தகைய அரசியலமைப்பு எத்தகையதாக அமையும்? ஒற்றையாட்சி அரசியலமைப்பாகவா? அல்லது சமஸ்டி அரசியலமைப்பாகவா?

இது குறித்த பேச்சும் சிலர் மத்தியில் உள்ளது. "*சமஸ்டி* என்ற பேச்சுக்கே இடமில்லை. புதிய அரசியலமைப்பு ஒற்றையாட்சியின் பாற்பட்டதாகவே இருக்கும்" என சிறிலங்காவின் ஆளும் கட்சிகள் தெளிவாக வெளிப்படுத்திவிட்டன. *சமஸ்டி* என்பது சிங்கள பௌத்த தேசியவாதிகளுக்கு ஏற்க முடியாத விடயமாக இருப்பதனால் சமஸ்டி என்பதனை எந்தச் சிங்களத் தலைவர்களுமே ஏற்கப்போவதில்லை என்பதுவும் பரவலாகப் பேசப்படும் விடயமாக உள்ளது.

புதிதாக எழுதப்படப்போகும் அரசியலமைப்பு ஒற்றையாட்சி என்பதனை வெளிப்படையாகப் பேசினால் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பெரும் நெருக்கடியினைக் கொடுக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல அறிக்கையில் தமிழ் மக்களின் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் என்பன அங்கீகரிக்கப்பட்ட, வடக்கு-கிழக்கு இணைந்த வகையிலான சமஸ்டித் தீர்வே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக எட்டப்படும் என தமிழ் மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளது. மேலும் ஆட்சிமாற்றத் திட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய பங்காளிப் பாத்திரம் வகித்திருந்தது. இந்நிலையில் புதிய ஆட்சியாளர் ஊடாக எட்டப்படும் ஒரு தீர்வை ஒற்றையாட்சியினை விட மேலதிகமாக நகர்த்த முடியவில்லை என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், *2016 இல் சமஸ்டித் தீர்வினை எட்டுவோம* என மக்களுக்கு நேரடியாக வாக்குறுதி அளித்த கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனுக்கும் தோல்வியாகவே அமையும்.

இத்தகையதொரு இக்கட்டான நிலையைக் கையாள்வதற்கு வகுக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையிலேயே தற்போதய அரசியலமைப்பை எழுதுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இது தற்போதுதான் வகுக்கப்பட்ட திட்டம் அல்ல. ஆட்சிமாற்றத்தின் முன்னரே சிங்கப்பூரில் 2013 ஆம் ஆண்டு நடந்த இரகசியச் சந்திப்பு ஒன்றில் வகுக்கப்பட்ட திட்டம். இச் சந்திப்பில் தமிழர் தரப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உலகத் தமிழர் பேரவையும் கலந்து கொண்டிருந்தன. தற்போதய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சிங்கள தரப்பில் முக்கிய அரசியற் தலைவராக இச் சந்திப்பில் பங்குபற்றியிருந்தார். இச்சந்திப்பில் சிறிலங்காவுக்குப் புதிய அரசியல் அமைப்பொன்றை ஆக்கும் திட்டத்துக்கு உடன்பாடு காணப்பட்டது. இவ்வாறு ஆக்கப்படும் அரசியலமைப்பு *ஒற்றையாட்சி* என்பதனையோ அல்லது *சமஸ்டி* என்பதனையோ வெளிப்படையாகக் குறிப்பிடும் வகையிலானதாக இருக்க மாட்டாது எனவும் தீர்மானிக்கபட்டது. சிங்களத் தலைவர்கள் இது ஒற்றையாட்சி அரசியலமைப்பு என சிங்கள மக்களுக்கு விளக்கம் தரக்கூடியதாகவும், அதேவேளை தமிழ்த தேசியக் கூட்டமைப்பு இவ் அரசியலமைப்பில் சமஸ்டிக்குரிய அம்சங்கள் உள்ளன என்றும், இதனால் இதனை நாம் சமஸ்டி அரசியலமைப்பாகவே கருதுகிறோம் என்றும் தமிழ் மக்களுக்கு விளக்கம் அளிக்கக்கூடிய முறையிலும் இப் புதிய அரசியலமைப்பு எழுதப்பட வேண்டும் என்றும் சிங்கப்பூர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில்தான் புதிய அரசியலமைப்பு எழுதப்படும் என்றும் தெரிகிறது.

எழுதப்படும் புதிய அரசியலமைப்பு ஒற்றையாட்சி என்பதனையோ சமஸ்டி என்பதனையோ வெளிப்படையாகக் குறிப்பிடாமல், சிறிலங்காவை பிராந்தியங்களின் ஒன்றியம் (Union of Regions) என விளிக்கும் எனத் தகவலொன்று கூறுகிறது. புதிய அரசியலமைப்பில் இலங்கைத்தீவு எத்தனை பிராந்தியங்களாகப் பிரிக்கப்படும் என்பது தொடர்பான தகவல்கள் தெளிவாகத் தெரியவரவில்லை. ஒரு தகவல், இலங்கைத்தீவின் தற்போதய 9 மாகாணங்களும் 9 பிராந்தியங்களாகக் கணிக்கப்படும் என்று கூறுகிறது. இன்னொரு தகவல இலங்கைத்தீவு 5 பிராந்தியங்களாகப் பிரிக்கப்படும் எனவும் இதில் கிழக்கு மாகாணத்துடன் பொலநறுவ மாவட்டம் இணைக்கப்படும் எனவும கூறுகிறது. இத் தகவலின்படி வடக்குப் பிராந்தியம் தவிர்ந்த ஏனைய பிராந்தியங்கள் சிங்கள மக்களைப் பெரும்பான்மையினராகக்கொண்ட வகையில் வடிவமைக்கப்படும் எனவும் தெரிகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கைத்தீவினை மூன்று பிராந் தியங்களாக வகுக்கும் வகை யிலான திட்டத்தை பரிந்துரை செய்யவுள்ளதாகவும் வேறு ஒரு தகவல் கூறுகிறது. இத்திட்டத் தின்படி வடக்கு கிழக்கு இணைந்த வகையில் ஒரு பிராந்தியம் அமைய வேண்டும்.

தற்போது பேசப்படும் அரசியலமைப்பு தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையினை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டதாக அமையமாட்டாது எனவும் தெரிகிறது. தமிழ் மக்களை ஒரு தேசம் என்றோ அல்லது தேசிய இனம் என்றோ ஏற்றுக்கொள்ள மறுப்பது மட்டுமன்றித் தமிழ் மக்களுக்கு தேசியரீதியில் இன அடிப்படையிலான ஒடுக்குமுறை இருந்து வந்திருக்கிறது என்பதனைக்கூட வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளும் வகையில் புதிய அரசியலமைப்பு அமையப் போவதில்லை என்றே தெரிகிறது. இவ்வாறான அங்கீகாரம் வழங்கப்படின் வடக்கு-கிழக்கு பிராந்தியம் ஒன்று அமைக்கப்பட்டு அதற்கான அதிகாரங்கள் வழங்கப்படுதலே அணுகுமுறையாக இருக்க முடியும். ஏனைய பிராந்தியங்கள் அமைக்கப்படுவதற்கான அவசியம் எழாது.

தமிழர் தரப்பில் தமிழ் மக்கள் பேரவையும் மக்கள் கருத்தறிந்து அதன் அடிப்படையில் புதிய அரசியலமைப்புத் தொடர்பான பரிந்துரையினை முன்வைக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்கள் பேரவையும் முன்வைக்கும் பரிந்துரைகளை எந்தளவுக்கு புதிய ஆட்சியாளர்கள் உள்வாங்கப் போகிறார்கள் என்பது 2016 ஆம் ஆண்டில் தமிழ் மக்களின் அரசியலின் போக்கைத் தீர்மானிபபதன் முக்கியமான காரணியாக அமையலாம். புதிய ஆட்சியாளரகள் தேர்தலின் முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அனைத்துலக சமூகத்துக்கும் இனப்பிரச்சினை தொடர்பான சில வாக்குறுதிகளை வழங்கியிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த வாக்குறுதிகள் எத்தகையன என்பது குறித்துத் தெளிவான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. அரசியல் கைதிகள் விடயத்தில் புதிய ஆட்சியாளர்கள் நடந்துகொண்ட முறையினை அவதானிக்கும் போது இந்த வாக்குறுதிகளைப் புதிய ஆட்சியாளர்கள் கனம் பண்ணுவார்களா என்பதும் கேள்விக்குரியதொன்றாகவே இருக்கிறது. தந்திரத்துடன் இயங்கக்கூடிய ரணில் தலைமையிலான அரசாங்கம் எத்தகைய உத்திகளுடன் புதிய அரசியலமைப்பு விடயத்தைக் கையாளப்போகிறது என்பதுவும் இப் புதிய ஆண்டில் தெளிவாகும். 2016 ஆம் ஆண்டுக்குள் தீர்வு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு என்ன நடக்கப் போகிறது என்பதனையும் இவ் வருடம் வெளிப்படுத்தும்.

இதனால் 2016 ஆம் ஆண்டு தமிழர் அரசியலின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் வருடமாக அமையலாம் என்றே கருத இடமுண்டு.

*கலாநிதி சர்வேந்திரா*

# facebook

# நீதிக்கதை



பாலைவனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த ஒருவன் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் மயங்கி விழும் நிலைக்கு வந்து விட்டான். தாகத்தால் உயிர் போய்விடுமோ என்று நினைத்த போது தூரத்தில் ஒரு குடிசை போல ஏதோ ஒன்று தெரிந்தது. மிகவும் கஷ்டப்பட்டு அவன் அந்த இடத்திற்கு சென்று விட்டான்.

அங்கே ஒரு கையால் அடித்து இயக்கும் பம்ப்பும், அதன் அருகில் ஒரு ஜக்கில் தண்ணீரும் இருந்தன. ஒரு அட்டையில் யாரோ எழுதி வைத் திருந்தார்கள். "ஜக்கில் உள்ள தண்ணீரை அந்தப் பம்ப் செட்டில் ஊற்றி அடித்தால் தண்ணீர் வரும். குடித்து விட்டு மறுபடியும் ஜக்கில் தண்ணீரை நிரப்பி வைத்து விட்டுச் செல்லவும்."

அந்தப் பம்ப்போ மிகவும் பழையதாக இருந்தது. அது இயங்குமா, தண்ணீர் வருமா என்பது சந்தேகமாக இருந்தது. அது இயங்காவிட்டால் அந்தத் தண்ணீர் வீணாகி விடும். அதற்குப் பதிலாக அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால் தாகமும் தணியும், உயிர் பிழைப்பதற்கு உத்தரவாதமும் உள்ளது.

அவன் யோசித்தான். தண்ணீரைக் குடித்து விடுவதே புத்திசாலித்தனம் என்று அறிவு கூறியது. ஒரு வேளை அதில் எழுதி வைத்திருப்பது போல் அந்தப் பம்ப் இயங்குவதாக இருந்து அது இயங்கத் தேவையான அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால், இனி தன்னைப் போலத் தாகத்தோடு வருபவர்களுக்கு அது பயன்படாமல் போகத் தானே காரணமாகி விடுவோம் என்று மனச்சாட்சி எச்சரித்தது.

அவன் அதற்கு மேல் யோசிக்கவில்லை. ஆனது ஆகட்டும் என்று அந்தப் பம்பில் அந்தத் தண்ணீரை ஊற்றி விட்டு அதை அடித்து இயக்க ஆரம்பித்தான். தண்ணீர் வர ஆரம்பித்தது. தாகம் தீர, வேண்டிய அளவு தண்ணீர் குடித்து விட்டு அந்த ஜக்கில் நீரை நிரப்பி விட்டுச் செல்கையில் அவன் மனம் நிறைந்திருந்தது.

நாம் அவசியமான காலத்தில் அனுபவிப்பதை அடுத்தவருக்கும் அதே போல பயன்படும்படி விட்டுப் போக வேண்டும். எந்த நன்மையும் நம்முடன் நின்று விடலாகாது. இந்தக் கால கட்டத்தில் பெரும்பாலான மனிதர்களிடம் அந்த நல்லெண்ணம் இருப்பதில்லை. நம் வேலை ஆனால் சரி, அடுத்தவர் எக்கேடு கெட்டால் நமக்கென்ன என்ற அலட்சியம் பலரிடமும் மேலோங்கி உள்ளது.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற மனநிலையில் ஒவ்வொருவரும் இருந்தால் இந்த உலகம் இன்பமயமாகி விடுமல்லவா?

# மாலுமி



கும்மிருட்டில் கடலில் கப்பலைச் செலுத்திக் கொண்டிருந்த மாலுமி, தனக்கெதிரே விளக்கு எரிவதைப் பார்த்து தன் கப்பலுடன் எதிரே வரும் கப்பல் மோதிவிடக் கூடாதென்பதற்காக எச்சரிக்கை அறிவிப்பை விடுத்தார்.

உங்களுடைய வழிப் பாதையை கிழக்குப் பக்கமாக 10 டிகிரி தொலைவுக்கு மாற்றுங்கள் இதற்கு, ஸாரி... நீங்கள் உங்களுடைய வழிப் பாதையை மேற்கு திசையில் 10 டிகிரிக்கு மாற்றிக் கொள்ளுங்கள் என்று விளக்கு சிக்னலிலிருந்து பதில் வந்தது. நான் கப்பல் மாலுமி. நீ உன்னுடைய வழித்தடத்தை மாற்றிக் கொள் என்றான் மாலுமி.

நான் கடல் பிரதேச மனிதன். நீ உன்னுடைய பாதையை மாற்றிக் கொள் என்று பதில் வந்தது.

இது யுத்த கப்பல். நான் அதன் கப்டன். நான் என்னுடைய பாதையை மாற்ற மாட்டேன் என்று பிடிவாதமாகப் பதில் அனுப்பினான்.


இது லைட் அவுஸ். உன்னுடைய உத்தரவுக்கு ஏற்ப நாங்கள் இதை மாற்றிக் கொள்ள முடியாது என்று பதில் வந்தது.

சூ இந்த கதைக்கும் நம்ம கப்டனுக்கும் சத்தியமா எந்த சம்பந்தமும் கிடையாதுங்க..

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 599

Search for people, places and things Nagendram Home


கஜியந்தன் பேரின்பநாதன்




லொலிப்பப் விசுதுஷன்




வின்ஜக்சன்





தமிழன் புகழ்




லதுசன் லது




ராகுலன் ராக




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கட்சியா...? தேசமா...?

"சிங்களவர்கள் வாக்காளர்களாக அதாவது கட்சி சார்ந்து சிந்திக்கிறார்கள். ஆனால், தமிழர்களோ இனம் சார்ந்து சிந்திக்கிறாரகள்." இது சிங்கள வர்களிடம் உள்ள பலவீனமாகவும், தமிழர்களின் பலமாகவும் காணப்படுகிறது என *சிரால் லக்திலக்க* 2005 - 2006 காலப்பகுதியில் அடிக்கடி கூறுவார். *சிரால* தற்போது இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இணைப்பாளராக இருக்கின்றார். சிங்கள மக்கள் தொடர்பாக சிராலுக்கிருந்த ஆதங்கத்தோடு இந்த கட்டுரையாளருக்கு உடன்பாடில்லை. அதேவேளை, சிங்கள தேசத்தின் நலன் சார்ந்து சிந்திக்கின்ற ஒருவரிடம் அத்தகைய ஆதங்கம் இருப்பது ஆச்சரியத்துக்குரியதுமல்ல.


சிரால் ஒரு புத்திஜீவி மற்றும் அரசியற் செயற்பாட்டாளர். அத்துடன், ஐக்கிய தேசிய கட்சியின் மாகாண சபை உறுப்பினரும் கூட. இதை இங்கு குறிப்பிடுவதன் நோக்கம், ஆட்சியாளர்கள் மத்தியில் எத்தகைய சிந்தனைப்போக்கு காணபட்டுவருகிறது என்பதை புரியவைப்பதறகாகவே.

கடந்த பத்து ஆண்டுகளில் பெருமாற்றங்கள் நிகழ்ந்திருக்கிறது. கட்சிகளுக்கிடையே போட்டி இருந்தாலும் சிங்கள தேசத்தின் நலன்கள் என வரும்போது அவர்கள் ஒரு பொதுக் தளத்தில் இணைந்திருக்கிறார்கள் என்பதை சிங்கள தேசம் அடைந்த வெற்றிகள் மீண்டும் வெளிப்படுத்தியிருக்கிறது. வாக்காளர் மனப்பாங்கோடு இருந்த சிங்கள மக்கள் தம் இனம் சார்ந்து, தமது தேச நலன்கள் சார்ந்து செயற்படுபவர்கள் என்பதை புலப்படுத்தியிருக்கிறார்கள். இனம் சார்ந்து சிந்திப்பவர்களாக வர்ணிக்கப்பட்ட தமிழர்கள், கட்சி சார்ந்த வாக்காளர் மனப்பாங்கோடு சிந்திக்கவும் செயற்படவும் நிலைமாற்றம் அடைந்துவிட்டார்களோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த சந்தேகம், கடந்த 19ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை தொடர்பாக வெளிவருகிற கருத்துக்கள், விமர்சனங்களைத் தொடர்ந்து பலமடையத் தொடங்கியுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு எதிரான ஒரு மாற்று கூட்டணியே தமிழ் மக்கள் பேரவை என தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு, அதிலும் குறிப்பாக தமிழரசுக் கட்சிக்கு ஆதரவானவர்களால் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அத்துடன், தமிழ் மக்கள் பேரவை தமிழர்களின் ஒற்றுமையை சிதைத்துவிடும். இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்க இருககின்ற சந்தர்ப்பத்தில் இவ்வாறு ஒரு அமைப்பு உருவாகுவது தீர்வு திட்டத்தை குழப்பிவிடும் போன்ற விமர்சனங்களும் முன் வைக்கப்படுகின்றன. இதை மக்கள் தெட்டத் தெளிவாக அறிந்துள்ளனர். ஆயினும் இந்த வாதங்களில் நியாயம் உள்ளதா...?

தமிழ் மக்கள் பேரவையோ தாம் ஒரு அரசியல் கட்சி அல்ல அதைக்கடந்து தேசநலனில் சார்ந்து செயப்படும் மக்களமைப்பு என்பதையும் தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர். இந்த நிலையில் உண்மையில் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை வரையவுள்ள- மாபெரும் மக்களியக்கமாக பரிணமிக்கவுள்ள தமிழ்மக்கள் பேரவையின வரவு- காலத்தின் தேவை, தமிழ் மக்களின் எதிர் காலத்தை சுபீட்சமாக்குவதற்கான ஒரு ஜனநாயக அமைப்பு என்பதை நாம் புரிந்து கொள்ளத் தவறிவிடலாமா?



"நுண்ணிய நகர்வுகளுக் கூடாக நடைபெறும் அரசியல் காய் நகர்த்தல்கள், எமக்கான தீர்வுகள் எமது மக்களின் பிரசன்னம் இல்லாமலே உருவாக்கப்பட்டு, எமக்கு தரப்பட்டதாக பதியப்படும். இதனை மக்கள் ஏற்றார்கள் என்று கூறுவதற்கும், தயாரிப்புக்கள் நடைபெறலாம். மிகவேகமாக நடைபெறும் இவ்விதமான நகர்வுகள் எம்மை சூழ்வதை நாம் அறிந்திருக்கவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் நாம், எமது மக்கள் விழிப்பாக இல்லாவிடின் மிகப்பெரிய ஏமாற்றத்தை சந்திக்க நேரிடும். இந்த சவாலை தனி நபர்களாகவோ அல்லது தனித்தனி அமைப்புகளாகவோ எதிர்கொள்ளமுடியும் என நாம் கருதவில்லை. மக்கள் நலன் சார்ந்து சிந்திக்கும் சக்திகள் அனைத்தும் ஒன்றுபடவேண்டும். அனைவரும் ஒன்றுபட்ட அரசியல் மயப்பட்ட ஒரு மக்கள் அமைப்பின் மூலமே இது சாத்தியம் ஆகும். எனவேதான் இங்கு கூடியிருக கின்ற அனைவரும் எமது மக்களின் நலன்களை மட்டும் முன்னிறுத்தி, எமது மண்ணில் நிகழ்ந்த தியாகங்களின் பெயரால் ஒன்றிணைந்து கொள்கை வழி செயலாற்ற வேண்டும் என வேண்டுகின்றோம" என தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரும் ஏற்பாட்டுக் குழுவை சார்ந்தவருமான மருத்துவ நிபுணர் பூ.லக்ஸ்மன் அவர்கள், தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டபோது ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி சார்ந்த வாக்காளர் மனப்பாங்கோடு சிந்திக்கும் வரை தமிழர தேசத்தை சூழ்ந்துவரும் பேராபத்தை புரிந்துகொள்வது இலகு அல்ல. தமிழ் இளைய சமுதாயம் சுதந்திர தாகத்தோடு வளர்ந்துவிடக் கூடாது என்பதற்காக பண்பாட்டு சீரழிவுகளையும் போதைப் பொருள் பாவனையையும் திட்டமிட்டு தமிழர தாயகத்தில் அரங்கேற்றி வரும் தரப்புகள், தமிழர்களை ஒரு தேசத்தின் நலன் சார்ந்து சித்திப்பவர்கள் என்ற நிலையிலிருந்து வாக்காளர் மனப்பாங்கோடு சிந்திக்கும் நிலைக்கு மாற்றுவதற்கு முற்படுகிறார்கள். தேர்தல் என்பது, சனநாயகத்தின் ஒரு அங்கமே தவிர அதுதான் சனநாயகத்தின் முற்றுமுழுதான அளவீடோ அடையாளமோ அல்ல. அதேபோன்று, தேர்தல் என்பது தமிழ் மக்களின் நலன்களை பூர்த்தி செய்வதற்கான ஒரு மார்க்கமே தவிர, மாறாக, அதனூடாகத்தான் தமிழ் மக்களுக்கு விடிவு பிறக்கும், தமிழர தேசம் மலரும் என்று நம்பவும் கூடாது. நம்பிக்கைய உண்டாக்கவும் கூடாது.

இத்தகைய பின்னணியில் தமிழ் மக்கள் பேரவையை பார்ப்போமானால், தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்துவதற்கான அமைப்பு என தம்மை அடையாளப்படுத்துகின்ற அதேவேளை, தாம் சிங்கள தேசத்தின் நலன்களுக்கு எதிரானவர்கள் இல்லையென்பதையும் தெரியப்படுத்தியுள்ளார்கள். அத்துடன், தாம் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு எதிரான சக்தி அல்ல என்பதை வெளிப்படுத்தியுள்ளதோடு, தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளில் இரண்டு கட்சிகளை உள்வாங்கியுள்ளார்கள். இவ்வாறான சூழலில், தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பின் பலவீனங்களை களைந்து அதனை பலப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்தலாம். அத்துடன், சர்வதேச சமூகத்துடனான மற்றும் சிங்கள தேசத்துடனான சந்திப்புகள், பேச்சுவார்த்தைகளில் தமிழ்தேசியக் கூட்டமைப்பு பொருத்தமான தந்திரோபாயம் வகுத்து செயற்படுமாயின், தமிழ் மக்கள் பேரவையின் தோற்றத்தை தமிழ் மக்களின் நலனை முதன்மைப் படுத்துவதற்கான ஒரு கருவியாக, அழுத்த சக்தியாக முன்னிறுத்தலாம் இதேவேளை, வெறும்அறிக்கைகளை தாண்டி தாம் ஒரு செயற்திறன் மிக்க அமைப்பு என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு தமிழ மக்கள் பேரவைக்கு உண்டு.

தமிழ் மக்களுக்கான உரிமைகளை, அரசியல் தீர்வை வழங்குவதற்கு பின்னடிக்கும் சிறிலங்கா அரசு, அதற்கான காரணமாக தனது மறைமுகமான ஆதரவோடு இயங்குகின்ற அல்லது தம்மால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இனவாத சக்திகளை சுட்டிக்காட்டு கின்றது. அத்துடன், சிங்கள தேசத்தின் நலனை பூர்த்தி செய்வதற்காக, பல்வேறு கட்டமைப்புகளை பலப்படுத்தி வருகிறது. இதில், மதக் குழுக்கள், சிவில் சமூகம், வணிக நிறுவகங்கள், அரச சார்பற்ற அமைப்புகளும் உள்ளடக்கம்.

அதேபோன்று தமிழ் மக்களின் நலன்களை பூர்த்தி செய்வதற்கான சீரான நிர்வாகமும் முகாமைத்துவமும் உடைய செயற்திறன்மிக்க அழுத்த சக்திகளும், தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி தூர நோக்குடன் செயற்படக்கூடிய நிறுவகங்களின் உருவாக்கமும் காலத்தின் கட்டாயமாகவுள்ளது. இத்தகைய ஒரு சூழலிலேயே, தமிழ் மக்கள் பேரவை உருவாகியுள்ளது. தமிழ் மக்கள் பேரவையின் எதிர் காலம் என்பது தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்திய செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது.

கற்றலோனியா: கற்றறிந்த பாடங்கள

## கற்றலோனியா தேசம்.. சிறந்த ஒரு உதாரணம்!

தற்போது ஸ்பெயினின் ஒரு பகுதியாகவுள்ள கற்றலோனியா "நாம் ஒரு தேசம், நாம் தீர்மானிப்போம"என்ற கோசத்தோடு சுதந்திர அரசமைப்பதற்காய் போராடி வருகிறது. பலத்த சவால்கள், அழிவுகள், அவலங்களை கடந்து, முந நூறு வருடங்களைத் தாண்டி கற்றலோனியாவின் விடுதலைக்கான மூச்சு உயிர்ப்புடன் இருக்கிறது.

கற்றலோனியர்கள் சந்தித்த இராணுவத் தோல்வியின் விளைவாக, 1714 செப்டெம்பர் 11 கற்றலோனியா ஸ்பெயின் இராச்சியதின் ஒரு அங்கமாக இணைக்கப்பட்டது. தாம் தோல்வியை சந்தித்த செப்டெம்பர் 11ஐ தமது தேசிய தினமாகப் பிரகடனப்படுத்தினார்கள் கற்றலோனியர்கள். இது தமது தோல்வியை நினைவுகூருவதற் காக அல்ல. மாறாக, தோல்விக் கும் அவலங்களுக்கும் மத்தியி லும் எமது இருப்பு தொடர்ந்தும் பேணப்படுகிறது என்பதை நிரூபிப்பதற்கான நினைவுதினம் எனக் குறிப்பிடும் கற்றலோனியர்கள், இந்த கூட்டு நினைவு தினம் எங்களை ஒருங்கிணைக்கிறது. எமது அரசியல் வேட்கைக்கும் அதற்காக போராட வேண்டும் என்ற மனோதிடத்துக்கும் பலம் சேர்க்கிறது எனவும் தெரிவிக்கிறார்கள்.

கற்றலோனியா பிரிந்து செல்வதற்கு எடுக்கும் அனைத்து செயற்பாடுகளையும் முடக்கும் நடவடிக்கைகளில் பலம்மிக்க ஸ்பெயின் ஈடுபட்டுள்ளது. ஆயினும், அரசு அல்லாத, பெரும் சர்வதேச ஆதரவை கொண்டிராத கற்றலோனியர்களும் தமது போராட்டத்தை தொடர்கிறார்கள். ஏழரை மில்லியன் மக்களைக் கொண்ட கற்றலோனியாவில் ஒன்றரை மில்லியன் மக்கள் 2012 செப்டெம்பர் 11 தமது தேசத்துக்கான சுதந்திரத்தை வேண்டி பேரணியாய் திரண்டார்கள்.

இந்த பெரும் ஒருங்கிணைவுக்குப் பின்னால் கற்றலன் தேசிய அவை (Catalan National Assembly) செயற்பட்டது. பல்வேறு அரசியல் சித்தாந்தங்களையும், வேறுபட்ட சமூக வர்க்கங்களையும் கொண்டவர்கள் கற்றலன் தேசிய அவையில் அங்கம் வகிக்கிறார்கள். ஆயினும், பல்வேறுபட்ட தரப்புகளையும் கற்றலோனியாவின் சுதந்திரம் என்ற ஒற்றை இலக்கு ஒன்றிணைத் திருக்கிறது. எங்களுடைய இலக்கை அடைந்ததும் நாம் இந்த அவையை கலைத்துவிடுவோம் என அவை நிறுவுனர்கள் தெரிவிக்கிறார்கள். இருபது பேரோடு 2012 மார்ச் 10 ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கற்றலன் தேசிய அவை, ஆறு மாதங்களில் ஒன்றரை மில்லியன் மக்களை ஒரு பேரணியில் ஒருங்கிணைத்தது. தனிநாட்டுக்கான போராட்டத்தின் ஒரு அங்கமே இந்தப் பேரணி. சுதந்திர தேசமொன்றிற்காய் போராடிக் கொண்டிருக்கும் கற்றலோனியர்கள், ஸ்பெயின் அரசோடு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகிறார்கள். ஆனால், அவர்கள் சரணாகதி அரசியல் நடாத்தவில்லை. ஸ்பெயின் அரசுடனான பேச்சுவார்த்தைகளில் தனிநாட்டுக் கோரிக்கையை பேரம் பேசுவதற்காக பயன்படுத்தி, தமது தேசத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முயற்சிக்கும் கற்றலோனியர்கள், தமது சுதந்திர தேசம் என்ற இலக்கில் கண்ணும் கருத்துமாய் இருந்து செயற்படுகிறார்கள்.

உலகளாவிய ரீதியில் கற்றலோனியாவின் சுதந்திரப் போராட்டம் ஒரு சமகால உதாரணமாக திகழ்கின்ற அதேவேளை, இலங்கைத் தீவில் விடுதலைக்காக போராடிய தமிழர் தேசத்தின் தனித்துவ அடையாளமும் எதிர்கால இருப்பும் கேள்விக் குறியாகியுள்ளது. இந்த தருணத்தில் தமிழர்கள் தமது இனத்தின் நலன்களை முன்னிறுத்தும் ஒரு தேசமாக சிந்திக்கப் போகிறார்களா அல்லது கட்சிசார் வாக்காளர்களாக சிந்திக்கப் போகிறார்களா என்பதை கட்டமைப்பதில் தமிழ் மக்கள பேரவை முக்கிய பங்கு வகிக்கலாம். ஏனெனில், கட்சியரசியலைத் தாண்டி ஒரு இனக்குழுமமாக, ஒரு தேசக் கட்டமைப்பாக சிந்திக்கின்ற இனத்தினாலேயே தமது நலன்களை பூர்த்திசெய்ய முடியும்.

-நிர்மானுசன் பாலசுந்தரம்

# இந்திய டெஸ்ட் அணியும் அணித் தலைவர் விராட் கோலியும்



விராட் கோலி அதிகார பூர்வமாக இந்திய டெஸ்ட் கப்டனாக அறிவிக்கப்பட்டது சென்ற வருடம் இதே திகதியில்தான். டோனி போன்ற லெஜெண்ட் இடத்தை கோலி நிரப்புவது கடினம், அனுஷ்கா சர்மாவுடன் சுற்றும் இவர், இந்தியாவை இன்னும் கீழே கொண்டு செல்வார் என்ற வார்த்தைகள்தான் கோலியின் கப்டன் பதவிக்கு அளிக் கப்பட்ட இன்ஸ்டெண்ட் பரிசுகள். இந்த ஒரு வருடத்தில் கோலி தன் மீதான விமர்சனங்களை சிக்சர் விளாசினாரா? இல்லையா? என்பதை பார்ப்போம்.

### கப்டனாக என்ன செய்தார்?

கப்டன் டோனி மெல்பேர்ன் டெஸ்ட் முடிந்தவுடன் யாரும் எதிர்பார்க்காத வகையில் தனது ஓய்வை அறிவித்தார். அந்த தொடரில் முதல் போட்டியில் கப்டன் டோனி காயமடைந்திருந்ததால் துணை கப்டன் கோலியை கப்டனாக்கியது அணி நிர்வாகம். டோனியின் திடீர் ஓய்வுக்கு பின் கோலி முழு நேர கப்டனாக்கப்பட்டார். மொத்தம் 9 டெஸ்ட் போட்டிகளுக்கு அதிகாரபூர்வ கப்டனாக இருந்துள்ள கோலி 5 வெற்றி, 3 சமநிலை, ஒரு தோல்வி என தனது வெற்றி வகிதத்தை சாதகமாக வைததுள்ளார். கோலி கப்டனாக ஒரு தொடரை கூட இழக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி, 22 ஆண்டுகளுக்கு பிறகு இலங்கை மண்ணில் தொடரை வென்று சாதனை படைத்தது கோலி தலைமையிலான இந்தய அணி. இலங்கை அணியை வெல்வதில் பெருமையில்லை. தென்னாபிரிக்காவை வீழ்த்தினால் கோலியை கப்டனாக அங்கீகரிக்கிறோம் என்று கூறியவர்களுக்கு, 4 டெஸ்ட் கொண்ட தொடரை 3-0 என்ற கணக்கில் கைப்பற்றி கெத்தான வெற்றியை பதிவு செய்தார் கோலி.

டோனி செய்யத் தவறிய சில விடயங்களை கோலி தைரியமாக செய்தார். உள்வட்டத்துக்குள் வீரர்களை கையாள்வது, நீண்ட நேரமாக களத்தில் இருக்கும் வீரரை வீழ்த்த, வீரருக்கு அருகில் பீல்டிங் செட் செய்து தடுமாற செய்வது என களத்தில் ஃபயர் காட்டினார் கோலி. மூன்றாவது இடத்தில் விளையாட, அடுத்த டிராவிட் என வர்ணிக்கப்பட்ட புஜாராவை அணி நலனுக்காக ஆடும் லெவனில் சேர்க்காதது, ராகுலை சரியாக கையாண்டது, அஸ்வின் , ஜடேஜா என இருவரை மட்டும் வைத்து தென்னா பிரிக்காவைமண்ணை கவ்வ வைத்தது எனமாஸ காட்டினார் கோலி.

### பந்து வீச்சாளர் கோலி:

மோசமான ஃபாம, இந்திய அணியின்



தோல்விகளுக்கு ரசிகர்களாலும் விமர்சிக்கப்பட்ட கோலி பெரிதாக பதிலளிக்கவில்லை. தனது துடுப்பாட்டம் மூலம் சரியான பதிலை வழங்கினார் கோலி. கப்டனாக ஆடிய 9 டெஸ்ட்களில் 2 சதம், 2 அரை சதம் உட்பட 640 ஓட்டங்களை குவித்துள்ளார். இதில் அவுஸ்திரேலியாவின் சிட்னியில், 147 ஓட்டங்கள் எடுத்து மிரள வைத்த இன்னிங்சும் அடங்கும். கப்டன்ஸி வழங்கினால் இவரது துடுப்பாட்டம் பாதிக்கப்படும் என்பதை பொய்யாக்கினார்.

டெஸ்ட் போட்டிகளில் கில்லியான தென்னாபிரிக்கா, பந்துகள் எகிறும் ஆஸி மைதானங்களில் கலக்கினாலும் இந்திய ஆடுகளங்களில் 300 ஓட்டங்கள் தாண்டக்கூட தடுமாறியது. ஆம்லா, டுப்ளேஸிஸ், டுமினி என இந்திய ஆடுகளங்களில் சாதித்தவர்கள் கூட ஒற்றை இலக்கங்களில் வெளியேற, கோலியும், இந்திய அணியும் துடுப்பாட்டத்தில் கெத்தான ஆட்டத்தையே வெளிப்படுத்தியது. ஆஸி அணியின் ஜாமபவான்ஸ்டீவ் வாக், தனது மகனிடம், உனக்கு ரோல் மொடலாக விராட் கோலியை எடுத்துக் கொள்ள வேண்டும். அவர் எந்த ஆடுகளங்களிலும் சிறப் பாக ஆடக் கூடியவர் என்பதை நிரூபித்து காட்டியவர் என புகழாரம் சூட்டினார்.

### இந்தியாவின் சிறந்த கப்டன்களின் முதல் வருடம்


இந்தியாவின் சிறந்த டெஸ்ட் கப்டன்களாக சொல்லப்படும் கங்குலி, டோனி இருவரோடும் கோலியை இவ்வளவு குறுகிய காலத்தில் ஒப்பிடக் கூடாது என்றாலும், மூன்று பேரிடமும் இந்திய அணியின் கப்டன பதவி வழங்கப்பட்ட போது இந்தியா மோசமான தரவரிசையில்தான் இருந்தது. அதிலிருந்து இந்தியாவை ஒரு வருடத்தில் மீட்டு, இரண்டாவது இடத்துக்கு கொண்டு வந்தவர்கள் கங்குலியும், கோலியும் என்றால் முதலிடத்துக்கே கொ்ண்டு சென்றவர் டோனி. முதல் வருடத்தில் கோலி பாஸ் என்பதை தாண்டி, சிறப்பாகவே செயற்பட்டுள்ளார் என்றுதான் கூற வேண்டும் . காரணம் கங்குலி மற்றும் டோனியிடம் இருந்தது அனுபவசாலிகளைக் கொணட இந்திய அணி. கோலியிடம் இருப்பதோ இளம் இந்திய அணி.

அக்ரஸிவ் கப்டன், களத்தில் கோபத்தை வெளிப்படுத்த தயங்காதவர் என்றெல்லாம் கூறி னாலும் இன்னும் வெளிநாட்டில் ஜெயிக்கவில்லை எனற பெயர் அப்படியேதான் உள்ளது. கோலி அவுஸ்திரேலிய மற்றும் இங்கி லாந்து மண் ணில் வெற் றியை பதிவு செய்தால் தான் டெஸ் டின் சிறந்த கப் டனாக மாறுவார் . லோர்ட்ஸ் மைதானத்தில் கோலியின் டி-ஷர்ட சுழலலம் அடி லெய்டில் வெற்றி பெறறவுடன் ஆஃப் ஸ்டெம்பை எடுத்துக் கொண்டு வலம்வரலம் இந்தி யாவை மீண்டும் டெஸ்ட் போட்டிகளில் முதலிடம பெற வைப்பாரா கோலி என்பதை வெளிநாட்டு தொடர்கள் தான்முடிவு செய்யப்போகின்றன.

(நன்றி விகடன்)

# காலத்தால் அழியாத கானங்கள் ...

திரைப்படம்-தில்லுமுள்ளு
பாடியவர்-எஸ்.பி. பாலசுப்ரமணியம்
இசை-இளையராஜா
பாடலாசிரியர்-கண்ணதாசன்




ராகங்கள் பதினாறு உருவான வரலாறு
நான் பாடும் போது அறிவாயம்மா
ராகங்கள் பதினாறு உருவான வரலாறு
நான் பாடும் போது அறிவாயம்மா
பல நூறு ராகங்கள் இருந்தால் என்ன
பதினாறு பாட சுகமானது
பல நூறு ராகங்கள் இருந்தால் என்ன
பதினாறு பாட சுகமானது
ராகங்கள் பதினாறு உருவான வரலாறு
நான் பாடும் போது அறிவாயம்மா
கலை மாது தான் மீட்டும் இதமான வீணை
கனிவான ஸ்வரம் பாட பதமானது
கலை மாது தான் மீட்டும் இதமான
வீணை
கனிவான ஸ்வரம் பாட பதமானது
அழகான இளம் பெண்ணின் மேனி
தான் கூட
ஆதார சுதி கொண்ட வீணையம்மா
அழகான இளம் பெண்ணின் மேனி
தான் கூட
ஆதார சுதி கொண்ட வீணையம்மா
ராகங்கள் பதினாறு உருவான வரலாறு
நான் பாடும் போது அறிவாயம்மா
இடையாட வளையாட சலங்கைகள் ஆட
இலையோடு கொடி போல நடமாடினாள்
இடையாட வளையாட சலங்கைகள் ஆட
இலையோடு கொடி போல நடமாடினாள்
உலகாளும் உமையாளின் ராக
பாவங்கள்
ஆனந்தம் குடி கொண்ட கோலமம்மா
உலகாளும் உமையாளின் ராக
பாவங்கள்
ஆனந்தம் குடி கொண்ட கோலமம்மா
ராகங்கள் பதினாறு உருவான வரலாறு
நான் பாடும் போது அறிவாயம்மா
பல நூறு ராகங்கள் இருந்தால் என்ன
பதினாறு பாட சுகமானது ஆ.... ஆ....
பல நூறு ராகங்கள் இருந்தால் என்ன
பதினாறு பாட சுகமானது
ராகங்கள் பதினாறு உருவான வரலாறு
நான் பாடும் போது அறிவாயம்மா

**இப்பாடலை**
**SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
சிவகுமாரன் குடும்பம், இரத்தினம் குடும்பம் உரும்பிராய், சிந்துஜா , தக்ஷாயணி வேலணை, யுஸ்ரினா நாவாந்துறை, டயன்சன், முகுந்தன், ரேணுகா, கஜன்,

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## அகரம்-குறும்பட விமர்சனம்

பிரவீன் மற்றும் யேசுராசா நடிப்பில் வனிதா சேனாதிராஜா இயக்கி இருக்கும் குறும்படம் அகரம். சுற்றுச்சூழலினை அழகாக வைத்திருப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய புத்திசாதுரியத்தை சிறுவன் ஒருவனின் பார்வையில் எடுத்துரைக்கிறது.

பாவித்த கழிவுப்பொருட்களை யாருமற்ற வளவுக்குள்ளும் ஒழுங்கை முடக்கடியிலும் விசிறிவிட்டுச் செல்வது எமது மக்களுக்கு கைவந்தகலை. சுற்றுச் சூழலில் இவ்வாறு விசிறிவிட்டுச்செல்லும் குப்பைகள் நாளடைவில் மேலும் பழுதடைந்து அந்த பிரதேசத்தையே மிகுந்தசிக்கலுக்கு உள்ளாக்கும். இவற்றை அப்புறப்படுத்துவது துன்பமான ஒன்றாக இருகின்ற போதும் குப்பைகளை பொது இடங்களில் போடுவதை தவிர்க்கும்படி பொது இடங்களில் விசிறிவிட்டுச் செல்பவர்களுக்கு சொல்வது மிகுந்த கடினமான ஒன்று. இக் கடினத்தன்மையை விளக்கும் குறும்படமாக அகரம் குறும்படம் இருக்கின்றது.

ஒரு ஒழுங்கை முடக்கு அதில் தினமும் வீட்டுக் கழிவுக்குப்பைகள் குவிந்துகொண்டிருகின்றன. சுற்றுச்சூழல் மோசமான நிலைக்கு வருகின்றது. யாருமே அதைப்பற்றி அக்கறைகொள்ளாதபோதும் சிறுவன் ஒருவன் அதனை அப்புறப்படுத்த வருகின்றான். குப்பைக்கு நடுவே பூச்செடி ஒன்று அழகாக இருப்பதையும் காண்கிறான். மேலும் அச்சூழலை அழகுபடுத்த முயல வயதுமுதிர்ந்த ஒருவரும் அவனோடு இணைந்து குப்பைகளை சுத்தம்செய்ய வருகின்றார். தினமும் சுத்தம் செய்தாலும் மீண்டும்


அகரம்

அடுத்தநாளும் குப்பை அப்பிரதேசத்தில் வருகின்றது. மீண்டும் மீண்டும் சுத்தம் செய்தாலும் தினமும் தோல்வியே மிஞ்சுகின்றது. அவ்விடத்தில் குப்பை போடுவதற்கான குப்பைத்தொட்டி வைத்தபோதும் அதனை அசட்டை செய்யாது குப்பைகளை விசிறிவிட்டு பிரதேசவாசிகள் செல்கிறார்கள்.

தினமும் இதே பிரச்சினை துன்பமாகத்தொடர அதனைத்தடுக்க என்ன செய்யலாம் என்று யோசிக்கும்போது சிறுவனுக்கு விசித்திரமான ஒரு எண்ணம் ஏற்படுகின்றது. அதனை பிரயோகிப்பதன் மூலம் வெற்றியும் அடைகின்றான். இந்த வெற்றி அவர்களை உற்சாகம் கொள்ளச்செய்கின்றது.

இதனை ஒரு விழிப்புணர்வு குறும்படமாகக்கொள்ள முடியுமா என்றால் இல்லை என்றே சொல்ல முடியும். குப்பைகள் போடுவதனால் ஏற்படும் பாரதூரமான பிரச்சினைகளையும் அவை அகற்றப்படவேண்டிய முக்கியத்துவம் பற்றியும் குறும்படம் பேசவில்லை. நுளம்புப்பெருக்கம் ஏனைய இடைஞ்சல்கள் பற்றிப் பேசவில்லை. சிறுவன் பார்வையில் குப்பைகளை அந்த இடத்தில் அகற்றுவதற்கான தேவை ஒரு பூச்செடியை மையப்படுத்தி அமைந்திருக்கின்றது.பூச்செடி அமைத்துள்ள பிரதேசம் அழகாக இருக்கவேண்டும் என்று மட்டுமே அவன் எண்ணுகின்றான். அதனைக் காரணமாக முன்னிறுத்தியே சிறுவன் குப்பைகளை அகற்ற விளைகிறான். அந்தக் குப்பைகளின் சேர்க்கையால் ஏற்படும் மற்றொரு பிரதிபலன்சார்ந்த விளைவுகள் இன்னும் ஆழமாக சொல்லப்படவில்லை.

வசனங்கள் இல்லாமல் வெறும் நான்கு நிமிடங்களில் பின்னணி இசையோடு குறும்படத்தை நகர்த்தியிருகின்றார்கள். இசை நெகிழ்ச்சிகரமாக இல்லாமல் இருப்பது படச்சட்டங்களில் உள்ள அழகியலை மட்டுப்படுத்தி விடுகின்றது. எதற்கும் ஒரு முதல் அடி தேவைப்படுகின்றது. சிறுவனின் பார்வையில் பூச்செடியை மீட்பதற்காக குப்பைகளை அகற்ற அவன் முயன்று இருக்கலாம், ஆனால் அது அச்சூழலுக்கு மிகத் தேவையான விடயத்தை நிறைவேற்றி வைத்துவிடுகின்றது. அது ஒரு முதல் அடியாக இருக்கும்.

**-அனோஜன் பாலகிருஷ்ணன்-**

# ஈழத்துக் கவிதைகள்

## வள்ளுவத்தில் ஊழியரைக்கட்டுப்படுத்தல் (Staff Controlling)

எதிரியைப்பற்றி அவனுடைய பலம் பலவீனங்களைப் பற்றி அறிந்து கொள்ளாமல் அவ்வாறு அறிந்து கொண்ட பலம் பலவீனங்களுக்கேற்றவாறு தம்மைத் தயார்படுத்திக் கொள்ளாமல் எதிரியை தாக்க முற்படுவது தோல்வியில் முடியும். எனவே முடிவெடுக்கு முன் மிகக் கவனமாக ஆராய்ந்து அறிந்து இருக்கவேண்டும். முடிவெடுத்தல் என்பது ஒரு பிரச்சினைக்குரிய காரணிகளை இனங்கண்டு அதைத் தீர்க்க முயற்சிப்பதாகும். ஒரு முகாமையாளர் என்பவர் நேரத்திற்கும் இடத்திற்கும் தேவைக்குமேற்ற வகையில் உடனடியாக முடிவெடுக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.இம் முடிவெடுக்கும் ஆற்றலானது ஊழியரைக் கட்டுப்படுத்துவதில் மிகமுக்கியமானது.

A.Simon எனும் அறிஞர் முடிவெடுத்தலென்பது மூன்று வகைப்படுமென்கிறார். அவையாவன, புத்திசாலித்தனமான நடவடிக்கை (intelligence activity), வடிவமைக்கப்பட்ட நடவடிக்கை (design activity) மற்றும் தெரிந்தெடுக்கும் நடவடிக்கை (choice activity) என்பனவாம். முடிவெடுத்தல் தொடர்பான இந்த கருத்துக்களை கீழ்வரும் ஈரடி சிறப்பாக வெளிப்படுத்துகின்றது.

**ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல் (குறள் 472)**

ஒருவர் தனக்குப் பொருந்தும் என நினைத்து தெரிவு செய்து ஒரு செயலில் ஈடுபடும் போது அச்செயல் பற்றி அனைத்தையும் ஆராய்ந்தறிந்து அச்செயலைப் புத்திசாலித்தனமான முறையில் செய்ய முயற்சி மேற்கொண்டால் முடியாதது எதுவுமில்லை என்கிறார் வள்ளுவர் . எனவே முகாமையாளர் ஊழியர்கள் தொடர்பான ஒரு செயலைச் செய்வது தொடர்பாக முடிவெடுக்குமுன் அச்செயல் பற்றித் தீர ஆராய வேண்டும். அப்போதுதான் அவர் ஊழியர்களைக் கட்டுப்படுத்தும் விதத்தில் ஒரு வெற்றிகரமான முகாமையாளராக இருக்க முடியும்.

ஒரு முகாமையாளர் ஊழியரைக் கட்டுப்படுத்தும் விதத்தில் அல்லது அவர்களுக்கு கட்டளையை பிறப்பிக்கும் போது தன்னால் செய்யக்கூடிய விடயங்களை மட்டுமே செய்ய வேண்டும். தன்னால் செய்ய முடியாதவற்றைத் தவிர்க்க வேண்டும். அதேவேளை முகாமையாளர் ஊழியர்களுக்கு செய்யக் கூடியதை செய்யாது விடுவதும், செய்ய முடியாதவற்றை அல்லது செய்யத் தேவையில்லாத விடயங்களைச் செய்வது அல்லது செய்ய முயற்சிப்பதையும் தவிர்க்க வேண்டும். இக்கருத்தினை கீழ்வரும் ஈரடி சிறப்பாக வெளிப்படுத்துகின்றது.

**செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானுங் கெடும் (குறள் 466)**

ஒருவன் செய்யத்தகாத செயல்களைச் செய்வதனால் கெடுவான் அல்லது கேடு ஏற்படும். அதேபோல் ஒருவன் செய்யத் தக்க செயல்களைச் செய்யாமல் விடுவதனாலும் கெடுவான் அல்லது கேடு ஏற்படும் என்கிறார் வள்ளுவர் . எனவே முகாமையாளர் ஊழியர்கள் விடயத்தில் தன்னால் முடிந்த மட்டுமே செய்ய வேண்டும்.முடியாதவற்றை தவிர்க்க வேண்டும்.

ஒருவர் தான் செய்யும் செயலில் அல்லது எடுக்கும் முடிவில் உறுதியாக இருப்பது என்பது அவருடைய ஆளுமையின் வெளிப்பாடாகும் . எனவே ஊழியர்கள் விடயத்தில் முடிவெடுத்த பின் பின்வாங்குவதென்பது நல்ல முகாமைத்துவத்திற்கு பொருத்தமற்றது. அத்தகைய நிலைமையை ஊழியர்களிடத்தில் ஒரு மெச்சத்தக்க சூழ்நிலையை உருவாக்காது. இக் கருத்துகளை கீழ்வரும் ஈரடி சிறப்பாக வெளிப்படுத்துகின்றது.

**சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு**
**தாழ்ச்சியுள் தங்குதல் தீது (குறள் 671)**

ஒருவர் ஒரு செயலில் ஈடுபட முடிவெடுக்கும் போது அச்செயலால் விளையும் சாதக பாதகங்கள் பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கவேண்டும். அவ்வாறு முடிவெடுத்த பிறகு முடிவினை செயற்படுத்த காலந்தாழ்த்துவது என்பது தீதாக முடியும் என்கிறார் வள்ளுவர். எனவே முகாமையாளர் ஊழியர் தொடர்பில் சரியான முடிவு எடுக்கவும் எடுத்த முடிவை செயற்படுத்தவும் தயங்கக்கூடாது.

**சைவப்புலவர் க.பத்மானந்தன்**

# பூலோகம்

## திரைவிமர்சனம்




ஒரு கீரைக்கட்டில் இருந்து கூட கொள்ளை லாபம் எடுக்கும் கார்ப்பரேட் சூழ்ச்சியை, 'பாக்ஸிங் ரிங்' கில் வைத்துப் பின்னியெடுக்கிறது 'பூலோகம்'.

பொழுதுபோக்கு, தேசப்பற்று, ஆரோக்கியம் என ஒவ்வொன்றையும் கார்ப்பரேட்களின் லாப வெறிக் கண்ணி எப்படி இறுக்கிப் பிடித்திருக்கிறது என்பதை பொளேர் பாக்ஸிங் பன்ச்களுடன் வெகு ஜனத்துக்குக் கடத்தியிருக்கிறார் இயக்குநர் கல்யாணகிருஷ்ணன்.

பாக்ஸிங் விளையாட்டில் பரம்பரைப் பகையாளிகள், வட சென்னையின் நாட்டு மருந்துப் பரம்பரையும் இரும்பு மனிதர் பரம்பரையும்.

இந்தத் தலைமுறையில் பூலோகம் (ஜெயம் ரவி) எதிர் முகாமின் ராஜேஷை வீழ்த்த நினைக்க, அதை ஹடி.ஆர்.பி டிரெண்டிங்'காக மாற்றி கோடிகளைக் குவிக்கத் திட்டமிடுகிறார் தனியார் டி.வி சனல் உரிமையாளர் பிரகாஷ்ராஜ். திடுக் திருப்பங்களுக்குப் பின்னர் அமெரிக்காவில் இருந்து ஒரு 'கில்லர்' பாக்ஸர் போட்டியில் பங்கேற்கிறார்.

லாபத்துக்காக பாக்ஸிங் ரிங்கில் வைத்து ரவியைக் கொல்லத் திட்டமிடுகிறார் பிரகாஷ் ராஜ். அமெரிக்க பாக்ஸரையும், கார்ப்பரேட் வெறியையும் ரவி ஒருசேர எப்படிச் சமாளித்தார்?

முரட்டு பாக்ஸராக மிரட்டுகிறார் ரவி. திமில் உடலும் திமிர் கோபமுமாக ருத்ரதாண்டவம். தொழில் முறை பாக்ஸர் போல ரிங்குக்குள் நுழைவதற்கு முன்னரே வெறியேற்றிக் கொள்வது, படபடவென நடனமாடியபடியே பன்ச் களைப் பறக்கவிடுவது என ஒவ்வொரு ரவுண்டிலும் டிஸ்





டிங்ஷன்.

ஒரு காட்சியில் ஆங்கிலம் பேச, பல காட்சிகளில் டாட்டூ காட்ட... மட்டுமே பயன்பட்டுள்ளார் த்ரிஷா. பிரகாஷ்ராஜ் உள்ளிட்ட மற்றும் பலரும் பக்கா. மொழி, இனம்வறுமை, தேசபக்தி என அனைத்தையும் பணமாக்கும் கார்ப்பரேட் களவாணித்தனங் களை உரித்து உப்புக்கண்டம் போடுகின்றன எஸ்.பி.ஜனநாதனின் வசனங்கள்.

ஆனால், அதிகம் படிக்காத பூலோகம், திடீரென உலக அரசியல் பேசும் அதிபுத்தி சாலியாக மாறுவது எப்படி? 'மயான கொள்ளை' பாடலில் உக்கிரம் காட்டும் ஸ்ரீகாந்த் தேவா, பின்னணி இசையில் குழந்தையாகி விடுகிறார். சதீஷ்குமாரின் கமரா, பாக்ஸிங் ரிங்குக்குள் துள்ளி விளையாடுகிறது.

கைதட்டி ரசிக்க மட்டும் அல்ல... கைகட்டி யோசிக்க வைத்ததில் ஈர்க்கிறான் பூலோகம்.

பிறந்த நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 01 1966



மறைவு 01 01 2008

திரு.தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் யாழ்.,கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்)

எங்கள் பாசமிகு அப்பாவிற்கு
இன்றுபிறந்தநாள்
ஆண்டுகள் பல நீண்டுதான் செல்கின்றன.
நீங்கள் வரவில்லை இன்னும்.........
ஐம்பதாவது பிறந்ததினத்தில்
அம்மாவும் பிள்ளைகள் நாமும்
உங்களை வணங்குகின்றோம்
உங்கள் அருட்பணி தொடர்ந்து
ஆனந்தமாய் நாம் என்றும் வாழ்ந்திட
அருள்செய்வீர் அப்பா!!!!!!

பவதாரணி (மகள்),
பிரணவன் (மகன்),
பவித்திரா(மகள்),
276, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2221877

தகவல்: திருமதி விஜயகலா மகேஸ்வரன்,
இல.32, 36 ஆவது ஒழுங்கை, கொழும்பு-06.
தொலைபேசி: 2360679

## சென்னை திரைப்பட விழாவில் முதல் நாளில் கலக்கி விக்டோரியா

பதின்மூன்றாவது சென்னை சர்வதேச திரைப்பட விழா நேற்று, சென்னை உட்லண்ட்ஸ் திரையரங்கில் தொடங்கியது. நடிகர் சங்கம் சார்பாக கார்த்தி, பொன்வண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடக்க விழா நிறைவடைந்த பின் ஜேர்மன் மொழித் திரைப் படமான விக்டோரியா திரையிடப்பட்டது.

### விக்டோரியா - படம் பற்றி

ஒரே ஷொட்டில் 138 நிமிடங்கள் எடுக்கப்பட்ட திரைப்படமான விக்டோரியாவில், ஒரு பிழையைக் கூட கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு, அனைத்து நடிகர்களுமே தொடர்ந்து இரண்டு மணிநேரத்துக்கும் மேல் இயல்பாகவும், சிறப்பாகவும் நடித்துள்ளனர்.

படத்தின் முதல் பாதி, விக்டோரியாவையும், நான்கு ஆண்களையும் சுற்றியே நகர்ந்தாலும், இரண்டாம் பாதி மிரள வைக்கிறது. அதிகாலை 4 மணி போல் ஆரம்பிக்கப்படும் திரைப் படம் காலை 7 மணிக்குள் முடிந்து விடுகிறது. டஸ்க் டு டான் என்பது போல் இருட்டில் தொடங்கி வெளிச்சத்தில் முடிகிறது இப்படம்.

படத்தில், பணம், போதை, துப்பாக்கி போன்ற கேங்ஸ்டர் ஐட்டங்கள் நிறைந்திருந்தாலும், அசால்ட்டாக விக்டோரியா களத்தில் குதித்து, ஆட்டய போடும் நண்பர்களைக் காப்பாற்றுவது செம.

படத்தின் டெக்னிக்கல் ஹீரோவான ஒளிப் பதிவாளர், ஸ்டர்லா ப்ராண்ட்த் க்ரோவ்லென், படம்முழுக்க, கேமராவுடன், நடிகர்களை போலோ செய்து அட்டகாசப்படுத்தியுள்ளார்.

படம் முடிந்தவுடன், கமரா என்று முதலில் ஒளிப்பதிவாளரின் பெயரைப் போட்டது தான் அவருக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம்.

அதை விடப் பெரிய அங்கீகாரம், 65வது பெர்லின் திரைப்பட விழாவில் தலைசிறந்த ஒளிப் பதிவுக் கான சில்வர் பேர் விருதை இப்படம் வென்றது தான்.

இந்த அமர்க்களமான படத்துடன் சென்னை திரைப்பட விழாவின் முதல் நாள் நிறைவு பெற்றது. 13 ஆம்திகதி வரை நடக்கும்விழாவில், இன்னும் பல பிரமிப்பூட்டும் படங்கள் இடம்பெறவுள்ளன.

SINGER FINANCE இடமிருந்து மட்டுமே

பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிக்காக
அதிககடன் தொகை குறைந்த வட்டி வீதத்தில்




தொடர்புகளுக்கு
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
தனு 077 9 357 124

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

# ஆட்சியைக் கவிழ்க்க சீனா செல்கிறாரா மகிந்த?

சீனா தனது அரசியல் கருத்தியல்களைத் தளமாகக் கொண்டே தனது வெளியுறவுக் கோட்பாட்டைத் திட்டமிட்டது. பின்னர், இக்கோட்பாடானது சீனாவின் பொருளாதார நலன்களை மையப்படுத்தி வரையறுக்கப்பட்டது.

இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுளளார். இதனைப புதினப் பலகைக்காக மொழியாககம் செய்துள்ளார் நித்தியபாரதி.

2014 இல் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் தோல் வியுற்ற பின்னர், அப்போதைய எதிர்க்கட்சித தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்கவும், விரிவுரை ஆற்றவும் சென்றிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவிற்கான தனது பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் கொழும்பில் நடத்திய ஊடக மாநாடு ஒன்றில், அரசாங்கங்களைக் கவிழ்ப்பதற்கான மூலோபாயங்கள் தொடர்பாகக் கற்பதற்காகவே தான் அமெரிக்கா செல்லவுள்ளதாக தெரிவித்திருந்தார்.

அமெரிக்காவின் Massachusetts தொழில்நுட்ப நிறுவகத்தில் ஒரு மாதம் கற்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பினார். காலத்தை விரயமாக்காது, சஜித் பிரேமதாசவுடன் ஒன்றிணைவதற்கான பேச்சுக்களை அவர் மேற்கொண்டார்.

இதன் பின்னர் இடம்பெற்ற ஊவா மாகாண சபை தேர்தலில் ரணில் விக்கிரம சிங்கவின் கட்சி சிறியளவு வேறுபாட்டில் தோல் வியுற்றது.

ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான அறிவிப்பை மகிந்த ராஜபக்ஷ விடுத்த போது, அவரை எதிர்த்து மைத்திரி தேர்தலில் களமிறங்கினார்.

தற்போது மகிந்த சீனாவிற்கான இரண்டு வார காலப் பயணத்தை மேற்கொள்வதற்குத் தயாராகிறார். ஒரு மாத காலம் சீனாவில் தங்கவுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ முன்னர் அறிவித்த போதிலும் தற்போது இதை இரண்டு வாரங்களாகக் குறைத்துள்ளார்.

மகிந்தவின் சீனா நோக்கிய பயணத்தின் இரகசியம் இன்னமும் வெளியிடப்படவில்லை. மகிந்த விடுமுறையைக் கழிப்பதற்காகவே சீனா செல்வதாக சிலர் கூறுகின்றனர்.

ஆனாலும் மைத்திரி-ரணில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகத் தான் சீனாவிற்கான பயணத்தை மகிந்த முன்னெடுக்கிறாரா என்பதில் சந்தேகம் நிலவுகிறது.

அண்மையில் முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் இணைந்து இலங்கைக்கான ரஷ்யத் தூதுவரைச் சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்பில் நிதி மோசடிப் பிரிவைச் சேர்ந்த புலனாய்வாளர்களால் தான் எவ்வாறு மோசமாக நடத்தப்பட்டேன் என்பதை பீரிஸ், ரஷ்யத் தூதுவரிடம் விபரித்திருந்தார்.

இலங்கை அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு பேராசிரியர் பீரிசும் ரஷ்ய உதவியை நாடியிருந்தாரா என சந்தேகிக்கப்படுகிறது.

எனினும், மகிந்தவும் ஜீ.எல். பீரிஸும் இது தொடர்பில் விழிப்பற்றவர்களாகவே உள்ளனர் என்பதே உண்மை. தமது பிராந்தியத்தில் ஆட்சியிலுள்ள அரசாங்கங்கங்களைக் கவிழ்ப்பதற்கு சீனாவும் ரஷ்யாவும் ஒருபோதும் நிதியை அள்ளி வீச மாட்டார்கள் என்பது நடைமுறை உண்மையாகும்.

இவ்விரு நாடுகளும் எப்போதும் ஆட்சியிலுள்ள அரசாங்கங்களுக்கே ஆதரவு அளித்து வருகின்றன. 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்கின்ற பழமொழி போன்றே சீனாவும் ரஷ்யாவும் தருணங்கள் வாய்க்கும் போது அவற்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் இயல்புடைய நாடுகளாகும்.

அமெரிக்காவும் ஐரோப்பாவும் ஜனநாயகத்தைப் பலப்படுத்த முயற்சிக்கும் அதிகாரத்துவ ஆட்சியை நடத்தும் நாடுகளுடன் நட்பைப் பேண விரும்பும் இயல்பை சீனாவும் ரஷ்யாவும் கொண்டுள்ளன. இவ்வாறான நாடுகளை அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிற்கு எதிராகக் கிளர்ந்தெழ வைப்பதற்கு சீனாவும் ரஷ்யாவும் தமது ஆதரவை வழங்குகின்றன.

அதிகாரத்துவ நாடுகளுக்கு ரஷ்யா ஆயுதங்களை விற்கின்றது. இது போன்று எக்சிம் வங்கி போன்ற தனது வங்கிகளின் ஊடாக அதிக வட்டியுடன் சீனா கடன்களை வழங்குகின்றது.

ஆகவே, சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளுக்கு பயணம் செய்வதன் மூலம் மகிந்தவும் அவரது சகாக்களும் ஒருபோதும் இலங்கை அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது.

மறுபுறத்தே, இந்தியாவுடன் ஆலோசிக்காது இலங்கையின் உள்விவகாரங்களில் ரஷ்யா ஒருபோதும் தலையீடு செய்யாது. பல பத்தாண்டுகளாக ரஷ்யாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் வரலாற்று சார் தொடர்புகள் பேணப்படுகின்றன.

இதற்கும் அப்பால் ராஜபக்ஷாக்களை இந்தியா அடியோடு வெறுக்கிறது. இதுவே அப்பட்டமான உண்மையாகும்.

மைத்திரி-ரணில் அரசாங்கத்துடன் சீனா சில முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. தற்போதைய இலங்கை அரசாங்கமானது சீன ஜனாதிபதியால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை இடைநிறுத்தியதானது சீனா சந்தித்த மிகப்பாரிய பிரச்சினையாகும்.

எனினும், இத்திட்டத்தை மீளவும் ஆரம்பிப்பதற்கான அனுமதியை மைத்திரி-ரணில் அரசாங்கம் வழங்கியுள்ளது.

இத்திட்டம் இடைநிறுத்தப்பட்ட போது மைத்தி ரியை சீனாவிற்கு வருமாறு சீன அரசாங்கம் அழைப்பு விடுத்திருந்தது.


தற்போது இத்திட்டத்தைத் தொடர்வதற்கு பச்சைக் கொடி காண்பிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மகிந்தவின் பெறுமதி மற்றும் முக்கியத்துவம் என்பது சீனாவைப் பொறுத்தளவில் குறைவானதாகவே உள்ளது. இவ்வாறான முன்னேற்றங்களை நோக்கும் போது, மகிந்தவால் திட்டமிடபபட்டுள்ள சீனாவிற்கான பயணமானது தனித்துவமான ஒன்றல்ல.

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில், சீனாவிற்கு வருமாறு ரணிலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. சீனாவின் இந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட ரணில் நீண்ட விடுமுறையை சீனாவில் கழித்தார்.

மகிந்த அரசாங்கத்தின் பிரச்சினைகளை ரணில், சீனாவிடம் தெரிவிக்கவில்லை. ஏனெனில் இவை சீனாவின் நலன்களுக்குப் பொருத்தமற்றவையாகக் காணப்பட்டன.

மகிந்தவின் மீதான பிடியை சீனா அவ்வளவு இலகுவில் கைவிடமாட்டாது. இலங்கையில் பல சீனத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மைத்திரியும் ரணிலும் இத்திட்டங்களைக் குழப்ப முயற்சித்தால், சீனா 'மகிந்த அட்டையைப்' பயன்படுத்தத் தொடங்கலாம்.



இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவைப் போல, இலங்கையின் அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸ் போன்றவற்றுடன் சீனா நெருக்கமான உறவைப் பேணவில்லை.

இலங்கையர்களுக்கு சீனா தனது நாட்டில் புலமைப்பரிசில்களை வழங்கி உயர்கல்வி கற்பதற்கான அனுமதியை மட்டும் வழங்கியுள்ளது.

இவ்வாறான புலமைப் பரிசில்களை இலங்கையர்களுக்கு வழங்கும் போது அவர்கள் சீன ஆதரவாளர்களாக மாறிவிடுவார்கள் என சீனா கருதுகிறது.

எனினும், இலங்கை அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு முன்னர் உதவிய நாடுகளுள் சீனாவும் ஒன்றாகும்.

1960 தொடக்கம் 1965 வரையான காலப்பகுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கத்தைக் காப்பாற்ற சீனா உதவியது. அந்தவேளையில், இலங்கையின் அனைத்துலக அரசியல் விவகாரங்களில் தலையீடு செய்வதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியது.

1965 இல், சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தை ஐ.தே.க ஆட்சிக் கவிழ்ப்புச் செய்தது. இலங்கை அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக சீனா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த புத்த பிக்குவான வணக்கத்திற்குரிய கென்பிற்றகெதர ஞானசீச தேரர் என்பவருடன் தொடர்பைப் பேணியதாக 1965 இல் பதவியேற்ற டட்லி சேனநாயக்கவின் அரசாங்கத்தால் குற்றம் சுமத்தப்பட்டது.

1970 இல் சீனாவுடன் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் நெருக்கமான உறவைப் பேணியது. ஆனால் 1971 இல் தனது அரசாங்கத்திற்கு எதிராக ஜே.வி.பி. கிளர்ச்சி இடம்பெறுவதற்கு சீனா துணைபோனதாக குற்றம் சுமத்திய சிறிமாவோ பண்டாரநாயக்கஅரசாங் கம் சீனாவை இடைநிறுத்தியது.

ஜே.வி.பி கிளர்ச்சிக்கு ஆதரவாக சீனாவால் கொழும்பிற்கு கப்பல்களில் ஆயுதங்கள் அனுப்பி வைக்கப்பட்டது என சிறிமாவோ பண் டாரநாயக்க அரசாங்கத்தால் உறுதிப்படுத்தப்பட்டது.

சீனா தனது அரசியல் கருத்தியல்களைத் தளமாகக் கொண்டே தனது வெளியுறவுக் கோட்பாட்டைத் திட்டமிட்டது. பின்னர், இக்கோட்பாடானது சீனாவின் பொருளாதார நலன்களை மையப்படுத்தி வரையறுக்கப்பட்டது.

இருப்பினும் சீனா தனது பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதற்குத் தேவையான அரசாங்கங்களுடனேயே நெருக்கமான உறவைப் பேணுகின்ற கோட்பாட்டைக் கொண்டுள்ளதே தவிர அரசாங்கங்களைக் கவிழ்ப்பதற்குத் தனது ஆதரவை வழங்கவில்லை.

சீனாவின் உண்மையான நலனை மகிந்த அறியாமற் செயற்படுகிறார் போல் தோன்றுகின்றது.

# விடியலின் சாயல்

சிறுகதை



இரவு நேரம் எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. ஊர் அடங்கிக்கொண்டிருந்த அவ்வேளையில் சங்கீதா பாடக் குறிப்புக்களில் மூழ்கிப் போயிருந்தாள். அவள் ஒரு பட்டதாரி ஆசிரியை. மறுநாள் தனது வகுப்பு மாணவர்களுக்கு கற்பிக்கவேண்டிய பாடத்தை தயார் செய்து, அதை மாணவர் மனதில் அப்படியே பதிய வைக்க வேண்டும் என்பதில் அதீத அக்கறை கொண்டவள். எதையோ நினைத்துக் கொண்டவளாய் அருகிலிருந்த கைபேசியை எடுத்து, நேரத்தைக் கவனிதாள்.

மணி ஒன்பதைத் தாண்டியிருந்தது. துடித்துப் பதைத்து எழுந்தவள் அவசரமாக அப்பாவின் அறைக்குள் நுழைந்தாள். நல்லவேளையாக அப்பா சிவநாதன், துயில் கொண்டிருக்கவில்லை. படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார்.

"அப்பா! மருந்துகள் போட்டாச்சோ" துடிப்புடன் கேட்ட மகளுக்கு ஒரு பெருமூச்சுடன் ஆசுவாசமாக பதில் சொன்னார் தந்தை.

"மருந்துகளைப் போட்டால் உடல் உபாதை தீரும். ஆனால்..., மன உளைச்சல்... அது நித்திரை வர விடுகுதில்லையே"

"ஏனப்பா அப்படிச் சொல்லுறியள்?"

ஒன்றுமே புரியாத சின்னக் குழந்தையைப்போல் கேட்ட மகளை ஒரு கணம் ஆதங்கத்துடன் பார்த்துவிட்டு சொன்னார்.

"ம்... எல்லாம் உன்னைப் பற்றி...உன்னுடைய வாழ்க்கையைப் பற்றிய கவலைதான். பிள்ளை குட்டிகளைப் பெற்று, அதுகளைப் பராமரிக்கவேண்டிய காலத்தில... என்னிலை கரிசனை காட்டிறியே. அதை நினைச்சாத்தான் எனக்குக் கவலையாய் இருக்கு"

அவரது குரல், கரகரப்பதை சங்கீதா அவதானித்தாள்.

"சும்மா... தேவையில்லாததையெல்லாம் மனதில போட்டு குழப்பிக் கொண்டிருாமல், இந்தாங்கோ மருந்துக் குளிசைகளைப் போடுங்கோ. போட்டால் தன்னால நித்திரை வந்திடும்" மேசையில் ஏற்கனவே, தயாராக வைத்திருந்த தண்ணீரையும் எடுத்துக் கொடுத்தாள்.

சிவநாதன் அதை வாங்கிக் குடித்துவிட்டு, படுத்துக் கொண்டார். மருந்தின் வீரியும், அவருக்கு கிறக்கத்தை ஏற்படுத்தி அவரைத் தலாட்ட முயன்ற போதும், அவரது உள்ளுணர்வுகள், அதற்கு கட்டுப்பட மறுத்து தம்போக்கில் பயணிக்கத் தொடங்கின.

வயதுக்கு வந்த பெண்ணொருத்தி கன்னியாக வீட்டில் வளைய வந்துகொண்டிருந்தாள் அதுவே பெற்றோருக்கு உறுத்தலையும் கவலையையும் ஏற்படுத்தும். ஆனால்..., அவர்களுடைய மகள் திருமணமாகியும் வாழாவெட்டியாக வந்து, வீட்டில் தங்கியிருந்தால்... அதுவே இரட்டிப்பு வருத்தம்தானே. அந்த வருத்தத்தைத்தானே அவர், அனுபவித்துக் கொண்டிருக்கிறார். சிறிது சிறிதாக, மருந்தின் வலிமை அவரது உள்ளுணர்வை தோற்கடிக்க அவர், மெதுவாக உறக்கத்தில் ஆழ்ந்துபோனார்.

அப்பாவினால் சங்கீதாவின் மனதிலிருந்த காயம் கிளறப்பட்டுவிட்டதால், அது தந்த எரிச்சல் அவளை நிலை குலைய வைத்தது. அவளுடைய கணவன், ஜெயராம் பற்றிய சிந்தனைகள் அவள் உள்ளத்தை முற்றாக ஆக்கிரமித்துக்கொண்டது.

எல்லாப் பெண்களையும் போல அவள் மிகுந்த எதிர்பார்ப்புடன்தான் ஜெயராமைக் கைப் பிடித்தாள். இல்வாழ்க்கையில் மகிழ்ச்சி நீண்டநாள் நிலைக்கவில்லை. திருமணமான புதிதில் அவன் லேசான போதையுடன் வீட்டிற்கு வருவதை அவதானித்தவள், அவனிடமே நேரில் கேட்டுவிட்டாள்.

"குடிப்பழக்கம் உங்களுக்கு இருக்கிறதா?"

"என்ன! சே..ச்..சே.. அப்படியொன்றும் கிடையாது. இன்றைக்கு ஆபீசில் ஒரு *பார்ட்டி. ட்றிங்ஸ்* எடுக்காட்டி பிரண்ட்ஸ் பகிடி பண்ணுவாங்கள். அதுதான் சாடையா.. ஒரு டோஸ் போட்டனான்."

ஜெயராம் மழுப்பிவிட்டான். காலப்போக்கில் அவனது சுயரூபம், தெரியத்தொடங்கியது. சங்கீதா நயமாக எடுத்துக் கூறினாள். அவனோ... புயலாக எழுந்து ஆர்ப்பரிக்கத் தொடங்கினான். இதனால், கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடும் சில சமயங்களில் சண்டையும் மூளத்தொடங்கியது. இறுதியில் ஒருநாள், அவர்களிடையே மூண்ட வாய்த்தர்க்கம் பெரும் சண்டையாக மாறி, கணவன் அவள் மீது, கை வைக்கும் அளவிற்கு முற்றிவிட்டது. அதுவே அவர்களது பிரிவு வாழ்க்கைக்கும் காரணமாயிற்று.

ஜெயராமினது குடிப்பழக்கத்துக்கு பின்னணியாக ஏதோ ஒரு காரணம் இருக்கவேண்டும் என்பதை அவள் திட்டவட்டமாக நம்பினாள். ஒரு நாள் மாமியாரிடம் நேரிடையாகக் கேட்டும் விட்டாள்.

"உண்மைதான் பிள்ளை. அவன் பள்ளிக்கூடப்படிப்புக்குப் பிறகு, ஒரு பிள்ளையை விரும்பியிருந்திருக்கிறான். ஏ.எல் சோதனை எடுத்தபிறகுதான் அது நடந்திருக்கு. இவனுக்கு நல்ல *றிசல்ற்* இருந்தும் கம்பஸ் கிடைக்காமல் போயிட்டுது. பிறகுதான் வங்கியில பயிற்சியாளராய்ச் சேர்ந்திருந்தபோது, அந்தப் பிள்ளை சொல்லாமல்கொள்ளாமல் கொழும்புக்குப் போய் அங்கேயிருந்து வெளிநாட்டுக்குப் போயிட்டுது. தாய் தகப்பன் வெளிநாட்டு மாப்பிள்ளையை பேசிப் பொருத்திப்போட்டினம் என்ற இரகசியம் பிறகுதான் இவனுக்குத் தெரிஞ்சிருக்கு. அதில இருந்துதான் இந்தக் கோலம்" கூறும்போதே அவளது முகம் கறுத்துச் சிறுத்துப் போனதையும் அவள் அவதானிக்கத் தவறவில்லை.

என்ரை தலைவிதி. என்னைத் தேடிக் கட்டிவைச்சிட்டினம மனதுக்குள் நினைத்துக் கொள்வதைத் தவிர அவளுக்கு வேறு வழியிருக்கவில்லை. கடைசியாக வீட்டில் நடந்த ருத்திர தாண்டவத்தை அவள் மனம் இப்போது மீட்டுக்கொள்கிறது...

வழமைபோல் அன்று மாலையும் குடித்துவிட்டு வந்திருந்தான். சங்கீதா அவனை ஏறெடுத்தும் பார்க்காமல் தனது பாடசாலை வேலையில் மூழ்கியிருந்தாள்.

"நான் வந்ததுகூட தெரியாமல், அப்படியென்ன வேலை?"

அவனது கர்ச்சனைக் குரல் கேட்டு திரும்பிப்பார்த்தவள் கேட்டாள்..

"உங்களை ஏமாற்றிவிட்டுப் போனவள், அங்கே சுகபோக வாழ்க்கை வாழ, நீங்கள் மட்டும் ஏன் அதையே நினைச்சுக் குடிச்சு உங்கடை உடம்பைக் கெடுத்துக் கொள்ளுறியள். வடிவாய் யோசிச்சுப் பார்த்தால், நான் சொல்லுறதில இருக்கிற நியாயம் உங்களுக்குப் புலப்படும்"

"என்ன சொல்லுறாய் நீ. நீயும் ஒருபொம்பிளைதானே... யாரை ஏமாற்றிப்போட்டு, இப்ப பதிவிரதை வேசம் போட்டுக் கொண்டு வந்து என்னோடை வாழுகிறாயோ.. ஆர்கண்டது"

தனது தலையில் யாரோ ஓங்கிக் குட்டிவிட்டது போன்றதொரு பிரமையில் துடித்துப் போனாள். சங்கீதா மளமளவென்று, வார்த்தைகளை அள்ளி வீசினாள்.

"என்னுடைய வாழ்க்கையில ஒரு களங்கமும் இல்லை. அப்பிடி என்ரை அம்மா அப்பா வளர்க்கவும் இல்லை. நடந்தது நடந்து போச்சுதென்று நினைச்சு கிடைச்சதைக்கொண்டு, நிம்மதியாய் வாழத்தெரியாத ஏமாந்த சோணகிரிதான் நீங்கள். இப்ப தேவையில்லாத கதைகளைக் கதைத்து என்னை வீணாய்ச் சீண்டாதேயுங்கோ. அவ்வளவுதான் நான் சொல்லுவன்" கண்ணீர் மல்க அவள் கூறினாள்.

ஜெயராமுக்கு போதை தலைக்கேறியது. "என்னடி சொன்னாய்... நான் என்ன ஏமாந்த சோணகிரியோ.." ஓடிவந்து அவளது தலையைப் பிடித்து சுவரோடு மோதினான். ஜெயராமின் தாய் வந்து தடுக்க முற்படுமுன், எல்லாம் மின்னல் வேகத்தில் நடந்துமுடிந்தது.

சங்கீத நினைவற்றுக் கிடந்தாள். நெற்றியிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, நான்கு இழைகள் போட்டு, மருந்தும் கட்டிவிட்டார்கள். மயக்கத்தில் இருந்து மீண்ட சங்கீதா, தான் தலை சுற்றிக் கதவுநிலையில் அடிபட்டுக் கீழே விழுந்துவிட்டதாகக் கூறி கணவனைக் காப்பாற்றிவிட்டாள். அவளது முகத்தில் விழிக்கத் தயக்கமுற்றவனாய் ஜெயராம் வைத்தியசாலைப் பக்கமே தலைகாட்டவில்லை.

வைத்தியசாலையிலிருந்து வெளியேறியதும் சங்கீதா, தனது தாய் வீட்டிற்குப் போய்விட்டாள். வடமராட்சியிலுள்ள பாடசாலையொன்றுக்கு மாற்றம் எடுத்து அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டாள். கணவன் இன்றைக்குத் திருந்துவான்.. நாளைக்குத் திருந்துவான்... என்ற எதிர்பார்ப்பு தகர்ந்துபோய்விட்ட நிலையில் பேதையவள், என்னதான் செய்ய முடியும்?

வருடங்கள் இரண்டு ஓடி முடிந்தனவே தவிர, அவர்களது வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் இல்லை. அம்மாவும் அப்பாவும் அவளுக்கு புத்திமதி கூறுவார்கள். "என்ன இருந்தாலும் புருஷனைப் பிரிந்து வாழ்வது பெண்ணுக்குத்தான் இழுக்கு. *கல்லென்றாலும் கணவன் புல்லென்றாலும் புருஷன்* என்று சொல்லுவர்கள். நீதான் கொஞ்சம் அனுசரிச்சுப்போய் அந்த ஆளைத் திருத்தவேணும்"

"என்ன சொல்லுறியள். திருந்திற ஜென்மமா அது?" என்று சீறுவாள். மதுவுக்கு அடிமையாகிய பித்தனாகவே அவள் ஜெயராமைக் கருதினாள். இருதரப்பிலும் இணையக் கூடிய சாத்தியம் எதுவும் தோன்றவில்லை. அதேசமயம் விவாகரத்துப் பெறும் நோக்கமும் அவர்களிடம் இருக்கவில்லை.

காலச்சக்கரம் தன்போக்கில் சுழன்றுகொண்டிருந்தது. திடீரென ஒருநாள், சங்கீதா பாடசாலையிலிருந்து நேரத்தோடு வீடு திரும்பியிருந்தாள். அவளது முகம் பேயறைந்தது மாதிரியிருந்தது. அப்பாவும் அம்மாவும் அவளைப்பார்த்து அதிர்ந்து போனார்கள். சங்கீதா பதற்றத்துடன் சொன்னாள்

"அப்பா...! அவருக்கு மோட்டார் சைக்கிள் *அக்சிடென்றாம்*. முழங்காலுக்குக் கீழே கால் முறிஞ்சுபோய்ச்சுதாம். யாழ் *ஹொஸ்பிற்றலில அட்மிட்* பண்ணியிருக்கினமாம்"

"உனக்கு எப்படித் தெரியும் யார் அறிவிச்சது?" அப்பா அவசரமாகக் கேட்டார். என்னோட முந்திப் படிப்பிச்ச ரீச்சர்தான் ஃபோனில எடுத்துச் சொன்னவா"

கணவனைப் பார்க்க அவளைப் புறப்பட்டு வரும்படி கேட்பதா...விடுவதா.. என தாயும் தந்தையும் தடுமாறிய வேளை, அவளே சொன்னாள்

"அப்பா முதல்ல நீங்கள் போய் நேரில பாத்திட்டு வாங்கோ"

அதோட... சிறிது தயங்கிவிட்டு "அவருடைய மனநிலை எப்படியிருக்கு என்பதையும் கவனிச்சுக்கொண்டு வாங்கோ"

மறுபேச்சின்றி அவரும் உடனே புறப்பட்டுவிட்டார். மருமகனது உடல்நிலை பற்றிய பதற்றம் அவரை ஆட்கொண்டிருந்தது. "கடவுளே! தை பிறந் தால் வழிபிறக்கும் என்று சொல்லுவார்கள். என்னுடைய மகளுடைய வாழ்விலும் விடியல் தென்படும் அறிகுறி தெரிகிறது. நீ துணை நின்று இரு துருவங்களாய் தோற்றமளிக்கும் அவர்களை இணைத்து வைத்துவிடு!"

மனமுருகிப் பிரார்த்தித்த அவர், பஸ்தரிப்பை நோக்கி வீதியில் இறங்கி நடந்தார். இருண்டுபோய்க்கிடந்த அவர் மனதில் ஓர் பிரகாசம்.

மலரன்னை

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 15

## ஆரோக்கியமான நிறை உணவுப்பழக்கம் (balanced diet) என்றால் என்ன?

- எமது அன்றாட உணவில் மாப்பொருள், புரதம், கொழுப்பு, நார்ச்சத்துக்கள், விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்கள் அடங்கியுள்ளன. இவற்றை சரியான அளவுகளிலும் நல்ல தரமானதுமாக உண்பதே ஆரோக்கியமான உணவுப்பழக்கமாகும்.

- உதாரணமாக எமது உணவில் மாப்பொருள் 50-55% மும் புரதம் 15-20% மும் கொழுப்பு 30% மும் இருக்க வேண்டும். அத்துடன் நார்ச்சத்துக்கள் விற்றமின்கள் மற்றும் கனிப்புக்கள் என்பனவும் தேவையான அளவுகளில் அன்றாடம் உள்ளடக்கப்பட வேண்டும்.

- மாப்பொருளானது எளிய வெல்லங்களாக இல்லாமல் (உதாரணம் குளுக்கோஸ்) சிக்கலான சேர்வைகளாக இருக்க வேண்டும். எனவே தவிடு நீக்காத புழுங்கல் அரிசி, தவிட்டுப்பாண், தவிடு நீக்காத அரிசி மா, குரக்கன் மா, ஆட்டாமா போன்றவற்றால் தயாரிக்கப்பட்ட உணவே சிறந்ததாகும்.

குளுக்கோஸ், தேன், பழப்பாகு (jam), அதிகம் இனிப்புள்ள உணவுகள் மற்றும் சொக்லட் போன்ற மாப்பொருள் அதிகமுள்ள உணவு வகைகளை இயன்றவரை குறைத்துக் கொள்வது நல்லது. (முற்றாக உணவிலிருந்து நீக்கத் தேவையில்லை)

- முட்டை, வெண்கரு, மீன், அவரை, சோயா, பருப்பு, நெத்தலிக் கருவாடு, இறைச்சி வகைகள், கொழுப்பு நீக்கிய பால் என்பன அதிகளவில் புரதச்சத்து நிறைந்த உணவாகும்.

இவ்வாறான உணவுகளை உடற்பருமன் குறைந்தவர்கள் அதிகமான அளவில் உட்கொள்ளலாம். மற்றவர்கள் புரதமானது உணவில் 0.8g/kg உடல் நிறைக்கு என்னும் அளவில் நாளாந்தம் உட்கொள்வது சிறந்தது.

- கட்டமைப்பின் அடிப்படையில் கொழுப்பானது நிரம்பல் அடைந்த கொழுப்பு (saturated fat) நிரம்பலடையாத கொழுப்பு (unsaturated fat) என இரு வகைகளில் காணப்படுகின்றது.

- நிரம்பலடையாத கொழுப்பே உடலுக்கு உகந்ததாகும். சோயா அவரை நல்லெண்ணெய் கடல் மீன்களில் காணப்படும் கொழுப்பு ஒலிவ் எண்ணெய், சூரியகாந்தி எணணெய், சோயா எண்ணெய், கோர்ண் எண்ணெய் போன்றவை நிரம்பலடையாத கொழுப்பை கொண்டிருப்பதால் அவை உடலுக்கு நன்மை தரும்.

- ஆனால் நண்டு, கணவாய், மிருக இறைச்சி வகைகள், பட்டர் (butter), சீஸ் (cheese), நெய் போன்ற உணவுகளில் கொலஸ்ரோல் அதிகளவில் காணப்படுவதால் இவ்வுணவுகளை குறைத்து கொள்வது உசிதமாகும். இறைச்சி வகைகளில் தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சியானது கொலஸ்ரோல் குறைந்த உணவாகும்.

- பச்சை இலை வகைகள், மரக்கறிகள் மற்றும் பழங்களில் விற்றமின்களும், கனியுப்புக்களும், நார்ச்சத்தும் அடங்கியிருப்பதால் இவ் உணவுகள் தினமும் அதிகளவில் உண்ணப்படலாம். பழச்சாற்றை விட முழுமையான பழங்களே சிறந்ததாகும்.

இவ் உணவுகளில் காணப்படும் நார்ச்சத்தானது ஒருவரின் உடலிலுள்ள குளுக்கோசின் அளவு கொலஸ்ரோல் போன்றவற்றை கட்டுப்படுத்துவதுடன் மலச்சிக்கலையும் குறைக்க உதவும்.

நார்ச்சத்து அதிகமுள்ள உணவுகளாவன: வாழைப்பழம், அன்னாசி, மாம்பழம், விளாம் பழம், மாதுளம்பழம், சோளன் பருப்பு, கௌபி, தினை அவரைக்காய் மற்றும் எல்லா விதமான மரக்கறிகள்.

- பன்றி இறைச்சி, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி போன்றவை அதிகளவில் கொலஸ்ரோல் நிறைந்த உணவுகளாகும்.

- உணவில்உப்பின்அளவையும்இயன்றவரை குறைப்பது நல்லது. சமையலுக்கு தேவையான உப்பையும் குறைந்தளவில் பாவிப்பது நல்லது. அத்துடன் உணவின் போது மேலதிகமாக உப்பு சேர்ப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஊறுகாய் சிப்ஸ் (chips)மிக்சர், பக்கற்றில் அடைக்கப்பட்ட உணவுகள், தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுகள் என்பன அதிகளவில் உப்பை கொண்டுள்ளன.

அதிகளவாக உப்பை உணவில் சேர்க்கும் போது உயர் குருதி அமுக்கம், இதய நோய்கள் மற்றும் சிறுநீரக நோய்கள் என்பன ஏற்படக் கூடும்.

- சர்வதேச அளவில் உணவுக் கூம்பக முறையானது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். உணவுக் கூம்பகத்தில் நாம் உண்ணும் உணவில் அடங்கியிருக்க வேண்டிய உணவுகளும் அவை எந்த அளவில் எடுக்கப்பட வேண்டும் என்பவை பற்றிய விபரங்களும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

- இலகுவில் கூறுமிடத்து ஒரு வேளை உண்ணும் உணவின் போது உணவுத் தட்டில் கால் வாசி சோறும், கால் வாசி மரக்கறியும், கால்வாசியில் புரதம் நிறைந்த உணவும், மீதிக் கால்வாசியில் பழங்களும் அடங்கியிருக்க வேண்டும்.

உணவு அருந்திய பின் பழங்களையும் சேர்த்துக் கொள்ளலாம். ஒருவர் மரக்கறிகளை மட்டும் உட்கொள்பவராயின் உணவின் பின் பால் அல்லது தயிர் போன்றவற்றை உட்கொள்வது அவசியமாகும்.

**Dr.பி.மயூரதன்**

*சிந்தனைக்கு...*

### இரட்டிப்பு பயம்


பயப்பட வேண்டிய விடயங்களுக்கு பயம் இன்றி இருந்து கொள்வது. பயம் ஆபத்தானது என்றும் அதே சமயம் பயம் கொள்ளத் தேவையற்ற விடயங்களுக்கு பயந்துகொண்டே இருப்பதும் பயம் என்றும் நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நாம் அன்றாட வாழ்வில் பயம் கொள்ளத் தேவையற்ற பலவற்றிற்கு பயந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பால் குடிக்க பயம், தயிர் சாப்பிடப்பயம், தவசி முருங்கை சாப்பிடப்பயம், இரவிலே இலைவகை உள்ள உணவுகள் உண்ண பயம், சில உயிர்க்காப்பு மருந்துகளை உள்ளெடுக்க பயம், இறால் சாப்பிடப்பயம்', அகத்தி மரத்தை வீட்டில் வளர்க்க பயம், முட்டை சாப்பிட பயம், முட்டு வருத்தத்தால் கஷ்டப்படினும் 'பம்' பாவிக்க பயம் இவ்வாறாக பயப்படத்தேவை அற்ற பலவற்றிக்கு நாம் பயந்து பயந்து வாழ்வதன் காரணம் என்ன? அதே வேளை பயப்பட வேண்டிய பலவற்றிக்கு பயம் இன்றி வாழ்ந்து பல ஆபத்துக்களை தேடிக் கொள்கிறோமே? இதனை எவ்வாறு விளங்கிக் கொள்வது?

உடல் பருத்திருந்தும் உல்லாசமாய் உலவி வருகிறோம். சந்தோசமாக சோடா குடிக்கிறோம். எதுவித பயமுமின்றி உடற்பயிற்சி செய்யாதிருக்கிறோம். உடற்பயிற்சி செய்ய நேரமில்லை என்று விளக்கமும் கொடுக்கின்றோம். தினமும் தொலைக்காட்சிக்கு முன்னால் மணிக்கணக்காக உட்கார்ந்து இருந்து மகிழ்கிறோம்.

இரசாயனம் சேர்க்கப்பட்ட மென்பானங்களை அருந்துவதில் பெருமை கொள்கிறோம். சினிமா கதாநாயகர்கள் பாணியில் குடித்து புகைத்து கும்மாளம் அடித்து கதாநாயகர்களாய் உலா வருகிறோம். வாகனம் ஓடுவதில் "திறமையை" காட்ட முயல்கிறோம். இவ்வாறாக பயம் கொள்ள வேண்டிய பல விடயங்களை பயமின்றிச் செய்யத் துணிந்ததன் காரணம் என்ன? இந்த இரட்டிப்பு ஆபத்திலிருந்து மீள்வது எப்படி?

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**




மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.